மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 13 சனிக்கிழமை (27- 06 - 1998) SANJEAVY Regenerative Tamil Weekly சிகரம்:04


# 'எம்.ஜ.24'ஹெலி நேற்று வீழ்ந்து நொறுங்கியது!

## வவுனியாவில் சம்பவம் விபத்து என்கிறது அரசு

கொழும்பு, ஜூன் 27

ஸ்ரீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான எம்.ஐ 24ரக ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்றுக் காலை 8.30 மணியளவில் வவுனியா விமானத் தளத்துக்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் வீழ்ந்து நொறுங்கி, தீப்பிடித்து அழிந்தது. அதில் பயணம் செய்த நான்கு விமானப் படையினர் உயிரிழந்தனர்.

விபத்துக் காரணமாகவே இந்த ஹெலிக்கொப்டர் வீழ்ந்து நொறுங்கியதாக இராணுவச் செய்திகள் தொடர்பான தணிக்கை அதிகாரியினால் அனுமதிக்கப்பட்ட தகவல்கள் தெரிவித்தன.

வன்னியில் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் படையினருக்கு உதவும் வகையில் மற்றொரு ஹெலிக்கொப்டருடன் சேவையில் ஈடுபட்டிருந்த சமயமே வவுனியா சமனங்குளம் பகுதியில் இந்த ஹெலி வீழ்ந்து நொருங்கியது.

ஹெலியின் விமானி கே. எல்.பி. கொடித்துவக்கு, உதவி விமானி ஆதிக், தலைமை 'கன்னர்' டபிள்யூ என். எஸ். விதாரன,

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணிக் குழு வருகை

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். நகரின் புதிய மேயராக சட்டத்தரணி பொன். சிவபாலன் பதவியேற்பதை ஒட்டிய நிகழ்ச்சிக்காக தமிழர் விடுதலைக் கூட்டணிக்குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

புதிய மேயராகப் பதவியேற்கவிருக்கும் பொ. சிவபாலன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட துணைத்தலைவர் வீ. ஆனந்தசங்கரி உட்பட மாநகர சபையின் புதிய உறுப்பினர்களும் யாழ். வந்துள்ளனர். (உ-3)

## நல்லூரில் நேற்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் —

கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான முடிவுகளை அரசு வெளியிட வேண்டும் என்று கோரியும்—

முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில் அப்பாவி மக்கள் மீது விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்டதைக் கண்டித்தும்—

மனித அநீதிகளுக்கு எதிரான போராட்ட அமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் நேற்று மனிதஉரிமைகள் தினத்தன்று உணர்வு பூர்வமாக இடம்பெற்றது.

தமிழ்க்கட்சிகளும், பொது அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஸ்தாபித்துள்ள இந்த அமைப்பின் முதலாவது நடவடிக்கையாக நேற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மணிகள் ஒலிப்பு

கொழும்பு, ஜூன் 27

மனித உரிமை தினமான நேற்று யாழ். மாவட்டத்தில் ஆலயங்கள், தேவாலயங்களில் மணி ஒலி எழுப்பப்பட்டது.

கடந்த காலங்களில் அநியாயமாக மரணமடைந்தவர்களின் ஆத்மசாந்திக்காகவும், பாதிக்கப்பட்டவர்களின் நலன்களுக்காகவும் ஈ.பி.டி.பி. அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு நேற்று நண்பகல் 12 மணி முதல் 10 நிமிடம் இடம் பெற்றது. (உ-3)

## 557 தமிழ் கைதிகள் உண்ணாவிரதம்

கொழும்பு, ஜூன் 27

மனித உரிமை தினமான நேற்று களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 557 தமிழ்க் கைதிகள் ஒருநாள் உண்ணாவிர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய் பலி

மட்டக்களப்பு, ஜூன் 27

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதி கொம்மாதுறையில் நேற்றுக் காலை இடம்பெற்ற சம்பவமொன்றில ஓர் இராணுவ வீரர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தில் அவ்வழியால் சென்ற பொதுமகனொருவரும் உயிரிழந்துள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிக்கு ஒருவர் பலி!

கொழும்பு, ஜூன் 27

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறு மூலையில் நேற்றுக் காலை வீதியில் சென்ற ஒருவர் கிளைமோர் வெடியில் சிக்கியதில் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

எஸ். யோகநாதன் (வயது 37) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (உ-3)

ஐ. நா. ஏற்பாட்டில்

## வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். மாவட்டத்தில் கண்ணி வெடிகளை அகற்றும் பணியை மேற்கொள்ளும் ஐ நா. அபிவிருத்தித் திட்டத்தின் முதல் நடவடிக்கையாக நேற்று யாழ். கச்சேரி வடக்குப் பகுதியில் புதைந்திருந்த 120 மி. மீ. ஷெல் ஒன்று செயலிழக்கச் செய்யப்பட்டது.

கச்சேரி— நல்லூர் வீதியில் உள்ள ஓரிடத்தில் புதைந்திருந்த இந்தப் பெரிய ஷெல் குறித்து அறிவிக்கப்பட்டதை அடுத்து ஐ. நா. அபிவிருத்தித் திட்ட நிபுணர் டேவிட் டெய்லர் அந்த இடத்துக்குச் சென்று இரா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அநுரா - சந்திரிகா நேற்றிரவு சந்திப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், அவரது தம்பியும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரா பண்டாரநாயக்கவுக்கும் இடையில் நேற்றிரவு சந்திப்பு இடம்பெறவிருந்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மூன்றாம் தரப்பான ஒரு பிரபல வர்த்தகர் ஒருவரின் ஏற்பாட்டில், இச்சந்திப்பு இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சந்திப்புத் தொடர்பான மேலதிக விவரங்கள் நேற்று நள்ளிரவு வரை கிடைக்கவில்லை. (உ-3)

## மாகாணசபைத் தேர்தல் திட்டமிட்டபடி ஓகஸ்டில்?

கொழும்பு, ஜூன் 27

முன்னர் ஒத்திவைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட தெற்கின் மாகாண சபைகளுக்கான தேர்தல்களைத் திட்டமிட்டபடி ஓகஸ்டிலேயே நடத்தி முடிப்பது என அமைச்சரவை நேற்று இரவு முடிவு செய்ததாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் விசேடமாக நேற்று மாலை கூடிய அமைச்சரவை விரிவாக ஆராய்ந்து இந்த முடிவை எடுத்ததாகக் கூறப்பட்டது.

இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிக்கை இன்று அரசு வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாண சபைத் தேர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸ்பத்திரியில் மிதிவெடி

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறைக்கு அண்மையில் நேற்று மாலை மிதி வெடி ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து படைத்தரப்புக்கு அறிவிக்கப்பட்டது. (உ-129)



நேற்றைய உண்ணாவிரதத்தில் பங்குபற்றியோரில் ஒரு தொகுதியினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# மரண அறிவித்தல்கள்

சகோதரி

## வசந்தி பாலச்சந்திரன்

சகோதரி வசந்தி பாலச்சந்திரன் வியாழன் (25-6-98) அன்று மகிமைக்குள் பிரவேசித்து விட்டார். அன்னாரின் அடக்க ஆராதனை, சனிக்கிழமை மாலை 3 மணிக்கு 111, கண்டிறோட், சுண்டுக்குளி, இலங்கை பெந்தெகொஸ்தே சபைசாலையில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல், நல்லடக்கத்திற்காக கொட்டடிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:-
பாஸ்டர் அருமைநாயகம்

111, கண்டிவீதி.
சுண்டுக்குளி.

(57153)

## சங்கரப்பிள்ளை ஆறுமுகம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சங்கரப்பிள்ளை ஆறுமுகம் 26-06-1998 வெள்ளிக்கிழமை அதிகாலை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் மீனாம்பாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தம்பையா அன்னம்மா ஆகியோரின் சகோதரனும், காலஞ் சென்றவர்களான இரத்தினம், சிதம்பரேஸ்வரி மற்றும் தங்கேஸ்வரி, கைலாயநாதன், மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், நடராசா (கண்டி-கலஹா வீதி, அபிவிருத்தி அதிகாரசபை தொழில்நுட்பவியலாளர்), சகுந்தலாதேவி குலசிங்கம் (நீர்ப்பாசன இலாகா), கதிர்காமசேகரம் (வீதி அபிவிருத்தித் திணைக்களம் மன்னார்), சாரதாதேவி, விக்னேஸ்வரன், இராஜலட்சுமி (கனடா) இந்திரலீலா (சுவிஸ்), கிருஷ்ணலீலா (கனடா) பிரேமலதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், மகேஸ்வரி, சண்முகநாதன் சோமேஸ்வரி, கலைவாணி, ஜெயபாலன், விஜயராணி, கதிர்காமநாதன், மனோகரன், ஜெயராஜா, பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் தாட்சாயினி, கஜாயினி, சுதர்சினி, நிரஞ்சினி, பிரதீபன், கார்த்தீபன், தர்மிகா, வர்மிலா, றஜந்தன், பிந்துஜா, கௌசிகா, சதீஸ்குமார், அர்ச்சனா, யர்சிகன், கோபிகா, விஷ்ணுகா, யதூசன், யாழினி, பேபி, மதுரா, பைரவி, சுகிர்தா, அஜந்தன் ஆரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 27 – 06 – 1998 சனிக்கிழமை முற்பகல் பத்து மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திருப்பரங்குன்றம்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்
நடராஜா
(மகன்)

(57163)

## ஆறுமுகம் இரத்தினம்

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இரத்தினம் 26-6-98இல் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் சரசுவதியின் அன்புக் கணவரும், தவநேசரின் (சுழிபுரம் தபால் கந்தோர்) அன்புத் தகப்பனாரும், நிர்மலாதேவியின் அன்பு மாமனாரும், சங்கரப்பிள்ளையின் (இலக்குமிஸ்ரோர்ஸ், சங்கானை) சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-6-98) சனி காலை 10-00 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை விளாவெளி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. தவநேசர்
(மகன்)
(தபால் கந்தோர் சுழிபுரம்)

இலக்குமி வாசா,
ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை,

(57177)

## வினாசித்தம்பி சுந்தரம்

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட வினாசித்தம்பி சுந்தரம் காலமாகிவிட்டார்.

இவர் திருமதி சுந்தரம் கண்ணைப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி இரத்தினம் அன்னபூரணம், திருமதி சிவசுப்பிரமணியம் சிவகாமிப்பிள்ளை, திருமதி பத்மநாதன் தனலட்சுமி, திருமதி விசுவலிங்கம் சிவபாக்கியம் லயன் வீ. எஸ். துரைராஜா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. இரத்தினம், திரு. சிவசுப்பிரமணியம், திரு. பத்மநாதன், காலஞ்சென்ற விசுவலிங்கம், திருமதி இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் மாமனாரும், சரசாதேவி (கனடா), மனோகரன் (சுவிஸ்), ஜெயந்தி (சுவிஸ்), சபேசன் (சுவிஸ்), ஜெயக்குமார், தர்மகோகுலம், தர்மராசா (லெபனான்), தவேந்திரன் (லெபனான்), சுகராஜ் நயனவதி (ஆசிரியை – நாவற்குழி ம. வி.), ஜெயலட்சுமி (ஜேர்மனி), கலானந்தன் (கனடா), பவானந்தன் (கனடா), நிலோஜினி (கனடா), தயானந்தன் (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி நுணாவில் குச்சப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. பத்மநாதன்
(மருமகன்)

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

(57167)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம் ஜூன் 27

இருபாலைகட்டைப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன்ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் விழா நடைபெறும். (—8)

## ஊக்குவிப்பு கடன்

யாழ்ப்பாணம், ஜூன் 27

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் கடந்த பெப்ரவரியில் நடத்தப்பட்ட மகளிர் தொழில் அபிவிருத்தி பயிற்சியில் கலந்து கொண்ட 59 இளம் யுவதிகளுக்குச் சுய தொழில் ஊக்குவிப்புக் கடனாக 50 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படவுள்ளது.

சுரதிர கடன் திட்டத்தின் கீழ் இலங்கை வங்கி இக் கடனுதவியை வழங்கவுள்ளது.

அடுத்த மாத நடுப் பகுதியில் இக்கடனுதவி இவர்களுக்கு வழங்கப்படும் என்று கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தோற்பொருள் உற்பத்தி, உணவு பதனிடுதல், மணிக்கூடு திருத்துதல் போன்ற சுய தொழில் திட்டங்களை இவர்கள் மேற்கொள்ளவுள்ளன

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம் ஜூன் 27

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் பொது அறிவுப் பூங்கா நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிறு காலை 9.30 மணிக்கு யாழ். சிற்றி ஹோலில் நடைபெறவிருக்கிறது. (3)


லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
சனி, ஞாயிறு மட்டும்
கமலஹாசன் – ஸ்ரீதேவி
ஸ்ரீபிரியா, மனோரமா
நடித்த
வாழ்வே மாயம்
மனதை உருக்கும்
குடும்பச் சித்திரம்.
ரமேஸ் அரவிந்,
சரத்குமார், ஹீரா
நடித்த
வசந்தகாலப்பறவை
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(57176)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
3 ஆவது வெற்றிவாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
பாட்ஷா
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3917)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்,
அகல வெண் திரையில்
27-06-98 சனி
எம். ஜி. ஆர்.
சாவித்திரி, வீரப்பா
நடித்த
மகாதேவி
நேரம்:- 10-30, 2-30
(57171)


## இளைஞர் சேவை மன்றக் குழுயாழ். வரும்

யாழ்ப்பாணம் ஜூன் 27

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற நிர்வாக இயக்குநர் எஸ். ஏக்கநாயக்கா மாகாண இயக்குநர் எம். பேரானந்தம் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்று விரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் பொருட்டே இவர்கள் இங்கு விஜயம் செய்யஇருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.


பிரதிக்கு முந்துங்கள்!
வார – மாத இந்திய சஞ்சிகைகள்
விற்பனையாகின்றன.
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(57178)

யாழ் — கொழும்பு விமான சேவையில் பயணிக்கும் வடமராட்சிப் பயணிகளுக்கு துரித சேவையை வழங்க
"மொனறா ஏயர்" நிறுவனத்தின்
பருத்தித்துறைக் கிளை
இன்று காலை 10 மணிக்கு பருத்தித்துறை பிரதான வீதியில் இலங்கை வங்கிக்கு அருகில் உள்ள கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.
இக்கிளையின் மூலம் தங்களது விமானப் பயணச் சீட்டுக்களை முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம் என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
"மொனறா ஏயர்"
ஏக முகவர்கள்:
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
22, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/4130)


## கண்டீர்களா?

பொமனேரியன் ஆண் நாய்

பிறவுண் நிறமுடைய (வயது 11) இந்த நாயை **16—6—98** முதல் காணவில்லை. கண்டவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரிக்கு அறியத் தரவும். தகவல் தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும்.

க. விஜயரத்தினம்
86/6, சம்பியன் லேன், கொக்குவில்.

(சி/4128)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குருசாமி நாகம்மா

ஊர்காவற்றுறை புளியங்கூடலை சேர்ந்த திருமதி குருசாமி நாகம்மா 26-06-98 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா குருசாமி (சமாதான நீதிவான், முன்னாள் உறுப்பினர், நாரந்தனை கிராமசபை) அவர்களின் அன்பு மனைவியும், கணேசலிங்கம் (செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேசசபை), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), திருமதி குணசிங்கம் கலைமகள் ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலா, லீலாவதி, காலஞ்சென்ற பேரம்பலம், குணசிங்கம் (வேலணை, தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் மாநகரசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கு. கணேசலிங்கம்
(மகன்)

புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.

(57173)

## முருகப்பர் வைரவப்பிள்ளை

புலோலி தெற்கு சாரையடியைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகப்பர் வைரவப்பிள்ளை 26-6-98 அன்று காலமாகிவிட்டார்.

இவர் பார்பதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், யோகநாதன் (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்) மற்றும் காலஞ்சென்ற த. அருட்பெருந்தேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமாரி (ஜேர்மனி), பத்மாதேவி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், மயூரி, மைதிலி, லோஜினி, குகேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27-06-98) இன்று சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 10 மணியளவில் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்;
வை. பார்பதிப்பிள்ளை
(மனைவி)

(57170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 175 ஆவது ஆண்டு விழாச் சிறப்பு மலர்

## 1823 - 1998

## யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வாழ்த்து



யாழ்ப்பாணக் கல்லூரிக்கு இவ்வருடம் 175-வது வயது பூர்த்தியானது. வட்டுக்கோட்டையில் இந்த வித்தியா தீபத்தை ஏற்றிவைத்த டானியல் பூவர் என்னும் ஞானவள்ளலின் பிறந்ததினம் ஜூன் மாதம் 27ஆம் திகதியாகும். எனவே இப்புனிதநாளில் நமது கல்லூரியின் பிறப்பைக் கொண்டாடி மகிழ்கின்றோம்.

கடந்த 175 வருட வரலாற்றைத் திரும்பிப் பார்க்கின்றோம். ஆனந்தம், பெருமூச்சு, வெற்றி, ஏமாற்றம், முன்னேற்றம், சீர்குலைவு எல்லாவற்றையும் அனுபவித்து விட்டோம். இக்கல்லூரி வளாகத்தில் வாழ்ந்த மகான்களை, அரசியல் தலைவர்களை, விஞ்ஞான மேதைகளை, பதிப்பாசிரியர்களை, புலவர்களை எண்ணிப் புளகாங்கிதமடைகின்றோம். நமது பயணம் தொடர்கின்றது.

அமெரிக்காவிலிருந்து ஆறாய்ப் பாய்ந்த அன்பு வெள்ளத்தினால் இக்கலைக்கோவில் வட்டுக்கோட்டையில் உருவெடுத்தது. 1843 இல் இதனைத் தரிசித்த எமர்ஸன் ரெனன்ற் என்னும் பிரதம செயலர் இதனைக் ''கல்வி நிறுவனங்களின் தன்னிகரில்லாத் தலைவி'' என்று குறிப்பிட்டார். யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தில் இக் கல்லூரிக்கு ஒரு சிறப்பான இடமுண்டு.

யாழ்ப்பாணத்திற்குரிய இலக்கிய மேம்பாட்டு ஊற்றுக்களுடன் அமெரிக்காவில் தொடங்கி வட்டுக்கோட்டையில் கொப்புளித்துப்பாய்ந்த சுதேச மயமாக்கப்பட்ட ஒரு பாரம்பரியமும் கொழும்பில் ஊற்றெடுத்து பேராதனையில் ஓடிய இலங்கை முழுவதற்கும் பொதுவான ஒரு தேசிய ஆராய்ச்சிப் பாரம்பரியமும் இணைந்த பொழுதுதரன் யாழ்ப்பாணமே பல்கலைக்கழகமாயிற்று என்கிறார் பேராசிரியர் கா.சிவத்தம்பி.

1823 இல் மேற்றிசை விஞ்ஞானத்தின் கதிர்கள் யாழ்ப்பாணத்தில் வீசவேண்டுமென்று இந்த கலாபீடத்தை ஆரம்பித்து வைத்த மூத்த முதல்வர்களையும், பலவித இடர்களின் மத்தியில் இதனைக் கட்டிக்காத்து வளர்த்த அமெரிக்க தொண்டர்களையும் நினைத்து இறைவனைப் போற்றுவோமாக. இவர்கள் சிலருடைய சிறப்பும் தியாகமும் போற்றற்குரியதாகும். மைத்துனர் வாசிங்டன் வெள்ளை மாளிகையில் ஜனாதிபதியாக வீற்றிருக்க வட்டுக்கோட்டையில் அதிபர் மனையில் ஆடம்பரமின்றி வாழ்ந்தவர் ஈ.பி ஹேஸ்ரிங்ஸ், ஒரு தாழ்த்தப்பட்ட மாணவனுக்கு கல்வி மறுக்கப்படுவதனை விட பாடசாலையை இழுத்து மூடிவிடலாம் என்ற உறுதியுடன் செயற்பட்டவர் ஜோன் பின்னெல் கால்டுவேல். அத்தியட்சருக்கு முன்னர் தமிழ் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது என்று நிறுவிக்காட்டியவர் இரண்டாவது அதிபர் எச். ஆர். ஹோசிங்டன். உலகம் போற்றும் மேதையான எச். ஆர். ஹவுலண்ட் யாழ்ப்பாண மக்களின் கல்வி மேம்பாட்டுக்காகத்தம் வாழ்வை அர்ப்பணித்தவர்.

இவர்கள் மட்டுமல்ல இவர்களுடைய மாணவிமார் ஆற்றிய சேவைகளும் விதந்து போற்றற்குரியன. யாழ்ப்பாணக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபரான ஜோன் பிக்னலின் மகனாகிய ஜோன் பிக்னல் (ஜூனியர்) இவ் விழாவில்

(ஆறாம் பக்கம் பார்க்க)

## தனித்துவம் வாய்ந்த யாழ்ப்பாணக் கல்லூரி

யாழ்ப்பாணக் கல்லூரி நிறுவப்பட்டு நூற்றிஎழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவுறுவதை நினைக்கும் பொழுது எனது நெஞ்சம் நிறைகின்றது. ஈழநாட்டில் சிறப்பாக யாழ்ப்பாணத்தின் கல்விப்பாரம்பரியத்துடன் ஒன்றிணைந்துயாழ்ப்பாணக்கல்லூரி சாதித்த சாதனைகளை எண்ணிப்பார்க்கின்றேன். என் இதயம் நிறைகின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் கல்வி, கலை, இலக்கியம், சமயம் என்ற இன்ன பிற துறைகளிலே தனித்துவத்துடன் செயற்பட்டுத் தனக்கென ஒரு தனியான இடத்தைப் பிடித்துக் கொண்டது யாழ்ப்பாணக் கல்லூரி. உலகின் மூலைமுடுக்குகளெல்லாம் இக்கல்லூரியின் மாணவர்கள் புகழ்பூத்த பேரறிஞர்களாகத் திகழ்கின்றார்கள். நமக்கும் நமது நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் இம்மாணவர்களை உருவாக்கிய இக்கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி தருவதாகவே அமையும்.

தன்னலமற்ற சேவையினாலும், அயராத உழைப்பினாலும் அர்ப்பணிப்புச் சிந்தையுடன் இந்த நாட்டின் கல்விப்பயிருக்கு வரம்புகட்டி நீர்ப்பாய்ச்சி நிறைசேவை ஆற்றிய மிஷனரிமாரை இந்த நன்னாளிலே நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

Miss C.V. SELLIAH
PRINCIPAL,
UDUVIL GIRLS, COLLEGE,
UDUVIL, CHUNNAKAM.

(சி/4107)

## குருமாரை நினைவு கூருகின்றோம்

யாழ்ப்பாணக் கல்லூரி 175 ஆம் ஆண்டு நிறைவு விழாவைக்கண்டு அகம் மகிழ்ந்து பெரும்மகிழ்ச்சியடைவதில் நானும் விவசாய நிறுவனமும் பூரித்து நிற்கின்றோம். யாழ்ப்பாணக் கல்லூரியின் இந்த நீண்ட கால வளர்ச்சியானது குடாநாட்டு மக்களின் கல்வி அறிவுடன் பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ளதை நாம் அறிவோம்.

ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து வந்து கல்விப் பணியை ஆரம்பித்து வைத்த அன்றைய அமெரிக்கமிஷன் பெரியார்களை இச்சாரத்தில் நினைவு கூரக் கடமைப் பட்டுள்ளோம். அவர்கள் ஆரம்பித்து வைத்த பணியானது ஆலவிருட்சமாக வளர்ந்து இலங்கையில் மட்டுமல்ல உலகு முழுவதிலும் சேவையாற்றக் கூடிய நிபுணர்கள், அறிவியலாளர்கள், அறிஞர்கள், சமயப் பெரியார்கள் என ஆயிரக் கணக்கானவர்களைத் தந்து இன்றும் தமதுபணியைஇடையறாது செய்து தலை நிமிர்ந்து யாழ்ப்பாணக் கல்லூரி நிற்கின்றது.

இருபத்தொராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விஞ்ஞான வளர்ச்சி மனிதனின் சிந்தனையைப் பல்வேறு துறைகளில் அக்கறையையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் அதேவேளை பண்பாட்டுணர்வும் மொழி ஆர்வமும் ஏற்படும் வகையில் யாழ்ப்பாணக் கல்லூரி நிறைவு விழாவையொட்டி காலையில் கண்காட்சியும் மாலையில் கலை நிகழ்வுகளையும் நடத்திக் கொண்டிருப்பது குடாநாட்டு மாணவ சமூகத்துக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

த. குகதாசன்
அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி
விவசாய நிறுவனம்
J.C.A.I.
MARUTHANARMADAM

## திருக்குறள் பரிசு

யாழ்ப்பாணக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, சகல மாணவர்களுக்கும், பழைய மாணவர்கள் திருக்குறள் அன்பளிப்புச் செய்வர்.

மலர் அமைப்பு:-
**எஸ். ரமேஷ்**
செய்தியாளர்
வலி. தென்மேற்கு

## From the Principal



Greetings in the name of our Lord and Saviour Jesus Christ.

I deem it honour and a privilege to greet you all on the occasion of the 175 th Anniversary of our Alma-Mater.

I must at the very outset testify publicly that what I am today is due to the mighty influence of my Alma-Mater. Glory be to God! and to the American Board of Foreign Missions!

Jaffna College has pioneered the cause of education in Jaffna for tha past 175 years. It has moulded personalities of high stature who occupy very high positions in Sri Lanka and abroad.

''Excellence'' in education is defined in terms of moulding and equipping a person for a worthy life in the Community. To put it in Rev. Bicknell's term.

''To educate as many as we can,
To educate as well as we can,
To educate as broadly as we can,
To educate as high as we can''

The liberal spirit fostered in this Institution has produced men and women of leadership who have championed the cause of national independent movements, As Tagore says:

''Where the mind is without fear and the head is held high;
Where knowledge is free.
Where the world has not been broken into fragments by narrow wall;
Into that heaven of freedom, my Father, let my country awake''.

Jaffna College has survived the trials and tribulations of recent times. This can only be accounted for the guiding hand of providence that has sustained us and strengthened us with the vision of hope.

''And tho this world with devils filled;
Should threaten to undo us;
We will not fear, for god has willed his truth;
To truimph through us.''

The love, loyalty, gratitude and the words of encouragement by the alumni in Sri Lanka and abroad are a source of inspfration for us, to continue the path that is set before us. As Dr. Bunker says frequently in the words of Socrates ''If you want to go to olympus do all your walking to wards it.''

May this College be a place where all her children shall feel that they the true light see. We love her name, We'll guard her fame, while life and memory last. Our loyalty shall be the same where'er our let be cast.

With God's richest blessings.

G. Rajanayagam.

## Message from the President ALUMNI ASSOCIATION

I have great pleasure in sending this message of greetings and best wishes on the occasion of the One Hundred and Seventy Fifth Anniversary Celebrations of our Alma mater.

Jaffna College has played a very significant role in the academic advancement and has produced eminent men in all walks of life. It was the fist institution in Sri Lanka to provide education at the post secondary and tertiary levels.

I wish the College all success in its future endeavours.

T. Anandaratnam

## மகத்தான சேவை புரியும் யாழ்ப்பாணக் கல்லூரி

கடந்த 175 வருடங்களாக வடமாகாணத்தில் கல்வித் துறையில் காத்திரமான பங்களிப்பினை வழங்கிவரும் யாழ்ப்பாணக்கல்லூரி தனது 175 ஆவது ஆண்டு விழாவினை கொண்டாடிக்கொண்டு இருக்கும் இத்தருணத்தில் நாம் கல்லூரியின் சேவைகளை மறந்திட முடியாது.

மேலும் மேலும் இக் கல்லூரியின் மகத்துவமான சேவைகளை வாழ்த்தி வணங்குகின்றோம்.

கல்லூரி வாழ, வளம்பெற எமது நிறுவனத்தின் சார்பில் மனதார வாழ்த்துகின்றோம்.

Vaddukoddai.

—N.R.G. HOOLE,
Director, JCIT.

## டானியல் புவர் ஞாபகார்த்த தினம் இன்று 27-06-98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச லயன்ஸ் கழகங்கள் மாவட்டம் 3
# LIONS CLUBS INTERNATIONAL DI

லியோ

# லியோ கருத்தரங்

## மாவட்ட லியோ தலைவர்
### லயன் பா. தவபாலன் அவர்களின் ஆசிச்செய்தி


சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306பி இல் பிராந்தியம் எட்டு நாம் சேவை யாற்றும் பிரதேசம் ஆகும். இங்கு 12 லயன்ஸ் கழகங்களின் நிர்வகிப்பில் இயங்கும் 12 லியோக் கழகங்கள், தாய்க்கழகமாகிய லயன்ஸ் கழகங்கள் ஆற்றும் சேவைக்கு ஈடாக தாமும் சேவையாற்றி வருகின்றன.

41 வருடங்களுக்கு முன்பு 1957 ஆம் ஆண்டு பென்சில்வேனியா கிளென்சைட் லயன்ஸ் கழகத்தின் சுறுசுறுப்பான அங்கத்தவராக விளங்கியவராவார். பென்சில்வேனியா அபிங்ரன் உயர் கல்லூரி பேஸ்போல் பயிற்சியாளராகவும் விளங்கினார். இவர் வில்லியம் ஏனஸ்ற் என்ற மற்றுமொரு லயன்ஸ் கழக உறுப்பினருடன் சேர்ந்து 1957 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி ''அபிங்ரன உயர் கல்லூரி லியோ கழகம்'' என்ற உலகின் முதலாவது லியோ கழகத்தை 35 இளைஞர்களை அங்கத்தவராகக் கொண்டு ஆரம்பித்தார்.

1967 இல் 27 லியோ கழகங்களும் பின்னர் 1970 ஒக்ரோபரில் 918 கழகங்கள் 48 சர்வதேச நாடுகளில் ஸ்தாபிதமாகின. அவ்வேளை 24 ஆயிரம் அங்கத்தவர்கள் கொண்ட சர்வதேச கழகமாக வளர்ந்து 1996 ஏப்ரல் 12 ஆம் திகதி 5000 ஆவது லியோ கழகம் மொர்றாக்கோ லியோ கழகம் கொலம்பியாவில் தோற்றம் பெற்றது. 1997 யூன் 30 இல் 138 நாடுகளில் 27 லியோ பெருக்கப்பட்ட (மல்ரிபின்) மாவட்டங்களில், 141 லியோ மாவட்டங்களில் 606 லயன்ஸ் கழக மாவட்டங்களில் 132,875 அங்கத்தவர்களுடன் 5315 லியோ கழகங்கள் பெரும் சேவையாற்றி வருகின்றன. தலைமைத்துவத்தையும், அனுபவத்தையும், சந்தர்ப்பத்தையும் இளைய சமுதாய அங்கத்தவர்களாகிய மாணவர்கள் மத்தியில் அவர்கள் சமூகத்தின் நற்பிரஜைகளாகத் திகழ அவர்களுக்கு போதிப்பதும், அதன்படி செயற்படுத்துவதுமே நாம் தற்போதுமேற் கொண்டுவரும் பணியாகும். எமது பிரதேசம் இளைய தலைமுறையின் சேவை அர்ப்பணிப்பால் உயர வேண்டியுள்ளது அதேவேளை அவர்களிடையே தலைமைத்துவத்தையும் எதிர்காலம் என்ற நம்பிக்கையையும்ஊட்ட வேண்டியுள்ளது.

1997 – 1998 ஆம் ஆண்டின் மாவட்டம் 306 பி இன்மாவட்ட லியோ தலைவர் என்ற வகையில் மாவட்ட ஆளுநர் லயன் கே. தில்லைநாதனால் நியமிக்கப்பட்டபின் இற்றைவரை பிராந்தியம் 8லியோகழகங்களின் அளப்பரிய சேவையைத் தொடர்ந்து ஊக்குவிக்கும் நோக்குடனும், சேவைகளை மதிப்பீடு செய்யும் நோககுடனும், லியோக்களை உற்சாகப்படுத்தும் நோக்குடனும், ஒரு மாவட்ட தலைவர் தனது பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட கடமையைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமென்ற பொறுப்புடனும் செயற்பட்டாரா என்று சீர்தூக்கிப்பார்க்க ஒரு சந்தர்ப்பத்தை வழங்குவதுமே லியோ கருத்தரங்கின் நோக்கமாகும்.

பிராந்தியம் 8 இன் லியோக்கழகங்கள் ஆற்றிவரும் அளப்பரிய சேவை லயன்ஸ் கழகங்கள் ஆற்றிவரும் சேவைக்கு ஈடானது என்ற வகையில் பெருவளர்ச்சி பெற்றுவருவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். விளையாட்டு அறிவியல், ஊடாக சேவையை ஊக்குவிக்கலாம் என்ற எண்ணத்துடன் இவ்வாண்டு லியோ செயற்பாட்டுக்காக வகுக்கப்பட்ட திட்டம் பெருவெற்றியளித்துள்ளதைக் கண்டு இந்நாளில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. பிராந்தியம் 8 லியோக்களின் தலைமைத்துவம் அனுபவம் சந்தர்ப்பம் சேவையூடாகவும், அறிவியல் ஊடாகவும், விளை



யாட்டு ஊடாகவும் வளர்க்கப்பட்டதை இன்றைய லியோக் கருத்தரங்கு பறை சாற்றும்.

கடந்த 3 மாதங்கள் பிராந்தியம் 8இல் 'லியோ' என்ற பெயர் ஓங்கி ஒலித்தது. சகல இளைஞர்களையும் குறிப்பாக மாணவ சமுதாயத்தை நலிவுற்றோருக்குச் சேவையாற்ற எனது தூண்டுதல் காரணமாக லியோகழகங்கள் அமைக்க பாடசாலைகள் ஆவலுறுவதையும், மாணவர்கள் லியோ கழகங்களில் பெருமளவில் இணைய விண்ணப்பம் செய்வதும் எடுத்துக்காட்டுகிறது. கொக்குவில் இந்துக் கல்லூரியில் லியோ கழகம் புதிதாக மீள ஆரம்பிக்கப்பட்டதும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் லியோ கழக அறிமுகக் கூட்டங்கள் நடத்தப்பட்டு அவை விரைவில் ஆரம்பிக்கத தயாராக உள்ளதும் இவ் ஆர்வத்தை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாண்டு லியோக்களுக்கு ஒரு வெற்றிகரமான எழுச்சி ஆண்டாகும். முன்னெப்போதும் இல்லாத அளவு லியோக்கள் மாவட்டத் தலைவராகிய எனக்கு வழங்கிய ஒத்துழைப்பு எனது கடமையை இலகுவாக்கியுள்ளது. மாவட்ட ஆளுநர், பிராந்தியத் தலைவர், வலயத் தலைவர்கள், லயன்ஸ் கழகத் தலைவர்கள், வர்த்தகப் பெருமக்கள் காட்டிய ஆதரவு லியோக்களை எழுச்சியுற வைத்தது எனக்கூறி அவர்களுக்கு நன்றி தெரிவித்து லியோ கழகங்கள் எதிர் காலத்திலும் பல எழுச்சி விழாக்கள் கொண்டாட ஆசி கூறுகிறேன்.

லயன் பா. தவபாலன்
மாவட்ட லியோ தலைவர்,
306 பி.

### பிராந்தியம் 8 இன் லியோ கழகங்களும் தலைவர்களு

| | |
|---|---|
| பரியோவான் கல்லூரி | — லியோ எஸ். நலிந்தா |
| சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | — லியோ எஸ். திவ்யா |
| யாழ். இந்து மகளிர் கல்லூரி | — லியோ எஸ். பிரதீபனா |
| யாழ்ப்பாண வட்டம் | — லியோ சே. பிரதீபன் |
| யாழ். மத்தியகல்லூரி | — லியோ உ. தவபாலன் |
| வேம்படி மகளிர் கல்லூரி | — லியோ ஜே. அ. யூலியட் கிருஷாந்தி |
| கொக்குவில் இந்துக்கல்லூரி | — லியோ எஸ். மயூரதாசன் |
| சாவகச்சேரி தவுன் | — லியோ சி. சசிதரன் |
| மானிப்பாய் பரிஸ் | — லியோ தீ. பிரதீபன் |
| வடமராட்சி வட்டம் | — லியோ தீ. கிருபாகரன் |

### லியோ கருத்தரங்கை ஒட்டி மாவட்ட தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்ட போட்டிகளும் முடிவுகளும்

1. மென்பந்து கிரிக்கெட் சம்பியன் யாழ். மத்திய கல்லூரி யாழ். இந்துக் கல்லூரி
2. உதை பந்தாட்டம் சம்பியன் லியோ வட்டம் யாழ்ப்பாணம், யாழ். மத்திய கல்லூரி.
3. கரப்பந்தாட்டம் சம்பியன் யாழ் மத்திய கல்லூரி.
4. பட்மின்ரன் சம்பியன் பின்னர் அறிவிக்கப்படும்
5. மேசைப்பந்தாட்டம் பெண்கள் சம்பியன் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
6. மேசைப் பந்தாட்டம் ஆண்கள் சம்பியன் லியோ வட்டம் யாழ்ப்பாணம் பரியேவான்கல்லூரி
7. வலைபந்தாட்டம்– சம்பியன் வேம்படிமகளிர் கல்லூரி, சுண்டுக்குளி, மகளிர்கல்லூரி
8. சதுரங்கம் சம்பியன் யாழ் இந்துக்கல்லூரி வேம்படி மகளிர்கல்லூரி.
9. கிளித்தட்டு சம்பியன் யாழ். இந்துமகளிர் கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி.
10. பானட் இசைவாத்தியம் சம்பியன் — உடுவில் மகளிர் கல்லூரி
11. 2000 ஆம் ஆண்டில் தலைமைத்துவம் கட்டுரை பெற்ற தமிழ் 1 வது இடம் லியோ க. சேந்தன் பரி.யோவன் கல்லூரி
2 ஆம் இடம் லியோ த. தவறூபன் யாழ். இந்துக்கல்லூரி.
3ம் இடம் செல்வி சோவியா சண்முகசுந்தரம் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலை

#### ஐந்து ஆறுதற்பரிசுகள்

1. எஸ். சிவராணி யாழ். தொண்டமானாறு வீ.ம. வித்தியாலயம்
2. சி. சிவறூபன் யாழ் மகாஜனா கல்லூரி தெல்லிப்பளை
3. க. ஆர்வலன் யாழ். இந்துககல்லூரி
4. சு. சற்கெங்கன் யாழ் இந்துக்கல்லூரி
5. வே. நந்தகுமார் ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை

#### லயன். றேமன்ட் முத்தையா ஞாபகார்த்த பேச்சுப்போட்டி முடிவுகள்

ஆங்கிலம்

1. ஆம் இடம் தங்கப்பதக்கம் — ஜெ. வித்யானி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
2. ஆம் இடம் வெள்ளிப்பதக்கம் — நா. சுகந்தி, கொக்குவில் இந்துக் கல்லூரி
3. ஆம் இடம் வெண்கலப்பதக்கம் — பி. ஜே. பவிங்ரன், சென்.பற்றிக்ஸ் கல்லூரி

தமிழ்

1ஆம் இடம் தங்கப்பதக்கம் — க. சேந்தன்
2ஆம் இடம் வெள்ளிப்பதக்கம் — த. தவராசா
3ஆம் இடம் வெண்கலப்பதக்கம் — மு. புரந்திரன்

ஒவியப்போட்டி

1 ஆம் இடம் அகல்யா செசராஜா
2 ஆம் இடம் ஷிவதர்சினி 3 ஆம் இடம் ரமேஸ் பிரகாஷ்

போட்டிப் பரீட்சை

1ஆம் இடம் த. மருதராஜன்
2 ஆம்இடம்த. தவறூபன்
3ஆம் இடம் என். குணதர்ஷன்


யாழ். நகர் ஸ்ரான்லி வீதியில் பல்துறை வாணிபத்தில் முன்னோடிகள் நியாயவிலையில் மொத்த சில்லறை வியாபாரத்தில் மக்கள் நம்பிக்கையைப்பெற்றவர்கள்.

ஸ்ரீபா பன்முக வாணிபம்

இல. 104 ஏ, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

தரமான சுபமுகூர்த்த பட்டுப்புடைவைகளின் கைராசியான ஸ்தாபனம் அனைத்து புடைவைகளின் மொத்த சில்லறை வியாபாரிகள்

சீமாட்டி SEEMATI

இல.122, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்

''மானிடம் மலர்ந்தது
தேசம் சிரித்தது தேவை
தரமான தட்டச்சு, கணனி
பிரதிகளை சிறப்பா

கங்கை றே

நாவலர் வீதி,

With Best Compliments

For all requirements of Co-Conut oil Palm oil and other Co-Conut Products
Whole Sale and Retail Distributor

SRI KUMARAN PVT. LTD.

190, GASWORK ST., COLOMBO-11

TEL: 43



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 306பி. பிராந்தியம் 8 லியோ கழகங்கள்

## DISTRICT 306 B - REGION VIII


## விகு LEO SEMINAR



லயன் மெல்வின்ஸ் ஜோன்ஸ்சன்

## பிராந்தியத் தலைவர் (பிராந்தியம்-8) லயன் வே. தில்லைநாதன்

### அவர்களின் ஆசிச் செய்தி



லியோ கழகங்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் லயன்ஸ் கழகங்களின் பணி மிகப்பெரியது. இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதில் லியோ கழகங்கள் பாரிய பொறுப்புகளை வகிக்கின்றன. ''இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்'' சமுதாயத் தேவைகளை இனங்கண்டு லியோக்கள் பணியாற்றி வருகின்றார்கள்.

1957 ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள பெனிசில்வேனியாவில் அறிமுகம் செய்யப்பட்ட லியோ கழகம் இன்று 41 ஆண்டுகளை கடந்து வீறு நடை போட்டு வருகின்றது. இன்று 132,275 லியோ கழக உறுப்பினர்களை 5. 300 கழகங்களில் 134 நாடுகளில் கொண்டு இயங்கி வருகின்றது.

லியோக்களின் தாரக மந்திரமாக

★ தலைமைத்துவம் ★ அனுபவம் ★ சந்தர்ப்பம்

என்பன அமைகின்றன.

இன்றைய எழுச்சி விழாவையும் விழாவைச் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கும்லியோக்களின் மாவட்டத் தலைவர் லயன் தவபாலனையும் வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

## மாவட்ட ஆளுநரின் செய்தி

எட்டாம் பிராந்திய (வட பிராந்தியம்) லியோக்களின் ஆண்டுக் கருத்தரங்கு 1998 ஜூன் மாதம் 27ஆம் திகதி நடைபெறவிருப்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

கருத்தரங்குகள் முன்னைய செயற்பாடுகளின் பலாபலன்களைக் கண்டறியவும், மனிதாபிமான சேவைகளுக்கு உங்களை மீளவும் ஈடுபடுத்திக் கொள்ள உத்வேகம் அளிக்கும் சந்தர்ப்பத்தையும் தருவனவாகும்.

எட்டாம் பிராந்திய லியோ கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியும் சமூக சேவைக்காக இளைஞர்களின் ஆற்றலைப் பெற்று ஒருமுகப்படுத்தவும் லியோக்களின் மாவட்டத் தலைவர் லயன்தவபாலன் எடுத்துள்ள முயற்சிகளுக்காக அவர் பாராட்டப்பட வேண்டியவராவார்.

இவ்வாண்டு தலைமைத்துவ கருத்தரங்குகள், பட்டறைகள் ஆகியவற்றில் பங்கேற்க லியோக்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருந்தது, இது அவர்களது அறிவாற்றலைக் கூட்டவும், எதிர்காலத்தில் தலைமை வகிக்கத் தேவையான அனுபவங்களையும் கொடுத்திருக்கும்.

லியோக்களின் மாவட்டத்தலைவருக்கு வழிகாட்டலும் உதவியும் வழங்கிய பிராந்திய தலைவர் லயன் வி. தில்லைநாதன், ஆலோசகர் லயன் எஸ். எஸ். தங்கராஜா ஆகியோருக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றி சொல்லவும் விழைகிறேன்.

பெருமைக்குரிய எமது கடந்தகாலத்தின் அத்திவாரத்தின் மீது ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க நாம் எல்லோரும் உழைப்போமாக.

லயன் கே தில்லைநாதன்
மாவட்ட ஆளுநர்
சர்வதேச லயன்கள் மாவட்டம்306பி

காலம்: 27 - 06 - 98 சனிக்கிழமை
நேரம்: 10-00 மணி
பதிவு செய்தல்; காலை 8-30 மணி
கருத்தரங்கு ஆரம்பம்: காலை 10-00 மணி
இடம்: யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மண்டபம்

## லியோ வெற்றிக் கேடயங்கள் வழங்கியோர்

சிறந்த லியோ தலைவர் விருது! லயன் எஸ். வி. குணரட்ணம்
சிறந்த லியோ விருது: லயன் ஏ. ஆர். சுரேஸ்
சிறந்த லியோ கழக விருது; லயன் மு. கணேராஜா
சிறந்த லியோஆலோசகர் விருது: லயன் எஸ்.செல்வரட்ணம்
சிறந்த லியோ ஆசிரிய ஆலோசகர் விருது: சுந்தர்சன்
சிறந்த லியோ கழகத்தை நிர்வகிக்கும் பாடசாலை: ப. வரதராஜசிங்கம்
சிறந்த லியோ கழகத்தை நிர்வகிக்கும் கழகம்: செ. சிவதாசன்

## போட்டிகளுக்காண வெற்றிக் கேடயங்களையும், பணப்பரிசுகளையும் வழங்கி உதவியோர்

★ கிரிக்கெற் — லிங்கன் கிறீம் ஹவுஸ்
★ உதைபந்தாட்டம் — அல்டி
★ கரபந்தாட்டம் — மகாநதி புடைவை அகம்
★ வலைப்பந்தாட்டம் — பெட்டா எசென்ஸ் சப்ளையர்ஸ் & பேப்பர் மேர்ச்சன்ட்
★ கிளித்தட்டு — பொஸ்கோ
★ பட்மின்ரன் — மகாலக்ஷமி
★ மேசைப்பந்தாட்டம் — சாரங்கா நகைமாடம்
அருள்முருகன் நகைமாடம்
சிவா நகைமாடம்
★ கட்டுரைப் போட்டி — இ. எஸ். பேரம்பலம் சக நிறுவனம்
★ ஓவியப் போட்டி — எஸ். எம். பெர்னாண்டோ
★ சதுரங்கம் — ராஜா கிறீம் ஹவுஸ்
★ போட்டிப் பரீட்சை — கல்யாணி கிறீம் ஹவுஸ்
★ பாண்ட் வாத்திய இசைப்போட்டி — காவேரிசில்க்ஸ்

## ஆற்றிய சேவைகள் 1997 - 1998

செயற்கைக் கால்கள் வழங்கியமை.

கண் பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கியமை.

வைத்திய சிகிச்சைக்கு நிதி வழங்கியமை.

நீரிழிவு, இலவச மருத்துவ சிகிச்சை, இலவச மருந்து வழங்கியமை,

இலவச புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், நாவல்கள், பாடசாலைப் பைகள், அறிவியல் சஞ்சிகைகள், விளையாட்டு சஞ்சிகைகள் வழங்கியமை.

தமது பிரதேசங்களில் வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில், க. பொ. த உயர்தர மாணவர்களுக்கு இலவசக்கல்விப் போதனை வழங்கியமை.

கல்விசார் உபகரணங்கள் வழங்கியமை.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாதாமாதம் நிதி வழங்கியமை.

சிரமதானம் மூலம் சனசமூகநிலையங்கள், கல்லூரி வளவுகள் துப்புரவாக்கியமை.

கல்லூரித் தோட்டங்களைப் பராமரித்தமை, நீர் இறைத்தமை, பாடசாலை விளையாட்டு மைதானங்களை துப்புரவாக்கி பராமரித்தமை.

வறிய மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கியமை. விளையாட்டு பயிற்சிகளை வழங்கியமை.

வறிய பிள்ளைகளுக்கு துவாய், பற்பசை, சவர்க்காரம், வறியகுடும்பங்களுக்கு சிறு தொழிலுக்கு நிதி உதவி வழங்கியமை கோழி, ஆடு வாங்க நிதி உதவி வழங்கியமை, உடுபுடைவை வழங்கியமை.

பாடசாலைகளுக்கு முன்பாக மாணவர் நலன் கருதி போக்குவரத்து பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொண்டமை.

தங்கள் தங்கள் பாடசாலையில் கல்விபயிலும் மாணவர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தமை.

கழக உறுப்பினர்களிடையேயும்மாணவர்களிடையேயும் காலத்துக்கு காலம் விளையாட்டுப் போட்டிகளை ஒழுங்கு செய்து பரிசில்கள் வழங்கியமை.

சர்வதேச ரீதியில் பிரகடனம் செய்யப்பட்ட முக்கிய தினங்களைக் கொண்டாடி விழிப்புணர்வை ஏற்படுத்தியமை.

பல்வேறு தலைமைத்துவ கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து அத்துறைகளில் அறிவூட்டியமை.

இவை போன்ற பாரிய சமூக சேவைகளை செய்தமையால் லியோக் கழகங்கள் இப்பிராந்தியத்தில் மக்கள் மத்தியில் நன்மதிப்பு பெற்ற சர்தேச இளைஞர் நிறுவனமாக தலை நிமிர்ந்து நிற்கின்றன.


களும்
ஷாந்தி
ரால்
தம்
இந்துக்
யாழ்
ர் கல்
யாழ்ப்
க்குளி.
ல்லூரி.
மகளிர்
ரி
1 வது
மமோ
ம்
புகள்
களிர்
ந்துக்
றிக்ஸ்

ந்தது மாணவம் உயிர்த்தது
நவை உன் சேவை என்றும்''
ணி மூலமான றோணியோ
றப்பாக வழங்குவோர்
றோணியோ
யாழ்ப்பாணம்.
435188

50 வருட அயராத சேவையில்
மோட்டார் சைக்கிள் வகைகள் - ஸ்கூட்டர் வகைகள், ஜெனரேட்டர்கள், நீரிறைக்கும் இயந்திரம்
லுமாலா துவிச்சக்கர வண்டிகள், றேடியோ வகைகள் போன்ற
பல்துறை பொருள்களின் தெரிவுக் களஞ்சியம்
இ. எஸ். பேரம்பலம் சக நிறுவனம்
இல. 124, பழைய சோனக தெரு, கொழும்பு - 12. தொலைபேசி இல. 431515
இல. 50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம. தொலைபேசி இல. 2988

யாழ். நகரில் பல்துறை வியாபாரத்தில்
முன்னணி வகிப்பவர்கள்
நியாய விலையில்
சகல பாவனைப் பொருள்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
வி. எஸ். பி.
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். நகரில் கட்டடப்பொருள்கள் அனைத்தும்
நியாய விலையில் பெற்றுக்கொள்ள
ஒரே ஸ்தாபனம்
ஜெசிபா ஏஜென்ஜி
இல. 132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுப் பாவனைப் பொருள்கள், தளபாடங்கள், மின் விசிறிகள் விற்பனைக்குண்டு. ஐ. செல்லையா, 1048, K K S. வீதி, யாழ்ப்பாணம். (பூநாறி மரச்சந்தி அண்மையில்) (57069)

நல்ல நிலையிலுள்ள பெண்கள் ''ஏசியா'' துவிச்சக்கர வண்டி விற்பனைக்கு உண்டு. சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [57156]

### தவறிவிட்டது

நாகராசா வசந்தகுமார் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (இல. 0903000116) கன்னாதிட்டி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கஸ்தூரியார் வீதியில் உள்ள நியூசிந்துஜா ஜுவலர்ஸில் ஒப்படைக்கும்படி தயவாகக்கேட்டுக் கொள்கின்றேன். (57131)

குலசிங்கம் பேபி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 697670912V இலக்கமுடையது கச்சேரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். ராணி தியேட்டர் முன்பாக உள்ள வேளாங்கண்ணி சுவிற் என்ற கடையில் ஒப்படைக்கும்படி தயவாகக் கேட்டுக் கொள்கிறேன். (57130)

### இறைச்சிகக்கோழி

புறோயிலர் இறைச்சிக் கோழிகள், நன்கு வளர்ச்சியடைந்த ஊர்க்கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் பெற்றுக்கொள்ளலாம். இல. - 4016, புகையிரத கிழக்கு வீதி, கந்தர்மடம் (செல்வநாகபூஷணி அம்மன் கோயில் அருகில்) (57142)

இறைச்சிககோழி, புறோயிலர் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல.15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) (57313)

இறைச்சிககோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. 1Kg 160/-. சுத்தம் செய்துகொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில்வீதி யாழ்ப்பாணம், (57149)

இறைச்சிககோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. சில்லறையாகவும். மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு- No 68, Old Park Road, Jaffna. (57157)

### தேவை

அனுபவமுள்ள தமிழ், ஆங்கில, தட்டெழுத்து கற்பிக்கக்கூடிய பெண் ஆசிரியர் தேவை. R. மருதலிங்கம், 66, மணிக்கூட்டுவீதி (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (57124)

### பியானோ விற்பனைக்கு

பழைய பியானோ விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். ரத்தினம், 51, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (57152)

### கணிதம்கேகுஉத்தாவாதம்

உங்கள் வீடுகளுக்கு ஆண்டு 4 இலிருந்து O/L 98 வரை அடிப்படையில் இருந்து Paper வரை மிகத் துல்லியமாகக் கணிதம் கற்பிக்கப்படும். விரிவுரை: K.E. சங்கர், 501 A, மொகடீன் பள்ளி வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். ஒரு வகுப்பிற்கு 50 ரூபா. [57101]

## புதிய அதிகாரி

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெரிபேர்ணார்ட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த வாரம் இங்கு வந்துதமது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார். (ஐ-135)

### SPOKEN ENGLISH

சிறு குறுப்பாக ஆங்கிலம் மூலம் ஆங்கிலம் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி M L.S , Cer/ Dip. in Science- LONDON ஆங்கிலக் கல்வி நிலையம் 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (57109)

### வீடு வளவு விற்பனை

நல்ல தண்ணீர் கிணற்றுடன் அமைந்த வீடுவளவும், தளபாடங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு- இல. 62, விதானைவீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். தரகர் வேண்டியதில்லை. (57147)

### மணமகள் வேண்டும்

கனடாவில் வசிப்பவருக்கு கௌரவ குடும்ப 30 வயதிற்கு மேற்படாத செவ்வாய் தோஷம் பெற்றபெண் வேண்டும். ஆர்வமுடையோர் பெண்ணின் பிறந்த நேரம் உட்பட சகல விவரங்களும் அடங்கிய குறிப்பை தபால்மூலம் இவ் விளம்பர இலக்கத்திற்கு உதயன் காரியாலயத்திற்கு அனுப்பவும். இல. 751, மே/பா உதயன். (57151)

### O/L MATHS

ஒரே அமர்வில் Distinction Credit பெறுபேறடைய இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், புதியவர்களுக்கும் ஆரம்பத்திலிருந்து வாரம் தோறும் 5 மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும். ஆசிரியர் இல. 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (57083)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சி. ந. முத்துத்தம்பி

(முன்னாள் உரிமையாளர், யாழ். கிருஷ்ணபவான்)

மலர்வு 28 - 09 - 1933

உதிர்வு 09 - 07 - 1997

என்றும் எப்பொழுதும் தங்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(55444)

---

இன்று இரண்டாம் நாள்
27 ஜூன் 1998

## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

## தமிழ் விழா - 1998

காலை நிகழ்ச்சிகள்
27 - 06 - 98

இடம்: நாவலர் கலாசார மண்டபம்
நேரம்: 9.00 மணி முதல் 1.00 மணி வரை

### கருத்தரங்கு

அண்மைக்கால தமிழ் அரங்கு மீதான மீள் விசாரணை

தலைமையுரை: கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

கருத்துரையாளர்கள்

★ செல்வி என். நவதர்ஷினி
(90 களில் எழுந்த நாடக எழுத்துருக்கள்)

★ திரு. க. ரதிதரன்
(தமிழ் நவீன அரங்கில் நடிப்போருக்கான கருத்துப் பகிர்தல்கள்)

★ திரு. ஜோ. ஜோன்சன் ராஜ்குமார்
(தமிழ் அரங்கின் பார்க்கப்படாத பக்கங்கள்)

★ திரு. பா. அகிலன்
(கற்கை நெறியாக அரங்கு - விவாதத்திற்கான முன்னுரிமை)

★ செல்வி இ. ஜெயரஞ்சினி
(சர்வதேச அரங்கப் போக்குகளும், ஈழத்து அரங்கும்)

மாலை நிகழ்ச்சிகள்

இடம்: மன்ற அரங்கு
நேரம்: மாலை 5-30 மணி
தலைமை: புலவர் A. W. அரியநாயகம்
சிறப்புரை: கலாநிதி எஸ். சிவலிங்கராஜா

காலந்தோறும் தமிழ்க் கவிதை
**கவிதைக் கதம்பம்**

தலைமை: நயினைக் கவிஞர் நா. க. சண்முகநாதப்பிள்ளை

பொருள்: கல்லறைகள் பேசினால்...

கவிஞர்கள்:
ஜே. கி. ஜெயசீலன் — ச. முகுந்தன்
த. ஜெயசீலன் — ம. சாம் பிரதீபன்

நாட்டுக் கூத்து
முத்தா? மாணிக்கமா?
(வளர்பிறை நாடக மன்றம், பாஷையூர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— திருமறைக் கலாமன்றம்

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சி/4124)

---

# இளைஞர் பற்றிய ஆய்வுக்கு யாழ்வரும் ஆஸி ஆய்வாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 27

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆய்வாளர் ஒருவர் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சர்வதேச ரீதியில் இளைஞர்கள் தொடர்பான ஆய்வுகளை நடத்தி வரும் என். அன்டர்சன் என்ற இந்தஆய்வாளர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்துதென் பகுதியில் இது தொடர்பான விவரங்களைச் சேகரித்தார்.

தற்பொழுது யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து இங்குள்ள இளைஞர்கள் தொடர்பான ஆய்வுகளையும் அவர் மேற்கொள்ள உள்ளார். (இ-5)

# ஆரியகுளம் சந்தியிலிருந்து நயினாதீவுக்கு பஸ் சேவை

## பாதுகாப்பு கருதிநடவடிக்கை

நவாலி, ஜூன் 27

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்குச் செல்லும் யாத்திரிகர்களின் வசதி கருதி நயினாதீவுக்கான விசேட பஸ் சேவையை யாழ். ஆரியகுளம் சந்தியிலிருந்து நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முன்னர் இப் பஸ் சேவையை யாழ். பஸ் நிலையத்திலிருந்து நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தற்போது பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்தச் சேவை ஆரியகுளம் சந்தியிலிருந்து நடத்தப்பட உள்ளது.

எனவே திருவிழா நாள்களில் நயினாதீவுக்குச் செல்லும் யாத்திரிகர்கள் ஆரியகுளம் சந்தியிலிருந்தே பஸ் எடுக்கலாமென்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (இ-100)

## யாழ்ப்பாணக்...

(மூன்றாம் பக்கத் தொடர்)

கலந்து கொள்வதற்காக அமெரிக்காவில் இருந்து வருகிறார். இவரை உற்சாகத்துடன் வரவேற்போமாக.

புதிய நெருக்கடிகளை தகர்த்தெறிய நமது சக்திகள் அனைத்தையும் பிரயோகிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் மின்னல் வேகத்தில் மாற்றங்கள் நடைபெறும் காலகட்டத்தில் செயலாற்றிய அனைவரைப் பற்றியும் இப்படியான விமர்சனங்கள் எழுதப்படுகின்றன.

நம்மைச் சூழவுள்ள பயங்கர நெருக்கடிகளின் மத்தியில் ஏதோ முயற்சித்தோம். சோர்வு இணங்கிப் போதல், விட்டுக்கொடுத்தல் என்ற சோதனைகளுக்கு இடம்கொடுக்காமல் ''இயேசு கிறிஸ்து வாழ்வின் ஒளி'' என்ற கல்லூரியின் மகுட வாக்கியத்திற்கு உண்மையாகவும் விசுவாசமாகவும் பாடுபட்டோம். எனவே இந்நன்னாளில் மிகுந்த தாழ்மையுடன், இறைவனை நோக்கி எமது பாவங்களை மன்னித்து, எமது குறைபாடுகள் நிறைந்த வேலைகளை அங்கீகரித்தல் வேண்டுமென வேண்டுதல் செய்கின்றோம்.

பேராயர் எஸ். ஜெபநேசன்
தலைவர்
இயக்குநர் சபை,
யாழ்ப்பாணக்கல்லூரி.

---

FORUT-JAFFNA

## VACANCY

### POST OF TECHNICAL OFFICER

Application are invited for the above Post.

Requirements:

National Diploma Technology in Civil Engineering or Equivalent,

Management experience:

Good communication skills.

Experience in N G O. field preferred.

Applications from females are Welcome.

Please send Bio - Data and 2 testimonials to Reach.

Programme Co-Ordinator,
FORUT,
67, Temple Road, Jaffna.

(57160) On or before 1st July 1998.

---

இதோ!

### யாழ். நகரில்

மற்றுமொரு தொலைபேசிச் சேவை
யாழ். ஆஸ்பத்திரி முன்பாக

## ஒளியகம் தொலைத்தொடர்பு நிலையம்

''உங்கள் தேவையே எங்கள் சேவை''

எமது சேவை நேரம்
காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை

தொலைபேசி இல. 2070

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

**ஒளியகம்**
தொலைத்தொடர்பு நிலையம்
இல. 60, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி/4118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றுக் கருத்துள்ளோரை கொல்வது ஜனநாயக சூழலைச் சிதைக்கும்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 27

மாறுபாடான அபிப்பிராயங்கள் கொண்டவர்களை ஜனநாயக வழிமுறைகள் மூலமே அணுகுதல் வேண்டும். அதைவிடுத்து துப்பாக்கி மூலம் தீர்வுகாண முயல்வது தமிழ்ச் சமூகத்தை ஜனநாயகம் அற்ற சர்வாதிகார சூழலை நோக்கி இட்டுச் செல்லும்.

இனந்தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யாழ். மாவட்ட செயலாளர் எஸ். ஏ. ஒஸ்வல்ட்டின் கொலையைக்,கண்டித்து ஈ.பி.ஆர். எல்.எவ் அமைப்பு விடுத்த பத்திரிகைக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒஸ்வல்ட்டின் கொலை யார் செய்தாலும் கண்டிக்கத்தக்கதே. யார் செய்கிறார்கள் என்று தெரியாமல் உரிமை கோரப்படாமல் நடக்கும் கொலைகள் துரதிர்ஷ்ட வசமானவையே.

இப்படியான கொலைகள் எமது சமூகத்தை தீராத வியாதியர்கப் பீடித்துள்ளது. ஜனநாயகத்தை, மனித உரிமைகளை நேசிக்கும் மக்களை இது விசனம் அடையச்செய்யும் சம்பவமாகும்.

இத்தகைய கொலைகள் சமூகத்தில் சரி, பிழைகள் பற்றிய அபிப்பிராயங்கள் உருவாகுவதை பாரதூரமான அளவில் பாதிக்கலாம்.

ஜனநாயக மனித உரிமைகளை நேசிப்போர் இத்தகைய கொலைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும். சம்பந்தப்பட்ட சக்திகள் தமது வழிமுறையை மாற்றியே ஆகவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## இசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் ஜூன் 27

ஆஸ்பத்திரி வீதி சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய இளைஞர் குழுமத்தின் அமைப்பில் சாரங்கா இசைக் குழுவினர் வழங்கும் 'இராஜ ராகங்கள்' இசை நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய அரங்கில் நடைபெற உள்ளது. (ஐ-9)

## தமிழ்விழா நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும் தமிழ்விழாவின் இரண்டாம்நாள்நிகழ்ச்சிகள் இன்று காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகும்.

''அண்மைக்கால தமிழ் அரங்கு மீதான மீள் விசாரணை'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும்.

மாலைக் கலைநிகழ்வுகள் 5-30 மணிக்கு மன்ற அரங்கில் ஆரம்பமாகும்.

புலவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறப்புரை, கவிதைக் கதம்பம், நாட்டுக்கூத்து ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். (உ-17)

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாண பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் வர்த்தக வங்கியின் அனுசரணையுடன் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று காலை 9-00 மணி முதல் 15 வயதுப் பிரிவில் இரு அரையிறுதி ஆட்டங்கள் நடைபெறவிருக்கின்றன.

ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ யாழ். இந்துக் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி — யாழ். இந்து மைதானம்.

★ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சென். ஜோன்ஸ் கல்லூரி — மானிப்பாய் இந்து மைதானம்.

## 175ஆவது ஆண்டு விழா

ஒலி. தென்மேற்கு, ஜூன் 27

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒட்லி மண்டபத்தில் கல்லூரி அதிபர் ஜி. இராஜநாயகம் தலைமையில் நடைபெறும்.

பல்வேறு துறைகளில் சிறப்பெய்திய மாணவர்களுக்கு தங்கப்பதக்கம், வெள்ளிப் பதக்கம் என்பன பரிசளிக்கப்பட உள்ளன.

அமெரிக்க ஜேர்சி பல்கலைக்கழக பேராசிரியர் ஜோன்வோல்ரர் பிக்னெல், உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் செல்வி சி. வி. செல்லையா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (.185-15)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சன சமூக நிலையப் பாலர் பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது.

சனசமூகத் தலைவர் விக்னேஸ்வரன் தலைமையில், நிலைய மைதானத்தில் இந்த விளையாட்டுப் போட்டி இடம்பெறும். (உ-15)

★ ★ ★

தென் மட்டுவில் கலைமகள் பாலர் கழக வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு பாலர் கழக மைதானத்தில் மட்டுவில் தெற்கு அ. மி. த. பாடசாலை அதிபர் க. துரைரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் எம். எஸ். சரவணபவவும், சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி பே. பிலிப்ஸூம் கலந்து கொள்வர். (உ-31)

## தொலைக் கல்வி ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம் ஜூன் 27

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தொலைக்கல்வி நிலையத்தில் தொடர்கல்வி வகுப்புக்கள் நாளை முதல் நடைபெறுமென சிரேஷ்ட போதனாசிரியர் அறியத் தந்துள்ளார். (உ)

## மாதாந்த இசையரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 27

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மாதாந்த இசையரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 3-30மணிக்கு ஆதீன கலா மண்டபத்தில் நல்லூர் தெற்கு விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாதஸ்வர வித்துவான் க. இ. சுந்தரமூர்த்தி, நாதஸ்வர வித்துவான் சுந்தரமூர்த்தி தேவதாஸ், தவில் வித்துவான் சங்கரப்பிள்ளை சொர்ணலிங்கம், தவில் வித்துவான் சுந்தரமூர்த்தி ராமதாஸ் ஆகியோரின் நாதஸ்வர இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது. (ஐ-8)

★ ★ ★

இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் மாதாந்த இசை நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இணுவில் இளந் தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் இணுவில் கிராமசேவை அலுவலர் க. இரவீந்திரன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

இசை நிகழ்வுகளாக மானிப்பாய் கண்ணன் குழுவினரின் நாதஸ்வர – தவில் கச்சேரி, சங்கீத பூஷணம் கே. ஆர். நடராசாவின் கர்நாடக இசைக்கச்சேரி ஆகியன இடம்பெறும். எஸ். திவாகரன் வயலினும், சங்கீதரத்தினம் எஸ். மகேந்திரன் மிருதங்கமும் வாசிப்பர்.

## 2 பெண்கள் உட்பட 4 பேர் கைது

வவுனியா, ஜூன 27

போலி பொலீஸ் அனுமதிப் பத்திரத்துடன் வவுனியாவிலிருந்து வெளியேற முயன்ற இரு பெண்கள் உட்பட நால்வர் வவுனியா ரயில் நிலைய பொலீஸ் சோதனையின் போது கைது செய்யப்பட்டனர்.

பொலீஸாரின் போலி றபர் முத்திரையும் அனுமதிப் பத்திரத்தில் பாவிக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். (இ-21)

## உலகக் கிண்ணம்:

## கால் இறுதிக்கு முந்திய ஆட்டம் இன்று ஆரம்பம்

பாரிஸ், ஜூன 27

பிரான்ஸில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் முதற்சுற்று ஆட்டங்கள் அனைத்தும் நேற்று இரவுடன் முடிவடைந்து விட்டன.

அடுத்த சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 16 அணிகளும் ''நொக் அவுட்'' முறையில் மோதும். இவற்றில் வெற்றி பெறும் 8 அணிகள் கால் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும்.

கால் இறுதிக்கு முன்னதான போட்டிகளில் இன்று இரு ஆட்டங்கள் இடம் பெறும்.

இலங்கை நேரப்படி இரவு 9.00 மணிக்கு 'பி' பிரிவில் முதலாவது இடம்பெற்ற இத்தாலியும் 'ஏ' பிரிவில் இரண்டாவது இடம்பெற்ற நோர்வேயும் மோதும்.

அதிகாலை 1.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் 'ஏ' பிரிவில் முதலாவது இடம்பெற்ற பிறேஸிலும் 'பி' பிரிவில் இரண்டாவது இடம்பெற்ற சிலியும் மோதவுள்ளன. (ஐ-6)

## அதிரடி அரங்கு

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்து ஐந்து மாதங்களாகி விட்டன. ஆனால் தேர்தலுக்குரிய வாக்குச்சீட்டுகளை விநியோகம் செய்த தபால் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னமும் வழங்கப்படவில்லை. தேர்தல் கடமை புரிந்த சகலரும் அதற்குரிய சம்பளப்பணம் முழுவதும் பெற்றது பழைய கதையாகி விட்டதாகவும் தபால் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாததற்கான காரணம் தெரியவில்லை என்றும் சில தபால் ஊழியர்கள் விசனம் தெரிவித்தனர்.

உரிய பணத்தை தேர்தல் திணைக்களம் வழங்கவில்லையா அல்லது தபாலக உயரதிகாரிகள் ஊழியர்களின் கொடுப்பனவுதானே எப்போது வழங்கினாலும் சரியென்று வாளாவிருக்கின்றார்களா? மறு தேர்தல் வருவதற்கு முன்பாவது இக்கொடுப்பனவு கிடைக்குமா என அங்கலாய்க்கிறார்கள் தபால் ஊழியர்கள்.

★ ★ ★ ★

யாழ். குருநகர் துண்டியில் மீனவருக்கு இருநூறு வீடுகளைக் கட்டிக்கொடுப்பது பற்றிய ஆர்ப்பாட்டமான செய்திகள், தடல்புடலான தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அது குறித்து மீனவர் ஒருவர் வரைந்த கடிதத்தின் சாராம்சம் இது:-

''துண்டிக்குப் போகும் வழியிலேயே கடற்கரையோரமாக நூற்றுக்கணக்கில் வீடுகள் போர் அனர்த்தத்தில் சேதமுற்றுக் காணப்படுகின்றன. ஆனால் பொதுமக்கள் அங்கு செல்ல அனுமதியில்லை; துருப்பினர் தான் நிலை கொண்டுள்ளனர். புதிதாக வீடுகளைக் கட்டுவதற்கு ஆர்ப்பாட்டம் செய்வதற்கு முன்னர், தமது பழைய வீடுகளைத் திருத்திக் கொண்டு குடியமர்வதற்கு அனுமதித்தால் மிகப் பெரிய காரியமாக இருக்கும். நூற்றுக்கணக்கானோரின் வீட்டுப்பிரச்சினை தீர்ந்து விடும்,செய்வார்களா?'

இந்த மீனவர் சுட்டிக்காட்டும் விடயமும் நியாயமாகவே உள்ளது. சம்பந்தப்பட்டோர் ஆவன செய்வார்களா?.

★ ★ ★ ★

1997 ஓகஸ்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கு இறுதித் தினம் நேற்றாகும்.

ஆனால் இதற்கான விண்ணப்பப்படிவங்கள் போதியளவு யாழ்ப்பாணம் வந்து சேராததால் யாழ். மாணவர்கள் அல்லாடித் திரிந்ததைக்காண முடிந்தது.

தனியார் முகவர் நிறுவனம் ஒன்று இப்படிவங்களைத் தருவித்து உரிய கட்டணத்துடன் விநியோகித்த போதிலும் தேவையை நிறைவு செய்யமுடியவில்லை.

மாணவர்கள் தமது நெருக்கடி நிலை குறித்து யாழ். அரச அதிபருக்கும் முறையிட்டனர்.

அரச அதிபர் உடனடியாகக் கொழும்பில் சம்பந்தப்பட்டோருடன் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சியினால் முந்நூறு படிவங்கள் வந்து சேர்ந்தன. சம்பந்தப்பட்ட தனியார் முகவர் மூலம் உடனடியாகவே சுடச்சுட அவை விநியோகிக்கப்பட்டு முடிந்து விட்டன.

மேலும் சுமார் முந்நூறு மாணவர்கள் படிவம் பெறமுடியாது ஏமாற்றத்துடன் திரும்பினர்.

போதியளவு படிவத்தை யாழ்ப்பாணத்துக்குத் தருவித்து மாணவருக்குத் தட்டுப்பாடின்றி விநியோகிக்கும் விடயத்தில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் உரிய சிரத்தை எடுக்கவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு.

போனது போகட்டும். படிவம் கிடைக்காததால் விண்ணப்பிக்க முடியாத மாணவர்களுக்குப் படிவங்களைப் பெற்றுக் கொடுக்கவும், விண்ணப்பங்களை அனுப்புவதற்கான கால அவகாசத்துக்கு நீடிப்புப் பெற்றுக்கொடுக்கவும் சம்பந்தப்பட்டோர் முயற்சிப் பார்களா?— இதுதான் மாணவர் தரப்புக் கோரிக்கை.

— மின்னல்

## கூட்டணிக் கூட்டத்தை தவிர்த்தார் ஜெயலலிதா!

### உறவு சீர்குலையும் அறிகுறி

இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணி அரசிற்கும், அக்கூட்டணியில் இடம்பெற்றிருக்கும் அ. தி. மு. கழகத்துக்கும் இடையில் கருத்து வேறுபாடு உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில் —

இன்று புதுடில்லியில் நடைபெறும் கூட்டணி அரசின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கலந்துகொள்ளமாட்டார் என நேற்று மாலை திடீரென அறிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக புதுடில்லிக்கு அவர் நேற்று மாலை விஜயம் செய்வார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அவருக்கு திடீர் என ஏற்பட்ட உடல்நலக் குறைவு காரணமாக அவர் ஓய்வெடுக்க வேண்டுமென வைத்தியர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்தே அவரது புதுடில்லி விஜயம் ரத்துச் செய்யப்பட்டதாக அ.தி.மு. கட்சிச் செயலகம் நேற்று மாலை அறிவித்தது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் இரவு ஜெயலலிதாவுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட பிரதமர் வாஜ்பாய் உறவுகளை மேம்படுத்துமாறு கேட்டுக்கொண்டதாகவும், இன்று நடைபெறவிருக்கும் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-7)

## சேதம்

கல்வியங்காட்டுச் சந்தைக்கு முன்பாக — பிரதான வீதியில் அமைந்துள்ள தபாற் பெட்டி திறந்த நிலையில் காணப்படுகிறது.

நிலத்துடன் சிமெந்தினால் கட்டப்பட்டுள்ள இத்தபாற் பெட்டியைத் திருத்தியமைப்பது குறித்து இப்பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாய நடவடிக்கைகளுக்கு உதவ பரு. படை அதிகாரி உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடமராட்சியில் கற்கோவளம் முதல் வல்லை வரையுள்ள பாதுகாப்பு வீரணையும். அங்கு புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளையும் அகற்றி அப்பகுதியில் விவசாய நடவடிக்கைக்கு உதவுவதாக பருத்தித்துறை பிரிக்கேட் தளபதி கேணல் சரத் கருணரத்தின உறுதி வழங்கியுள்ளார்.

நேற்று அவருடன் தமது தூதுக்குழு நடத்திய பேச்சுக்களின்போது அவர் இந்த உறுதிமொழியை வழங்கியதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் மேஜர் கீர்த்தி குணசோமவும் பங்குபற்றினார்.

ஈ.பி.டி.பி. சார்பில் வி. கே. ஜெகனுடன் வடமராட்சிப் பொறுப்பாளர் சி. ஏ, ரங்கன், அமைப்பின் உறுப்பினர் சிறி ஆகியோரும் பங்குபற்றினர்.

சந்திப்பின்போது ஏற்பட்ட முடிவுகள் தொடர்பாக ஜெகன் தெரிவித்த விவரங்கள் வருமாறு:

★ வல்லிபுரக் கோயில் சோதனை நிலையத்துக்கு அப்பால் உள்ள பகுதிக்கு கூடுதல் உணவுப் பொருள்களை எடுத்துச்செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கோரினோம் இருவாரத்தில் இந்தக் கட்டுப்பாட்டைத் தளர்த்த நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்.

★ வடமராட்சிப்பகுதியில் கைதாகும் ஆள்களில் நிரபராதிகள் உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும், அவர்களது உறவினர்கள் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்து தருவதாகவும் உறுதிகூறப்பட்டது.

★ கப்பல், விமான பயணிகளின் அனுமதி வழங்கும் செயற்பாடுகள் சீராக நடக்க ஏற்பாடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-3)

## நல்லூரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

றைய உண்ணாவிரதம் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4 மணி வரை நடந்தது.

புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா ஆரம்பித்து வைத்த இந்த உண்ணாவிரதத்தில் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

சுலோக அட்டைகளைத் தாங்கியபடி புளொட், ஈ.பி.ஆர். எல். எவ்., ரெலோ அமைப்பின் பிரமுகர்கள், பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மாலை 4 மணியளவில் இந்து சமயப் பேரவையைச் சேர்ந்த எஸ். சிவலோகநாதன் பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

உண்ணாவிரதத்தின் பின்னர் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

(உ-3-5-6-15-51-139-111)

## எம். ஐ. 24 ..

(முதலாம் பக்கத் தொடர்)

தலைமை தொழில் நுட்பவியலாளர் பி. கே. பெரேரா ஆகிய நான்கு விமானப் படையினரே உயிரிழந்தவர்கள்.

ஹெலி வீழ்ந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு உயர்மட்டக் குழு ஒன்றை விமானப் படைத் தலைமையகம் நியமித்திருப்பதாக அறிய வந்தது.

இச்சம்பவத்தின் பின்னர் வவுனியா ஆசிக்குளம் பகுதியில் சுற்றி வளைப்புத் தேடுதல் இடம் பெற்றது. கண்டி வீதி வழியான போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டன.

(உ-3-164-7-21)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ணுவ வெடிகுண்டு நிபுணர்களின் உதவியுடன் அதைச் செயலிழக்கச் செய்தார்.

அப்பகுதியில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு, குண்டு இருந்த இடத்தைச் சுற்றி மண்மூடைகள் அடுக்கி பாதுகாப்புச் செய்யப் பட்டு எதுவித பாதிப்பும் இன்றி இக்குண்டை அவர் வெடிக்க வைத்தார்.

(உ-3-5-6-ரீ)

# கொழும்பில் நேற்று சூறாவளி வீசியது

கொழும்பு, ஜூன் 27

கொழும்பில் இரத்மலானை, கல்கிசை, மற்றும் பம்பலப்பிட்டி. வெள்ளவத்தைப் பகுதிகளில் கடந்த புதன்கிழமை நள்ளிரவு ஆரம்பித்த மினி சூறாவளி நேற்று பிற்பகல்வரைநீடித்ததாகத் தெரியவருகிறது.

நேற்று மட்டும் கடுமையான காற்றுடன் பெய்த மழையினால் மரங்கள் பல வேருடன் சாய்ந்து வீதிகளில் விழுந்தன இதனால் இப்பகுதிகளில் போக்கு வரத்துக்கள் பாதிக்கப்பட்டன. வீடுகளின் கூரைகளும் பலத்த சேதமடைந்தன.

இதேவேளை கம்பஹா, களுத்துறை மாவட்டங்களின் பல பகுதிகளிலும் நேற்று முன் தினம் இரவு ஆரம்பித்த மினி சூறாவளி நேற்றுக் காலைவரைநீடித்ததாகவும், இதனால் பல வீடுகள் சேதமடைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டது.

(உ-7)

## 557 தமிழ்..

(முதலாம் பக்கத்தொடர்)

தம் மேற்கொண்டனர்.

அதேநேரம் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில்குதித்துள்ள 40 தமிழ்க் கைதிகளின் உண்ணாவிரதமும் தொடர்ந்து நடைபெறுகிறது (உ-3)

## சிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்)

ளார்.

விடுதலைப்புலிகள் பதுங்கியிருந்து இத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இரு இராணுவ வீரர்களுடன் இரு பொதுமக்களும் காயமடைந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-21)

# கண்டியில் சிப்பாய் தற்கொலை

கொழும்பு, ஜூன் 27

கண்டி தலதாமாளிகைக்குப் பின்னால் உள்ளகாட்டுப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3-30 மணியளவில் சிப்பாய் ஒருவர் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக்காணப் பட்டார்.

இராணுவத்தை விட்டு ஓடி பின்னர் கைது செய்யப்பட்டு படையில் மீளச்சேர்க்கப் பட்ட இவர் தலதா மாளிகைப் பகுதியில் கடமையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தார். அவர் தற்கொலை செய்திருக்கலாம் எனக் கருதப் பட்டது. (உ-10)

## மாகாணசபைத்..

(முதலாம் பக்கத்தொடர்)

தலை ஒத்திவைப்பதற்கு மாற்றீடாக ஜனாதிபதித் தேர்தலை இவ்வாண்டு டிசம்பரில் முன் கூட்டியே நடத்தும் திட்டத்தை அரசு கைவிட்டு விட்டதாகவும் கூறப் பட்டது. (உ-3)


# GNANAMS LINK INTERNATIONAL

GNANAMS LINK INTERNATIONAL

**ஞானம்ஸ் றேட்ஸ்**

150, 152, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஞானம்ஸ் றேட்ஸ்**

கிளை நிறுவனம்
251, கே. கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்,

அன்பான வாடிக்கையாளர்களுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி!

வாடிக்கையாளர்களின் நலன் கருதி இன்றிலிருந்து வெளிநாட்டிற்கான அழைப்பு கட்டணத்தையும், அங்கிருந்து வரும் பதில் கட்டணத்தையும் வெகுவாகக் குறைத்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

சகல நாள்களிலும் வெளிநாட்டிற்கான அழைப்புக் கட்டணம் 100 ரூபா
வெளிநாட்டிலிருந்து வரும் பதில் கட்டணம் நிமிடத்திற்கு 5 ரூபா

## ஞானம்ஸ் லிங் இன்ரநாஷனல்

**ஞானம்ஸ் றேட்ஸ்**

150, 152, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

✠ தொலை பேசி இல.;- 021-2052
021-2053

(21-2101 அவசர அழைப்புக்கான இலக்கம்)

**ஞானம்ஸ் றேட்ஸ்**

(கிளை நிறுவனம்)
251, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

✠ தொலை பேசி இல.:- 021-2666
பக்ஸ் 021-2666

## இரவு பகல் தொலைபேசிச் சேவை

உங்கள் உள்ளூர் வெளியூரிலுள்ள உறவினர், நண்பர்களுடன் தாராளமாக உரையாடுவதற்கு எமது ஸ்தாபனத்தில் சகல வசதிகளையும் செய்து தருகின்றோம் என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இவற்றுடன்

I) தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துடன் இணைந்த (FAX) பக்ஸ் வசதிகள்.
II) பல்வேறு இடங்களுக்குமான தொலைபேசி வசதிகள்.
III) போட்டோ பிரதி சேவை இன்னும் பலவற்றை இத்துடன் இணைத்துள்ளோம்.
IV) இவற்றுடன் இரவு தங்கி நின்று உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும் வசதி.




(C/4125)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-6-1998 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகை

சஞ்சீவி

27 — 06 — 1998 சஞ்சீவி



சாரங்கா நகை மாடம்

நம்பிக்கை, நாணயம்,
உத்தரவாதத்துடன் அசல்
22 கரட் தங்க நகைகளைப்
பெற்றுக் கொள்ள
யாழ். நகரில் பெயர் பெற்றவர்கள்.

177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

C/4103


## கருத்துக் கலசம்

மயூரா

### அறவிதி நெறி

இந்த நாட்டின் கல்விமுறையில் மாற்றம் தேவை என்று எல்லாத் தரப்புகளிலிருந்தும் கூறப்படுகிறது; கோரப்படுகிறது. இன்றைய கல்விமுறை நாட்டின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் உதவவில்லை என்பது ஒரு பக்க முறைப்பாடு. நடைமுறையில் உள்ள கல்வித் திட்டம் நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு துணை செய்யவில்லை என்பது அடுத்த பக்க அதிருப்தி.

அரசாங்கங்கள் புதிது புதிதாகப் பதவிக்கு வரும் போதெல்லாம் கல்வி முறையில் மாற்றங்கள் கொண்டு வரப்படுவது வழமையே. எனினும் மேற்கூறிய இரண்டு இலக்குகளும் இன்னும் எய்தப்படவில்லை. இது பெரிதும் கவலைக்குரியது.

இன்று எம் முன்னே எழுந்துள்ள பெரிய சவால், இந்த நாட்டில், மிகக் குறிப்பாக எமது பிரதேசத்தில் சமூக நீதியையும், சமூக அமைதியையும் எப்போது நிலை நாட்டப் போகிறோம் என்பது தான்!

சமூக நீதி இருந்தாலேயே சமூக அமைதியை உருவாக்க முடியும். இரண்டும் ஒன்றோடு மற்றையது பின்னிப் பிணைந்தது. இன்றைய ஈழத் தமிழர்கள் மத்தியில் சமூக அமைதி பெரிதும் குன்றி வருவது மிகவும் வேதனை தருவதாகும்.

மக்கள் மத்தியில் அமைதியை உருவாக்குவதற்குத் தேவையான சமூக நீதியை போதிக்கும் கல்வித் திட்டம் எங்கள் கல்வி முறையில் கைக்கொள்ளப்படவில்லை.

இந்தியாவின் கல்வித் திட்டத்தில் அறவிதிப் போதனை (Moral Science) முன்னர் ஒரு பாடமாக இருந்தது. ஒழுக்கம், தன்னடக்கம், பண்பாடு, சத்தியத்தின் பெருமை, உழைப்பின் உயர்வு, பெரியோரை மதித்தல் ஆகியன பாட விதானத்தில் சேர்க்கப்பட்டுப் போதிக்கப்பட்டன. மாணவர் மனதில் அவற்றைப் பதிய வைக்கும் பொருட்டு கதைகள் மற்றும் இசைப்பாடல்கள் மூலம் அவை போதிக்கப்பட்டன.

இன்றைய இளைய சமுதாயம் தறிகெட்டு நிற்பது, சமூகச் சீரழிவுகள் மேலோங்குவது பண்பாட்டுக் கோலங்கள் சிதைவது போன்றவை எமது கண் முன்னேயே நடக்கின்றன.


இன்றைய குழந்தைகள் எதிர்கால இளைஞர்கள்; பின்னர் தலைவர்கள். அவர்களது சமுதாயத்திலாவது சமூக நீதியும் அதன் விளைவாக சமூக அமைதியும் பிறக்க வேண்டுமெனில்—

பாட விதானத்தில் அறவிதிப் போதனை விசேடமாகச் சேர்க்கப்பட வேண்டும். அரச கல்வித் திட்டத்தில் அது புகுத்தப்படும் வரை காத்திருக்காது, துணைப் பாடமாக, மேலதிகமாக இது போதிக்கப்படலாம். சமய பாட போதனைக்கான 40 நிமிட நேரத்தை அதிகரித்து, நீதி போதனையையும் பயிற்றுவிக்கலாம்: எங்கள் பிரதேசத்துப் பாடசாலை அதிபர்களுக்குத் துணிவிருந்தால், சமூகப்பற்று நிறைந்தால் இது இயலாத காரியமல்ல.

# சனிக்குப் பெயர்ச்சி

## விரைந்து செல்லும் விண்கலம் காசினி வியத்தகு தகவல்களைத் தருமா?

சக்கரவர்த்தி கருடன் — என்பது ஒருவகை. தன் இறகுகளை விரித்து அது நின்றால் திணவெடுத்த திண் தோள்கள் கொண்ட ஆண் மகன் நிற்பது போலிருக்கும்; அப்படியாகப்பட்ட ஒரு கம்பீரம். அத்துணை கம்பீரம் கொண்ட ராஜகிரகம்தான்— சனிக் கிரகம். இந்த ஆளுமையை, அதனைச் சுற்றி இயற்கையாய் அமைந்துள்ள பல வண்ணத் தூசு வளையமே அதற்குத் தருகிறது. நவரத்தினச் சால்வை போர்த்தப்பெற்றசக்கரவர்த்தியாய்க் காட்சி தருகிறது சனி. அது கிரகங்களிலேயே இரண்டாவது மா பெரும் கிரகமாய் அமைந்த இராட்சதக் கோளாகும். பரப்பளவில் மட்டுமல்ல. நிலவுகளின்



கோள்களில் சக்கரவர்த்தி சனி

எண்ணிக்கையிலும் சனி ஒரு ராஜாவே! அதன் நிலவுகள் மொத்தம் 18.

1980—81 இல் செலுத்தப்பட்ட 'வொயேஜர்' விண்கலம், சனிக் கிரகத்தைப் படு வேகமாய்க் கடந்த சமயங்களில், தனக்குத் தெரிந்த சனியின் பகுதிகளை அவசர அவசரமாய்ப் படம் பிடித்தது. அது பிடித்துத் தந்த புகைப் படங்களே, இன்றளவும் சனியின் அமைப்பை அறிய நமக்கு உதவின. இவற்றால் எட்டப்பட்ட முடிவுகள் பெரும்பாலும் கற்பனைக் கலவைகளே ... இருந்தாலும் சனியின் மீதான பூமி ஆய்வுகள், அக்கற்பனைகளை மெய்ப்பித்துத் தந்து அந்தக் கிரகம் பற்றி மேலும்அறிந்து கொள்ளும் ஆவலுக்கு நெய் யூற்றின. விளைவு 'காசினி' விண்கலம்.

நாஸாவின் எட்டு வருடக் கடும் உழைப்பினால் வெற்றிகரமாய்ப் பிறந்துள்ள விண்கலமே காசினி. சனிக் கிரகம் நோக்கிச் சில மாதங்களுக்கு முன் செலுத்தப்பட்டுள்ள காசினி ஆறு தொன் எடையுள்ள விண்கலம் வொயேஜர் போல அவசர கதியில்லாமல் சனிக்குள்ளேயே இறங்கி, தங்கி, காசினி தரவுள்ள ஆய்வறிக்கைகள் சனி குறித்த பல வேறு சந்தேகங்களுக்கு

விடை தரும் என்பது எதிர்பார்ப்பு. இதுவரையில் நாஸா அனுப்பியுள்ள விண்கலங்களிலேயே மிகவும் பெரியதான காசினி தனது ஏழு வருடப் பயண முடிவில் இங்கிருந்து இரு நூறு கோடி (2,000,000,000) மைல்கள் தொலைவிலுள்ள சனியைச் சென்றடையவுள்ளது. அது பற்றிய ஆழமான முன்னோட்டமிது.

2004 இல் சனிக் கிரகச் சுற்றுப் பாதைக்குள் காசினி இறங்கிய பிறகு கிட்டத்தட்ட நான்கு வருடங்களுக்கும் மேல் அங்கு தங்கி கிரகம், அதன் வளையங்கள் மற்றும் நிலவுகள் ஆகியவற்றில் ஆய்வினை மேற்கொள்ளவுள்ளது.

சனியின் மேகங்கள் நிரம்பிய அதன் மேல் அண்ட வெளி — அதாவது அதன் வானம்—பல சமதள அடுக்குகள் கொண்ட, கடும் புயல் வெளியாகும். மணிக்கு ஆயிரம் மைல்கள் வேகங் கொண்ட அசுரச் சூறைகளாய் இவை வீசுகின்றன. ஆனால் இத்தனை சக்தியும் எங்கிருந்து வருகின்றது? சனியின் அண்டவெளியின் ஆக்கம் என்ன? இந்தக் கிரகம் குறித்து விடை காணவுள்ள பிரதான கேள்விகள் இவை. இவற்றிற்கு விடை காண்பதற்கென்றே, ஊடுருவிப் படம் பிடிக்க வல்ல அட்சர சுத்தக் கமரா ஒன்று உட்பட ஒரு கொத்து உபகரணங்களோடு காசினி புறப்பட்டுள்ளது.

இருப்பினும், சனியின் மேக வெளியில் சுழலும் அதிவேகச் சூறையினாலும், இதனால் அப்பகுதிகளிலிருந்து மேலும் பல கிலோ மீற்றர் உயரங்களுக்கு எகிறிக் கொண்டிருக்கும் மிகக் கொடூரமான காற்றலைகளின் [illegible] தன்மையாலும் அடையாளம் [illegible] கொள்ளுமளவிற்குக் காசினி ஆய்வு

நடத்தி விடை தருமா என்று உடனே கேள்வி எழும்.

ஆனால் காசினியால் இது இயலும்!

ஏனென்றால் இதன் கமரா நகர்ந்து கொண்டிருக்கும் மேகங்களைப் படம் பிடிக்குமளவிற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமலாமல் நிறமாலையில் இந்தப் பக்கம் உள்ள புறஊதா முதல் அந்தப் பக்கம் முடியும் சிகப்பு நிறம் வரை இது சமாளிக்கும் என்பது ஓர் அனுகூலம்


மேகக் கூட்ட ஆராய்ச்சிக்கு உதவும் இயந்திரத்தை மேகங்களுக்குள்ளேயே இறக்கி மேற்கொள்ளப்படும் வழக்கமான ஆய்வு முறையில்லாமல் அலை வீச்சு எனும் மேம்படுத்தப்பட்ட முறை, காசினியால் கையாளப்படும். இதன்படி காசினி, சனிக்கிரகத் தளத்தில் தான் மேற்கொளும் ஆய்வு முடிவுகளை பூமியோடு தொடர்பு கொண்டு வழங்கும் போது, அவை, சனியின் மேகக் கூட்டம் வழியாக மட்டுமே நம்மை வந்தடையும். மேலும் ரேடியோ அலைகள் மூலம் காசினி தரும் இத் தகவல்கள், ஒரே இடத்திலிருந்து இல்லாமல், சனியின் வெவ்வேறு இடங்களிலிருந்து பல வேறுபட்ட நேரங்களில் நமக்கு அனுப்பப்படும் என்பதுதான் இதில் முக்கியம். இதனால், தகவல்கள், மேகத் தட்டுக்களைப் பல இடங்களில் துளைத்துக் கடக்க நேரிடும்; விளைவு சனி அண்ட வெளியின் தட்ப வெப்பம் அழுத்தம், வேதியாக்கம் போன்ற அனைத்தும் 'மாதிரி'களாக — சனி மேகத் தட்டுக்களில் வெவ்வேறான, பாகங்களிலிருந்து நமக்குக் கிடைக்கும். பின்னர் இவையனைத்தையும் ஒட்டு மொத்தமாக்கி நோக்கும் போது, சனி வெளி பற்றிய துல்லிய முடிவுகள் கிடைக்கும்.

மேக மண்டலத்தில் ஒரே ஓர் இடத்தில் இயந்திரத்தை இறக்கிக் கிடைக்கும் முடிவுகளை விட, மேகத் தட்டுக்குத் தட்டு அலைவரிசைகள் மாறுபடும் அதன் பல பகுதிகளிலிருந்து கிடைக்கும் மாதிரிகளை வைத்து எட்டப்படும் முடிவுகள் மேம்படுத்தப்பட்டிருக்கும் என்பது உறுதி.

சனியின் இரவுகளில் அதன் மேக அடுக்குகளில் மின்னலைத் தேடுவது மற்றுமொரு எதிர்பார்ப்பு; இந்தத் தேடல்

(XI ஆம் பக்கம் பார்க்க)

ஜியோவன்னி காசினி— 1625 முதல் 1712 வரை வாழ்ந்த அற்புத வானவியலார்! நவீன உபகரணங்கள் அற்ற அன்றைய சூழலிலேயே சனியின் வளையங்களின் இரண்டு —இடுக்குகளில் காணப்படும் இடைவெளிகளை உலகுக்கு பறை சாற்றியவர். அதனாலேயே அவை ''காசினி இடைவெளிகள்'' என இன்றும் அழைககப்படுகின்றன. அவரின் ஞாபகார்த்தமாக அந்த இடுக்குகளை நாடி விரைந்து கொண்டிருக்கும் விண்கலத்துக்கு 'காசினி' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கின்றது.



சனியைச் சுற்றிச் சுழலும் தூசு வளையங்கள் தங்களின் நிறம், அமைப்பு, வேகம் ஆகியவற்றை அடிக்கடி மாற்றிக்கொண்டேயிருப்பது சிதம்பர ரகசியம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் வருமுன் அபிவிருத்தி வேலைகள்; குதிரைக்கு முன்னால் வண்டியை பூட்டுவதே!

## உள்ளும் புறமும்

குறுமணி

யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கை ஏதோ ஒருவிதமாக நகர்ந்து கொண்டிருக்கிறது. நாளை என்ன நடக்குமோ என்ற ஏக்கப் பெருமூச்சுடன் தான் மக்கள் அன்றைய நாளைக் கழிக்கிறார்கள். அன்றாட வாழ்க்கை கழிந்துவிட்டால் போதும் என்ற ஒருவகையான அற்ப திருப்தியுடன் வாழப் பழகிக்கொண்டு விட்டார்கள்.

அவ்வப்போதைய சூழ்நிலைக்குத் ''தோதாக''த் தங்களை மாற்றிக் கொள்வதில் யாழ்ப்பாணத்தவர்கள் கெட்டிக்காரர்கள். ஒரு வகையில் சந்தர்ப்பவாதிகள். அதனால்தான் இத்தனை கஷ்டங்கள், துன்பங்களை தாங்கிக்கொண்டு பல சவால்களை எதிர்கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இதன் காரணமாக யாழ்ப்பாணத்தில் அமைதி நிலவுவதாகவும், இயல்பு வாழ்க்கை திரும்பிவிட்டதாகவும் வெளித் தோற்றத்துக்குத் தெரிகிறது. அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகள், விழாக்களும் அந்த வெளித் தோற்றம் உண்மையானதே என்று நம்ப வைக்கின்றன.

இந்த வெளித்தோற்றத்தை வைத்துக்கொண்டு, இதனை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அரசு யாழ்ப்பாணத்தில் வழமை நிலை திரும்பிவிட்டதாகவும், இயல்பு வாழ்க்கை மீண்டுள்ளதாகவும், சிவில் நிர்வாகம் சீரடைந்துவிட்டதாகவும், ஜனநாயகம் தளைத்தோங்கிவிட்டதாகவும் சொல்லி வருகிறது.

அது மட்டுமா? யாழ்ப்பாணத்தின் புனர்நிர்மாண, புனர்வாழ்வுப் பணிகளுக்கு உதவுமாறும் வெளிநாடுகளுக்கும், சர்வதேச நிறுவனங்களுக்கும் வேண்டுகோளும் விடுத்து வருகிறது.

இதனால் வெளியிலிருந்து உதவி வழங்குவது முதற்கொண்டு புனர்நிர்மாணம் குறித்து ஆராயவென்று கொழும்பில் இருந்து, யாழ்ப்பாணம் வந்து போவோருக்குக் குறைவேயில்லை. அவர் வந்தார்; இவர் வந்தார்; அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் வந்தார்கள்; இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் வந்தார்கள்; அந்த அதிகாரியைச்சந்தித்துப் பேசினர்; இந்தத் தூதுக் குழுவினர்களுடன் பேச்சு நடத்தினர் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

அவற்றைத் தொடர்ந்து— நிலைமையை நேரில் கண்டறிந்தனர்; அந்தத் திட்டத்துக்கு உதவ விருப்பம் தெரிவித்துள்ளனர்; இந்தத் திட்டத்தைத் தொடங்க ஆர்வம் கொண்டுள்ளனர் என்றும் செய்திகள் வருகின்றன.

ஆனால் உருப்படியாக, பயனுள்ளதாக கைக்கு வந்து சேர்ந்துள்ளது என்று குறிப்பிட்டுக் கூறுமளவுக்குச் செயலளவில் பெரிதாக எதுவும் நடக்கவில்லை—மிக மிகச் சிலவற்றைத் தவிர,

வந்தார்கள்; பார்த்தார்கள்; போனார்கள் — என்று நாள்கள் நகர்கின்றன. இதே வரிசையில், வகையில் இந்த வாரம் அங்கிலிக்கன் திருச்சபையைச் சேர்ந்த சர்வதேச சமாதானத்திற்கும் நீதிக்குமான அமைப்பின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்து சென்றனர்.

### ஐ. நா வில் எடுத்துச் சொல்லப்படும்

மேற்படி அமைப்பைச் சேர்ந்த குழு ஒன்று கொழும்பு வந்திருந்தது. திடீரென யாழ்ப்பாணம் வருவதற்கு முடிவு செய்தனர். அந்தக் குழுவைச் சேர்ந்த நால்வரும், உள்நாட்டைச் சேர்ந்த மூவருமாக ஏழு பேர் யாழ்ப்பாணம் வந்தார்கள். திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை இரண்டு நாள்களும் சமயத் தலைவர்கள், சமூகத்தலைவர்கள், சமய, சமூக நிறுவனங்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசி நிலைமையைத் தெரிந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் பேராயர் ஹொட்லி, அங்கிலிக்கன் திருச்சபையின் ஐ. நா. பிரதிநிதி. இவர் யாழ்ப்பாணத்து நிலைமையை உலக சபையில் எடுத்துச் சொல்வார் என்று அறியப்படுகிறது.

நல்லை ஆதீன முதல்வர், யாழ். ஆயர், தென்னிந்திய திருச்சபைப் பேராயர், பல்கலைக்கழகத் துணை வேந்தர் ஆகியோரையும் மற்றும் —

மனித உரிமைகள் ஆணைக்குழு, சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு, யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், மக்கள் சக்திச் சமூகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும் அங்கிலிக்கன் சபையின் குழுவினர் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர் என்று அறிய வந்துள்ளது;

அங்கிலிக்கன் குழுவினர் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைவரம்குறித்த விவரங்களையும், மக்களின் வாழ்க்கை நிலை, மனோநிலை ஆகியவற்றையும் அறிவதிலேயே அதிக ஆர்வம் காட்டினார்கள்.

யாழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் குறித்தும் இவர்கள் தாம் சந்தித்தவர்களிடம் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டறிந்தனர்.

★ யாழ்ப்பாணத்தில் இன்னும் இயல்பு நிலை வரவில்லை.

★ பிரதான தொழில்களான விவசாயமும் மீன்பிடியும் சீராகவோ முழுமையாகவோ இங்கு நடைபெறவில்லை.

★ கைத்தொழில் துறை முற்றாக ஸ்தம்பித்துள்ளது.

★ நிவாரண நிறுத்தம் இங்கு சுமுக நிலை உண்டாகிவிட்டதாகக் காட்டுவதற்கான ஒரு நடவடிக்கையே

இந்த விடயங்களை சீ. வி. கே. சிவஞானம் தலைமையிலான ஏழு பேர் கொண்ட மக்கள் சக்தி சமூகக் குழு அங்கிலிக்கன்சபைப் பிரதிநிதிகளிடம் விளக்கமாக விவரித்தது.

சமாதானத்தை உருவாக்குவதற்கு உதவவேண்டும் என்றும், புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு முன்னர் சமாதானம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் மேற்படி குழு வலியுறுத்தியது.

★ புனர்வாழ்வு சம்பந்தப்பட்ட அபிவிருத்தி வேலைகள் பின்னடைந்துள்ளன.

★ கல்வி நிலையில் பாதிப்பு.

★ மருத்துவப் பிரச்சினைகள் — ஆகிய விடயங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் எடுத்துக் கூறின.

அங்கிலிக்கன் சபையின் பிரதிநிதிகள் குழுவினர் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இரண்டு நாள்களும் பம்பரமாகச் சுழன்று பல இடங்களுக்கும் சென்று பல விடயங்களைக் குறித்துக் கொண்டனர்.

தாம் யாழ்ப்பாணம் வருவதற்கு முன்னர் இங்குள்ள நிலைமை குறித்துக் கேள்விப்பட்டவை உண்மைதானா என்பதனையும் அவர்கள் கேட்டறிந்தனர்.

நிச்சயமாக, அவர்கள் வெளியில் இருந்து கேள்விப்பட்டமைக்கும், நேரில் அறிந்தவற்றுக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கும். இங்குள்ள உண்மை நிலையை வெளி உலகத்துக்கு உள்ளபடி தெரிவித்தாலே அது பேருதவியாக இருக்கும். அரசாங்கத்தின் பிரசாரம் எந்தளவுக்கு உண்மைக்குப் புறம்பானது என்பதனை உலகம் ஓரளவேனும் புரிந்து கொள்ளும்.

### குதிரைக்கு முன்னால் வண்டி

மேலும் சமாதானம், அமைதி உருவாகு முன்னர் புனர் நிர்மாண, அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வது என்பது குதிரைக்கு முன்னால் வண்டியைப் பூட்டுவது போலாகும் என்பதனையும் சர்வதேச சமாதானத்திற்கும் நீதிக்குமான அமைப்பின் பிரதிநிதிகள் உணர்ந்திருப்பர்.

உரும்பிராயில் உள்ள பரிசுத்த இம்மனுவேல் தேவாலயத்துக்கு நடந்த கதியை இங்குள்ள அங்கிலிக்கன் பிரமுகர்கள் யாழ்ப்பாணம் வந்த பிரதிநிதிகளிடம் தெரிவித்திருப்பின் அவர்களுக்குத் தெளிவாக விளங்கியிருக்கும்.

மேற்படி தேவாலயம் 1987 ஒக்ரோபரில் இந்தியப் படையின் ''பவான்'' இராணுவ நடவடிக்கையின் போது முற்றாகச் சேதமடைந்து கற்குவியல்களாக மாறியது.

இப்புனித தேவாலயம் பல லட்சம் ரூபா செலவில் மீள அமைக்கப்பட்டது. 1990 ஜூன் 21 ஆம் திகதி கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் அதனை இரண்டாவது தடவையாகப் பிரதிஷ்டை செய்ய ஏற்பாடுகள் நடைபெற்றன. ஆனால் ஜூன் மாதம் ஆரம்பமான இரண்டாவது ஈழப் போரின் விளைவாக— அதே மாதம் 12 ஆம் திகதி நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் —மீண்டும் தரைமட்டமானது.

சமாதானமான சூழ்நிலை ஒன்று உருவாகி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு, அமைதி உண்டான பின்னரே புனர்நிர்மாணம் போன்ற அபிவிருத்தி வேலைகள் தொடங்கப்பட வேண்டும் என்பதற்கு இது ஒரு நல்ல அனுபவம்—பாடம்.

முதலில் சமாதானமும், அமைதியும் உருவாக்கப்பட வேண்டும் என்பதனை அங்கிலிக்கன் பிரதிநிதிகள் குழுவினர் வலியுறுத்துவர் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

★ ★ ★

வடமாகாணத்தில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறுவோரில் இருபத்திரண்டு சத வீதத்தினருக்கான நிவாரணத்தை இந்த மாதத்தோடு நிறுத்திவிட அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

நிவாரண நிறுத்தம் குறித்து அறிவித்த அத்தியாவசிய சேவைகள் நாயகம் என். எச். ஒபடகே, ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை செய்த பின்னரே இந்தத் தீர்மானத்துக்கு வந்தார்.

போர் நடைபெறும் தமிழ்ப் பிரதேசங்களில் மட்டுமன்றி, இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள தமிழ்ப் பிரதேசங்களிலும் கூட நிவாரணம் இல்லையேல் மக்கள் பட்டினி கிடக்கும் நிலையே உள்ளது. யாழ்ப்பாணம் அதற்கு ஓர் உதாரணம்!

குடாநாடு இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தாலும், தொழில் இல்லா திருப்போர் பெரும் எண்ணிக்கையினர், மிகவும் குறிப்பாக அன்றாடம் உழைத்து உண்போர் நிலை மோசமானது. இந்தக் குடும்பங்களில் போசாக்கின்மை அதிகரித்து வருவதை ஆய்வுகளும் புள்ளி விவரங்களும் எடுத்துச் சொல்கின்றன.

நிலைமை அவ்வாறிருக்க, வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் எண்பதாயிரம் குடும்பங்களின் நிவாரணத்தை நிறுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 34.000 குடும்பங்களும்; கிளிநொச்சியில் 9,968 குடும்பங்களும், முல்லைத்தீவில் 19,536 குடும்பங்களும், மன்னாரில் 12,725 குடும்பங்களும், வவுனியாவில் 3,033 குடும்பங்களுமாக 79,262 குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட உள்ளன; பட்டினி கிடக்கப் போகின்றன.

அரசாங்கத்துக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளதாலேயே நிவாரணம் வெட்டப்படுவதாகக் கூறப்படுகிறது. ஆனால் எல்லைக் கிராமங்கள் உட்பட ஏனைய மாவட்டங்களுக்கு நிவாரண நிறுத்தம் இல்லை. ஒருவருக்கு ஒரு நியாயம், மற்றவருக்கு இன்னொரு நியாயம் என்ற இந்த நடவடிக்கை தமிழர்களுக்கு விரோதமாகச் செய்யப்படும் மோசமான செயல்களில் மிகப் பிந்தியதாகும்.

ஏனைய விடயங்களில் தங்கள் இயலாமையைத் தொடர்ந்து காட்டி வரும் தமிழ்க்கட்சிகள், நிவாரணம் நிறுத்தப்பட்டதையேனும் அரசைக் கொண்டு வாபஸ் பெறச் செய்விப்பதில் தமது பலத்தைக் காட்டுமா என்ற கேள்வியே இப்போது தமிழ் மக்களிடையே எழுந்துள்ளது.

இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில், தமிழர்களுக்குச் சாதகமாகச் செயற்பட வேண்டும் என்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்து வரும் ஐக்கியதேசியக் கட்சியின் ஒத்துழைப்பைப்பெற்று, நிவாரணம் நிறுத்தப்பட்டதை முன்வைத்து அரசின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து நிறைவேற்ற தமிழ்க் கட்சிகள் முயற்சி செய்யலாம். ஆனால் எந்தத் தமிழ்க் கட்சிக்குமே அந்தளவுக்கு முதுகெலும்பு இல்லை என்று ஸ்ரீமான் பொதுஜனம் சொல்கிறார்!

முன்னர் பல தடவைகள் அரிசி விவகாரம் இலங்கை அரசியலை ஆட்டிப்படைத்தது. இப்போது நிவாரண நிறுத்தத்தைக் கொண்டு அரசாங்கத்தை ஆட்டுவிக்க ஒரு சந்தர்ப்பம் வருகிறது தமிழ்க் கட்சிகள் கருத்து வைத்தால்!

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய மாநகர முதல்வர் பொன் சிவபாலன் எதிர்வரும் திங்கட்கிழமை பதவியேற்கின்றார். அன்றைய தினமே சபையின் மாதாந்த பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளது. பிரஸ்தாப பொதுக்கூட்டம் ஏற்கனவே முன்னாள் மாநகர முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் பதவியிலிருந்தபோது நடைபெற வேண்டியது.

திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் புதிதாக பதவியேற்றுள்ள ஐவரும் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய கூட்டணி உறுப்பினர்கள், முன்னர் பதவியிலிருந்து விலகிய உறுப்பினர்களின் இடத்துக்கு நியமிக்கப்பட்டவர்கள். இந்த நியமனங்களைச் செய்வதில் தாமதம் ஏற்படுமெனக் கருதப்பட்ட போதிலும் எதிர்பார்த்தமைக்கு மாறாக குறுகிய காலத்தில் புதிய நியமனங்கள் செய்யப்பட்டு விட்டன

முன்னர் பதவியிருந்து விலகியவர்கள் தமக்கு கிடைத்த பயமுறுத்தல்களைத் தொடர்ந்தே விலகிக் கொண்டனர். இனிமேலும் அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் யாழ். மாநகர சபை இயங்குவதில் அடிக்கடி தடங்கல்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும்.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளைச் செயலாளர் எஸ்.ஏ. ஒஸ்வால்ட் கடந்த புதன் இரவு தமது வீட்டடியில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இப்பத்தி எழுதப்படும் வரை இக் கொலைக்கு யார் காரணம் என்பது பற்றி ஊர்ஜிதமான தகவல்கள் கிடைத்திருக்கவில்லை. எனினும் இதுவும் ஓர் அரசியல் கொலையாகவே இருக்குமெனப் பரவலாகக் கருதப்பட்டது.

கடந்த ஒன்பது மாதங்களில் யாழ்ப்பாணத்தில் நடந்த மூன்றாவது அரசியல் கொலை இது என்று கூறலாம். இதற்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகர் தி. தருமலிங்கம் கடந்த வருடம் ஒக்டோபர் 03 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். அதன் பின்னர் யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் கடந்த மே மாதம் 17 ஆம் திகதி அவரது வீட்டில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டார்.

(XI ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைப்பதில் அரசு வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாய்க்கு நிகரானவள் தானெங்கள் கோமாதா

குருதி கொதிச்சது! நாடிதுடிச்சது!
குமுறியதுள்ளம்! துவண்டதுடல்!
''ஆ'' வின் பாலுண்ட வாய் வயிறழுதது
''அம்மா'' எனவலறிய ''ஆ'' வினொலிகேட்டு!

புளியந் தோப்பிலே பிள்ளைக்குப் பேயடிச்சதாக
காளிக்கு நேர்த்தி வேண்டி பசுவைப்பலியிடாதே!
மூடநம்பிக்கையை வளர்த்தெடுத்து
மாடு வெட்டி மாமிசமுண்டு மனங்களிக்காதே!
மாதா ஊட்டாப்பாலை மாடூட்டுதையா!
குறளை மறந்து கெட்டு குட்டிச்சுவராகாமல்
பிறந்த பெரும் பிறவியைப் பேணி வாழுவீர்!
தாடி மீசையுடன் தலைமுடி வளர்த்து
ஆடையணிகலன் களைந்து கோவணமாகி
காடு சென்று பொடி நடையாகத் திரிந்து
அம்புவில் கொண்டு விலங்கு வேட்டையாடி யுண்!
பாவி உன்னிடம் காளி கேட்டாளா சேவல் மாடாடு?
தாய்க்கு நிகரானவள் தானெங்கள் கோமாதா!
தனையன் நீ யுணர்வதெப்போது? திருந்திநட!
உள்வீட்டுக் குறையாக உனக்குரைக்கின்றேன்
அயல் வீட்டாங்கில மரபு மதங்களெம்மை
அசை போட்ட வமானஞ் செய்து சிரிக்கின்றன!
அண்ணா தம்பியுங்களுக் கன்போடுபகர்கின்றேன்
வெள்ளாடு சேவல் மாடு வெட்டி வேள்வி செய்யாதீர்!
வேண்டாமிந்தவழி வெறுக்கும் நாகரிகம்.

*—ச. க. சுதர்சனக்குரு—*

## மனதில் ஒரு விருந்து!

(பிறந்த தினத்திற்கு என்னவெல்லாமோ செய்து மகிழ்கின்றோம். ஆனால், உண்மை அன்புடன் வாழ்த்துபவர் எத்தனை பேர்?!)

'கேக்' அடித்தாலும்—'தொதல்'
கிண்டியே வைத்தாலும்—என்
ஆக்கினைக்குப் 'பற்றிஸ்'
அளவோடு சுட்டாலும்
'மாஸ்மலோ', லட்டு 'மிக்ஸர்'
மறக்காது தந்தாலும்—நின்று
கூக்காட்டும் எமக்கு—ஐஸ்
ஜோப்பியோ கொடுத்தாலும்,

ஓடருக்கு ஐஸ்கிறீம்
ஒழுங்கமைத்துக் கொண்டாலும்
பாடென்று மேடைப்
படியேற்றி வைத்தாலும்
''வாடாமல் வாழ்க'' என
வாழ்த்துரைத்துச் சொன்னாலும்
போடா, மன அன்பிற்கு—இவை
பூண்போடக் காணாது!

*—கி. குருபரன்—*

## "ஹீரோ" சைக்கிளின் மனக்குமுறல்!

''ரிடையர்ட் பிரின்சிபல்'' தியாகுவின்ர 'மகராசன்'
''ரம்போ ஸ்ரைலெடுக்கும்'' (கு)ரங்கனின்ர வாகனமாம்
''ஹீறோ'' சைக்கிள் — நான் குமுறுகிறேன் மனத்துள்ளே
'ஏழோ எட்டோ' எனக்கே தெரியாது
ஆளாக்கி வாத்தியார் அனுப்பிவிட்டார் வெளிநாடு! அங்கிருந்து
தானாய் தவணைபோடடுத் தள்ளிவிடும் தடிப்பினிலே
பாழாக்கினார் பொடியைப் பாசத்தால் வாத்தியார் காண்!
சுளையாக வந்து குவிகின்ற ''சுதியிலே'' — கடைக்குட்டிக்குக்
களையாது வாங்கிக்கொடுக்கின்ற பொருள்களுள்ளே — என்
விதியின் வினையாலே வந்து சேர்ந்துவிட்டேன்—இந்த
மதிகெட்டானிடம், மாட்டிமுழிக்கின்றேன்!
வாட்டும் வெயிலுக்கு, வடிவுபார்க்க அவன்வாங்கிப்
பூட்டும் 'அணிகலன்கள்' — ஐயா!, பொறுக்கமுடியாது
அடுக்கிப் புத்தகத்தை அழகாகப் பின்னுக்கு
மிடுக்காய் வைத்துவிட்டு மிதிப்பானெனை 'மினி' நோக்கி
வாத்தியார் பெயர் சொல்லி வகுப்புக்கள் ஒவ்வொன்றும்
சித்திபெறுகின்றான், சத்தியமாய்ப் புத்தியில்லை!
பள்ளமென்ன மேடென்ன பார்க்காது அவனோட—என்
உள்ளம் கதறியழும்; உடல் பதறிவீழும்—ஆம்
நான் போனால் என்ன, நாளைக்கு இன்னோர்
காரெடுக்கத் தியாகர் காத்திருக்கும் நேரம்வரை!

*—அனலையூர்ச் சேந்தன்—*

## வம்புக்குணம் கொண்ட காகத்துக்கு!

என்தலைக்கு மேல் பறந்து வந்தாய் — வந்து
ஏளனமாய் எச்சமிட்டுச் சென்றாய்
புன்னகைத்து... மெல்லத் துடைத்திட்டேன் — உன்னை
பொருட்படுத்தாதென் வழியில் சென்றேன்.

முற்றத்தில் இருந்து உணவுண்டேன் — சொண்டால்
முட்டிப் பாண் கொத்திக் கொண்டு போனாய்
எண்கிணத்தில் என்புகளைப் போட்டாய் — ஏதும்
பேசலைநான்... சேட்டில் பீய்ச்சி விட்டாய்.

என்னைப்போல எல்லாரையும் எண்ணி — சும்மா
எச்சமிடும் காக்காய்... இதைக் கேள் நீ
வம்பைச் சிறுவர் பொறுக்கார்; ஏற்கார் — நீயும்
கேட்கா விட்டால் நின்று தட்டிக் கேட்பார்

விசமம் செய்து விட்டு அகன்று சென்றும் — நீ
நிம்மதியாய்த் தூங்கேலாது எங்கும்
தெருவில் கண்டால் கல்லெறிவார்! நீயும் — சுற்றித்
திரியின் 'கெற்றப் போலுடன்' தொடர்வார்

வம்புத் தனம் விட்டுக் கலந்தாடு — உன்னை
வரவேற்று வைப்போம் நிதம் சோறு
பண்ணுவேன் நான் இப்படித்தான்' என்றால் —அதன்
பலனும் உன்னைத் தேடி வரும் பின்னால்.

*— அருணன் —*

## அகராதி

**எயிட்ஸ்**

விபச்சார
வியாபாரத்தில்
வழங்கப்படும்
பற்றுச்சீட்டு

**தொலைக்காட்சி**

பள்ளி
மாணவருக்கு
தொல்லை கொடுக்கும்
குறும்புக் குழந்தை

**பாடசாலை**

எதிர்கால
தலைவர்களை
உருவாக்கும்
பயிற்சிப்
பாசறை

**சினிமா**

சீரழிக்க என
வந்த
மாயத்திரையின்
போலித் தோற்றம்

**காதல்**

இருஇளம்
இதயங்களின்
இணைவு.

*— துரை. சீலன் —*

## எடுப்பாக நிற்கும் சுடுகாடு

வலை போட்டு மீன்
பிடித்து
சோனப்புக் கடல்
வெளியில்
செல்கின்ற கன்னியரை
விழியாலே சாடை செய்து
வீற்றிருக்கும் கரவெட்டி
மதகு
எத்தனை வாலிபரின்
உள்ளத்தை
தைக்கின்றது?

ஒய்யார நடை நடந்து
மாடாடு மேய்த்து வரும்
சோனப்பு தரை வழியின்
சோகக் கதைகள்
கனகம் அக்காவின்
மனதிலெரி மூட்டுகிறது.

உறைப்பான
காற்றடிக்கும்
உப்புவெளி நீர்க்கிணறு
தப்புக்கு இடம்கொடுத்து
தலையசைக்கும் பனை
மரங்கள்
இளசுகளின் வரவுகளை
எதிர்பார்த்து
கலங்கிறது.

வைகறை வேளையிலே
விழித்தூக்கம்
விட்டெழுந்து
சமைப்பதற்கும்
குடிப்பதற்கும்
குளிப்பதற்கும் பாத்திரங்
கள் கழுவுதற்கும்
ஆள் மாறி யோடோடி
ஒற்றி நீர் அள்ளுகின்ற
அத்துளுக் கிணறும்
நம்மவர் எங்கென்று
நீள் மூச்சு விடுகிறதே!

எல்லாமே துயர் மூழ்கிக்
கண்ணீரில் குளிக்கையிலே
ஒன்றுமில்லை என் ஆயுள்
இன்றோடு நீண்ட
தென்று
சோனப்புச் சுடலை
மட்டும்
எடுப்பாக நிற்கிறது!

*—கரவை க. சுதர்மினி—*

## காற்றடிக்கும் காலம்

வேனில் வந்ததால் வேகங்கொண்டுமே
வீசுங் காற்றினைப் பாரடா!—உயர்
வானில் நின்றநம் மேகந்தள்ளியே
வாழுங் காற்றினைப் பாரடா!

தூசி அள்ளியே வீசி வீட்டினுள்
தூய்மை தன்னையே மாற்றுது!—தெரு
மாசு தள்ளியே கூச்சமின்றியே
கூட்டும் வேலையு மாற்றுது!

வட்டக் குடையினை வளைத்து வைப்பதில்
வல்ல 'சேட்டை'யைப் பாரடா—பெண்கள்
சட்டை தூக்கவே பார்க்குதே அதன்
சாதி ஆண்களோ கூறடா!

திறந்த ஜன்னலை மூடி வைக்கவே
செய்யும் கூலியைக் கேட்குமா?
பறந்து கூரையின் தகரம் பிய்த்துமே
பாடுபடுத்துதே பார்ப்பமா!

சைக்கி ளோடவே தள்ளி வருகுதே
தம்பி, காற்றினைப் பாடடா
தைத்து எதிரெனத் தள்ளும் நெஞ்சிலே
தாக்கும் காற்றினைப் பாடடா!

வெக்கை குறைத்துஎம் வியர்வை ஆற்றவே
வீசு காற்றது வாழ்கவே
எட்டு மூலையின் பட்டம் வானிலே
ஏற்றுங் காற்றது வாழ்கவே!

*—கி. வாயுபுத்திரன்—*

## தக்கன் மகளா உலகின் தாய்?

13 - 06 - 1998 சஞ்சீவியில் பிரசுரமான 'விண்பழிகள் எதற்காக?' என்ற கவிதைக்கு மறுபதில் இங்கு பிரசுரமாகுகின்றது.

அன்னை யுங்களின் ஆதங்கத்தினை
ஏற்கிறேன் — செவி — சாய்க்கிறேன்
ஒன்று மட்டுமென் சின்னப் புத்திக்கு
எட்டுதே — பொறி — தட்டுதே.

கோடி யண்டமும் நின்றே இயங்கிடச்
செய்வதார்? அருள் பெய்வதார்?
வாடும் புல்லையும் தேடிக் காப்பது
யார்கடன்? இதைத் தேர் உடன்.

மாயை போர்த்திய லோக 'வித்தையின்'
அன்னைநீ — அதன் — தன்மைநீ
சேயைக் காப்பதும் சிதைய விடுவதும்
உன்செயல்; இது வன்செயல்

வாள் வடித்திடப் புத்தி கொடுப்பதும்
வார்ப்பதும் நிணம் சேர்ப்பதும்
ஊழ்வினைப்படி என்று எதனையும்
பார்க்க நாம் தட்டிக் கேட்க நீ

ஆள்வதோ பராசக்தியின் சித்தமே
என்பதே எங்கள் பண்பதே
தாழ்பணிந்துநான் சொல்கிறேன் மீண்டுமே
சூலிநீ யொரு கோழைநீ

ஆழ்ந்திருக்கிற என்றன் கவியுளக்
அன்றிதைத் தான் எண்ணியே
சூழ்த்திருப்பதெக் அன்னை அவளிதைப்
பார்த்துமா தட்டிக் கேட்டிடாள்

வாழ்ந்திருக்கிற அத்தனை உயிரிலும்
ஆழ்ந்தநீ அண்டம் சூழ்ந்தநீ
கோழை போல்எமில் குற்றம் சுமத்துதல்
நீதியோ? சிவன் பாதியோ?!

கோழி கொத்தியே குஞ்சு கள்நொண்டி
ஆகுதே உயிர் வேகுதே
ஊழிநர்த்தனம் நீங்க ளாடநாம்
மேடையோ பாவக் கூடையோ?

நாம் எமக்குள்ளே கைகலந்திடச்
செய்வதார் நிணம் பெய்வதார்?
சேமந் தந்திட உள்ள மற்றதோர்
தெய்வமேன்? நாங்கள் சைவமேன்?

கீதை சொல்லிய வாறிவ் வழக்கினைப்
பார்க்கவா? நீதி தீர்க்க வா
பாதை காட்டுதல் அந்தப் பரம்பொருள்
சித்தமே எம்மில் குற்றமேன்?

வாளைப் போலவே நாமும் உங்களின்
கருவியே நீயும் அறிவியே
ஏழையெங்களை இயக்கி வைத்தது
யார்பிழை இதைத் தேர்பி(ன்)னை

முந்தி நீயுமோர் வேள்விபோயுமே
நொந்ததால் உள்ளம் வெந்ததால்
இன்று மீண்டுமேன் சோவியென்பதுன்
சித்தமோ? மண்ணில் ரத்தமோ?

*— ச. முகுந்தன் —*

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சூதாடிய சமயம் தருமனுக்கு உதவுவதற்கு ஆபத்பாந்தவன் கிருஷ்ணன் வராதது ஏன்?

பகவான் ஸ்ரீ கிருஷ்ணனின் குழந்தைப் பருவம் முதலே, அவருக்குப் பணிவிடைகள் செய்து, தேரோட்டி, பல்வேறு சேவைகள் புரிந்தவர், உத்தவர். தன்னலம் இல்லாமல் கண்ணனுக்கு சேவை செய்த உத்தவர், தன் வாழ்நாளில் அவனிடம் தனக்கென நன்மைகளையோ வரங்களையோ கேட்டுப் பெற்றதில்லை.

துவாபரயுகத்தில், தன் அவதாரப் பணியை முடித்துவிட்ட நிலையில், ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு நாள் உத்தவரிடம், ''உத்தவா! இந்த அவதாரத்தில் பலர் என்னிடம் பல வரங்களும் நன்மைகளும் பெற்றிருக்கின்றனர் ஆனால் நீ எதுவுமே கேட்டதில்லை. என் அவதாரப்பணி முடியும் நேரம் வந்துவிட்டது. ஏதாவது கேள் தருகிறேன். உனக்கும் ஏதாவது நன்மைகள் செய்துவிட்டுத்தான் என் அவதாரப் பணியை முடிக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.'' என ஸ்ரீ கிருஷ்ணன் கூறினான்.

தனக்கென எந்தப் பொருளையும் விரும்பிக் கேட்கத் தெரியாதவன் உத்தவன். ஆனால், கேள்விகள் கேட்கத் தெரிந்தவன் அவன். சிறு வயது முதலே கண்ணனின் செயல்களைக் கவனித்து வந்த உத்தவனுக்கு, பல சந்தேகங்கள் மனதில் இருந்தன. சொல் ஒன்றும், செயல் மற்றொன்றுமாகத் தெரிந்த கண்ணனின் லீலைகள், அவனுக்குப் புரியாத புதிராக இருந்தன. காரண காரியங்களைத் தெரிந்து கொள்ள உத்தவனின் மனம் விரும்பியது.

''பெருமானே! நீ வாழச் சொன்ன வழி வேறு; நீ வாழ்ந்து காட்டியவழி வேறு! ராஜசூயத்தில் தொடங்கி குருஷேத்திரத்திலே முடித்து வைத்து, நீ ஒரு நாடகம் நடத்தினாயே, 'மகாபாரத நாடகம்'! அதில் நீ ஏற்ற பாத்திரத்தில், நீ புரிந்த செயல்களில் எனக்குப் புரியாத உண்மைகள் பலப்பல உண்டு. அவற்றிற்கெல்லாம் காரணங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள நெடுநாளாக ஆவலாக இருக்கிறேன் நிறைவேற்றுவாயா?'' என்றான் உத்தவன்.



''உத்தவா! அன்று குருஷேத்திரத்தில் அர்ஜுனனுக்காகச் சொன்னது, 'பகவத்கீதை' இன்று உன் கேள்விகளுக்கு நான் தரும் பதில்கள் 'உத்தவ கீதை' அதற்காகவேதான் உனக்கு இந்த சந்தர்ப்பத்தைத் தந்தேன். தயங்காமல் கேள்'' என்றான் பரந்தாமன்.

''கிருஷ்ணா! சொந்த சகோதரர்களின் சொத்துக்களை அபகரிக்க, பாண்டவர்களை ஹஸ்தினாபுரம் அழைத்து, விருந்து தந்து, பின் விளையாட்டாக, தருமனை சூதுக்கழைத்தான் துரியோதனன்.

ராஜ தர்மத்தை உத்தேசித்து, தருமனும் ஒத்துக் கொண்டான். நீ பாண்டவர் நண்பன். உன்னை அவர்கள் ஆபத்பாந்தவன் என்று பரிபூரணமாக நம்பினார்கள். நீயோ நடப்பதை மட்டுமல்ல. நடக்கப்போவதையும் நன்கறிந்த ஞானி. தீமைகள் நிகழ்வதை முன்னதாகவே தடுக்க அங்கே சென்று, ''தருமா! வேண்டாமிந்த சூதாட்டம்'' என்று நீ தடுத்திருக்கலாம். அதை நீ செய்யவில்லை. போகட்டும். விளையாட ஆரம்பித்தான் தருமன்.

''அதிர்ஷ்டத்தையாவது அவன் பக்கம் திருப்பி, வஞ்சகர்களுக்கு நீதி புகட்டியிருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை. தருமன் ராஜ்யத்தை இழந்தான்; தன்னையும் இழந்தான். போகட்டும் சூதாடியதற்குத் தண்டனையாக அதோடு விட்டிருக்கலாம்.

''தம்பியர்களைப் பணயம் வைத்தான் தருமன். அப்போதாவது உன் தெய்வீக சக்தியால், சூதாட்டக் காய்களைத் தருமனுக்குச் சாதகமாக விழவைத்து, தருமனின் தம்பிகளையாவது, அடிமையாகாமல் காப்பாற்றியிருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை. அபலைப் பெண், ஒரு பாவமும் அறியாதவள், திரௌபதி. உனக்குச் சகோதரி. அவளையும் வைத்துச் சூதாடினான் தருமன்.

## உத்தவ கீதையில் அவனே விளக்கம்

''தருமனைப் பார்த்து 'உங்கள் ஐவருக்கும் மனைவி திரௌபதி. அவள் அதிர்ஷ்டம் மிக்கவள். அவளை பணயம் வைத்து ஆடு. இழந்தது அனைத்தையும் திருப்பித் தருகிறேன்.'— என்று சவால் விட்டான் துரியோதனன். நீ வலியச்சென்று உதவி புரிய உனக்கே ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்தான் அவன். அப்போதாவது அந்தப் பொய்யான பகடைக் காய்களை, தருமனுக்குச் சாதகமாக விழச் செய்திருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை. மாறாக, திரௌபதியைத் தோற்று, அடிமையாக்கி, அவைக்கு அழைத்து வந்தார்கள். அவள் துகிலை உரிந்து மானம் பறிபோகும் நிலை ஏற்பட்டபோது சென்று 'துகில் தந்தேன். திரௌபதி மானம் காத்தேன்' என்று மார்த் தட்டிக் கொண்டாய்.

''ஆபத்தில் உதவுபவன் அல்லவா, ஆபத்பாந்தவன்? இந்நிலையில் உதவாத நீயா ஆபத்பாந்தவன்? நீ செய்தது தருமமா...? நியாயமா?''— என்று உணர்ச்சிப் பொங்க, கண்ணீர் மல்கக் கேட்டான் உத்தவன்.

இது உத்தவனின் உள்ளக் குமுறல் மட்டுமல்ல; நம் அனைவருமே மஹாபாரதம் படித்துவிட்டுக் கேட்கின்ற கேள்விகள்தான் இவை. நமக்காக இவற்றை அன்று கண்ணனிடம் கேட்டிருக்கிறான் உத்தவன். பகவான் சிரித்தார்.

''உத்தவா நன்றாகக் கேட்டாய்! பதில் கூறுகிறேன். விவேகமுள்ளவன் ஜெயிக்க வேண்டுமென்பதுதான் கர்ம நியதி. துரியோதனனுக்கு இருந்த விவேகம் தருமனுக்கு இல்லை! அதனால் தருமன் தோற்றான். விவேகமுள்ள துரியோதனன் ஜெயித்தான்.''

''துரியோதனனுக்கு சூதாடத் தெரியாது ஆனால், பணயம் வைக்கப் பணம் இருந்தது. 'பணயம் நான் வைக்கிறேன். மாமா சகுனி பகடையை உருட்டிச் சூதாடுவார்' என்றான் துரியோதனன். அது விவேகம். தருமனும் அதுபோல விவேகத்துடன் 'நானும் பணயம் வைக்கிறேன். என் சார்பில் என் மைத்துனன் கண்ணன் ஆட்டத்தை ஆடுவான்' என்று சொல்லியிருக்கலாமே?


''சகுனியும் நானும் ஆடியிருந்தால், யார் ஜெயித்திருப்பார்கள்? நான் கேட்கும் எண்ணிக்கைகளைச் சகுனியால் பகடைக் காய்களில் போடத்தான் முடியுமா? அல்லது அவன் கேட்கும் எண்ணிக்கைகளை என்னால்தான் போட முடியாதா? போகட்டும். என்னைக் கூப்பிடத்தான் இல்லை. அதோடுவிட்டானா தருமன்? 'ஐயோ! சூதாட்டத்திற்கு ஒப்புதல் தந்துவிட்டேனே இது கிருஷ்ணனுக்கு மட்டும் தெரியக்கூடாது. கடவுளே, அவன் மட்டும் இங்கு வராமல் இருக்கவேண்டும்' அன்று வேண்டினான்.

''என்னை மண்டபத்துக்குள் வரமுடியாமல், கட்டிப் போட்டுவிட்டான். யாராவது தன் பிரார்த்தனையால் என்னைக் கூப்பிடமாட்டார்களா? என்று மண்டபத்துக்கு வெளியில் காத்துக்கொண்டு நின்றேன்''.

''பீமனையும், அர்ஜுனனையும், நகுலசகாதேவர்களையும் வைத்திழந்த போதும், அவர்கள் துரியோதனனைத் திட்டிக்கொண்டும், தங்களை எண்ணி நொந்து கொண்டுமிருந்தார்களே தவிர, என்னைக் கூப்பிட மறந்துவிட்டார்களே?''

''அண்ணன் ஆணையை நிறைவேற்ற துச்சாதனன் சென்று திரௌபதியின் சிகையைப் பிடித்த போதுகூட, அவள் என்னைக் கூப்பிட்டாளா? அப்போது தருமன் எனக்கிட்ட விலங்கை உடைத்தெறிந்து விட்டு, ஓடிச் சென்று உதவி செய்திருப்பேனே! ஆனால் அவளும் தன் பலத்தையே நம்பி, சபையில் வந்து, வாதுகள் செய்து கொண்டிருந்தாளேயொழிய என்னைக்கூப்பிடவில்லையே? எப்பொழுதாவது கூப்பிட மாட்டாளா என்று காத்துக் கொண்டிருந்தேன். துச்சாதனன் துகிலை உரிய ஆரம்பித்தான். நல்லவேளை அப்போதும் தன் பலத்தால் போராடாமல் 'ஹரி! ஹரி! அபயம் ...கிருஷ்ணா ... அபயம்' என்று குரல் கொடுத்தாள். நான் அவளுடைய மானத்தை அப்போது காப்பாற்ற முடிந்தது. இதில் என்மீது தவறு ஏதும் உண்டா உத்தவா?'' என்று குழந்தை போல் பதிலளித்தான் கண்ணன்.

''அருமையான விளக்கம் கண்ணா! நான் அசந்துவிட்டேன். ஆனால் ஏமாறவில்லை. மீண்டும் கேள்வி கேட்கலாமா?'' என்றான் உத்தவன்.



''கேள்'' என்றான் கண்ணன்.

''அப்படியானால், நீ கூப்பிட்டால்தான் வருவாயா? நீயாக, நீதியை நிலைநாட்ட ஆபத்துக்களில் உன் அடியவர்களுக்கு உதவ வரமாட்டாயா?''

புன்னகை பூத்தான் கண்ணன். ''உத்தவா, மனித வாழ்க்கை அவரவர் கர்ம வினைப்படி அமைகிறது. நான் அதில் குறுக்கிடுவதும் இல்லை; நான் அதை நடத்துவதுமில்லை.

''நான் வெறும் 'சாட்சி பூதம்'. நடப்பதையெல்லாம் அருகில் நின்று பார்த்துக் கொண்டு நிற்பவன்தான். அதுதான் தெய்வ தர்மம்'' என்றான்.

''நன்றாயிருக்கிறது கிருஷ்ணா. அப்படியானால், நீ அருகில் நின்று, நாங்கள் செய்யும் தீமைகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருப்பாய். நாங்கள் தவறுகளைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்து பாவங்களை அனுபவித்துக்கொண்டிருப்போம். அப்படித்தானே? இது உண்மையானால் உன்னை பூஜிப்பதிலும், வேண்டுவதிலும், ஒரு பயனும் இல்லையே?'' என்றான் உத்தவன்.

''உத்தவா! நான் சொன்ன வாசகங்களின் உட்பொருளை நன்றாக உணர்ந்து பார். நான் சாட்சி பூதமாக அருகில் நிற்பதை நீ உணரும் போது, உன்னால் தவறுகளையோ — தீவினைகளையோ நிச்சயமாகச் செய்ய முடியாது அதை நீ மறந்துவிடும் போதுதான் எனக்குத் தெரியாமல் செயல்களைச் செய்துவிடலாம் என்று எண்ணுகிறாய். இத்தகைய சம்பவங்கள் அப்போதுதான் நிகழ்ந்துவிடுகின்றன. எனக்குத் தெரியாமல் சூதாடலாம் என்று தர்மன் நினைத்தானே, அதுதான் அவன் செய்த பெரும் தவறு. நான் சாட்சி பூதமாக எப்போதும் எல்லோருடனும் இருப்பவன் என்பதை தர்மன் நினைத்திருந்தால், இந்த சூதாட்ட நிகழ்ச்சி வேறுவிதமாக முடிந்திருக்கும்'' என்றான் பகவான் ஸ்ரீகிருஷ்ணன்.

உத்தவனால் இந்த சம்பவம் பற்றி மேலும் கேள்விகள் கேட்க முடியவில்லை.

எத்தனை ஆழமான தத்துவம்! எத்தனை உயர்ந்த சத்தியம்!

நன்றி: ஞானபூமி

# மெழுகுச் சிலையாக புகழ்மிக்க நடிகர்!

லியானார்டோ டி கேப்ரியோ — 'டைட்டானிக்' திரைப்படம் மூலம் உலகப் புகழ்பெற்ற நடிகராகி விட்டார்.

உலகப் பிரபலங்களை மெழுகுச் சிலைகளாக வடிக்கும் பிரிட்டனின் 'மேடம் துஸே' காட்சியகத்தில் இவரது உருவத்தை மெழுகுச் சிலையாக வைக்கலாமா என்று யோசித்து வருகிறார்கள். அந்த அளவுக்குப் பிரபலமாகி விட்டார் கேப்ரியோ.

இந்த காட்சியகத்தின் மெழுகுப் பொம்மைகள் சர்வதேசப் புகழ்வாய்ந்தவை. இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி உட்பட சென்ற ஆண்டு கார் விபத்தில் காலமான இளவரசி டயானா வரை உலகப் பிரபலங்களின் மெழுகுப் பொம்மைகள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. மெழுகில் ஒரு பொம்மையை உருவாக்க குறைந்தது ரூ 30 லட்சம் செலவாகிறது. மகா தத்ரூப்மாக உயிர் இருப்பது போன்ற தோற்றத்துடன் இந்த மெழுகுச் சிலைகள் வடிக்கப்படுகின்றன. எனவே மக்கள் மனத்தில் சிறிது காலமாவது இடம்பெறக் கூடியவர்களே இங்கு பொம்மைகளாக நிற்கத் தகுதியுள்ளவர்கள்.

# கடிகாரம் ரூ 1,000 கோடி!

சமீபத்தில் ஜெனீவாவில் நடந்த கடிகாரக் கண்காட்சியில் ஒரு மணிக்கூடு வைக்கப்பட்டது. 'ஸ்டைடிங் குளக்' என்ற இந்தக் கடிகாரத்தின் விலை என்ன தெரியுமா?

இலங்கைப் பணத்தில் ஆயிரம் கோடி ரூபா!

அம்மாடியோவ்! ஏன் இந்த விலை?

இந்தக் கடிகாரத்தில் இருப்பது 926 வைரங்கள், ஐம்பது மரகதக் கற்கள், இரண்டு சிவப்புக் கற்கள், 930 கிராம் எடைக்கு தங்கம். பின்னர் விலைக்குக் கேட்பானேன்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு

சஞ்சீவி சிறுகதை

காலை முதல் ஒரே நிலையாக நின்றதில் கால்கள் கடுக்கத் தொடங்கின. உடலும் சோர்ந்து விட்டது. கொஞ்ச நேரமா? சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இந்த நிலையில் நின்றால் இப்படி ஏற்படும் தானே?

கூட்டுறவுச் சங்கக் கிளையில் உலர் உணவுப் பொருள்களின் நிவாரணத்தைப் பெறத்தான் நின்று கொண்டிருக்கிறேன்.

இன்று எனக்குப் பல்வேறு வேலைகள் இருந்தன. ஆகவே காலையில் வேளைக்கே இங்கு வந்து விட்டேன்.

நேற்று மாலை முதலே மனைவி என்னை நச்சரிக்கத் தொடங்கி விட்டாள். இன்று முதல் வேலையாக நிவாரணத்தை எடுத்துத் தந்து விடவேண்டும் என்பது அவளது கடுமையான உத்தரவு. வீட்டிலே அரிசி முடிந்து விட்டது. எடுத்துக் கொடுக்காவிட்டால் சமையல் நின்று விடும்.

தனியார் வர்த்தக நிலையங்களிலே அரிசி வாங்க இப்போதைய பொருளாதாரச் சூழலில் கட்டுபடியாகாது. மீளக் குடியமர்ந்த பின்பு பல வித பாதிப்புக்கள். முன்பு போல எந்தத் தொழில்களையும் செய்து வருமானம் தேட முடியாத நிலை.

ஆகவே நிவாரணத்தைப் புறக்கணித்து வாழ முடியாது. இதில் கௌரவம் என்ற பேச்சுக்கு இடமில்லை.

காலையில் வேளைக்குச் சென்றால் ஆள்கள் அதிகம் இராது. சுலபமாக நிவாரணப் பொருள்களைப் பெற்றுச் செல்லலாம் என்ற நம்பிக்கையோடு தான் முதல் வேலையாகக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்கு வந்திருந்தேன். ஆனால் அங்கே வந்த பின்பு தான் நிலைமை புரிந்தது. எனக்கு முன்பே பலர் வந்து காத்திருந்தனர். ஆனால் கிளை திறக்கப்படவில்லை. வந்த முறைப்படி வரிசையாக நின்றிருந்தனர். நானும் வரிசையில் புகுந்து கொண்டேன்.

நேரம் பத்துமணியை அண்மித்து விட்டது. இன்னும் கிளை முகாமையாளரைக் காணவில்லை. எட்டு மணிக்கு வந்தவர் இரண்டு மணித்தியாலங்கள் ஒரே நிலையில் நின்றால் கால்கள் கடுக்காமல் இருக்குமா? காலையின் உணவுக்காகப் பாண் வாங்குவது, பிள்ளைகளைப் பாடசாலையில் கொண்டு போய் விடுவது, இப்படிப் பல நிரந்தரக் கடமைகள் தினமும் காலை வேளையில் எனக்குண்டு. அவற்றைப் பின்பு வந்து கவனிக்கலாம் என்ற நோக்கத்தோடுதான் இங்கு வந்தேன். ஆனால் இவ்வளவு நேரம் தாமதமாகும் என்று எப்படித் தெரியும்?

இன்னும் சிறிது நேரத்தில் கிளை திறக்கப்பட்டு விடும் என்ற நப்பாசையில் நேரத்தைக் கடத்தியாகி விட்டது. வீட்டிலே பாண் வாங்காததனால் காலை உணவு தடைப்பட்டிருக்கும். பிள்ளைகள் பாடசாலைக்கு நடந்தே போயிருப்பார்கள். நேரம் பிந்திச் சென்று பாடசாலையில் என்ன தண்டனைக்கு அவர்கள் உள்ளானார்களோ தெரியாது.

என்னுடன் வரிசையில் காத்திருப்பவர்களுக்கும் இது போல எத்தனை பிரச்சினைகளோ? ஆனால் இதைப் பற்றிக் கிளையின் முகாமையாளர் சிந்தித்ததாகத் தெரியவில்லை. இல்லையெனில் எட்டரை மணிக்குத் திறக்கப்பட வேண்டிய கிளை பத்துமணியாகியும் திறக்கப் படாதிருக்குமா?

''மனேச்சர் வாறார்...''

அருகில் நின்றவர் முணுமுணுத்தார். சிந்தனையிலிருந்து விடுபட்டுத் திரும்பிப் பார்த்தேன். வந்துவிட்டார் தான்.

''தலைமையகத்திற்குக் காசு கட்டப் போனன். அங்கே சரியா மினக்கெட்டுப் போச்சுது.''

முகாமையாளர் தாம் பிந்தி வந்ததற்கான சாட்டை ஒப்பித்தார். ஆனால் சனங்கள் அதனை காதில் வாங்கும் நிலையில் இல்லை. ஏதோ கிளையைத் திறந்து நிவாரணத்தைத் தந்தால் போதும் என்பது அவர்களின் நிலைப்பாடு. காசு கட்டுவதில் என்ன தாமதம் இருக்கிறது என்றோ, அதற்குச் சுமார் இரண்டு மணித்தியாலம் தேவைப்பட்டதா என்றோ ஆராயவோ முகாமையாளரைக் குறுக்கு விசாரணை செய்யவோ முற்படவில்லை; ஏன் அதிகம் வேண்டும், நானே அந்த மனநிலையில் இல்லை. எப்படியாவது விரைவாக அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்பதே எண்ணமாக இருந்தது. பின்னால் பல அலுவல்கள் நிரையாகக் காத்திருந்தன.

முகாமையாளர் எல்லோருடைய உலர் உணவு முத்திரைகளையும் வாங்கி அடுக்கி வைத்தார். குறிப்பிட்ட தொகையினருக்கு முதலில் விற்பனைச் சிட்டைகளை எழுதி முடித்தார். பின்பு தானும் விற்பனையாளருடன் இணைந்து பொருள்களை நிறுத்துக் கொடுக்கத் தொடங்கினார்.

தூக்குத் தராசு ஒன்றைக் கொண்டுவந்து கொழுவி விட்டு அரிசியை அதில் நிறுத்தார்.

''இதிலை நிறுத்தால் கெதியா வேலை முடிஞ்சிடும். நீங்களும் கெதியாய்ப் போகலம்...''

- பழையூர் கு. சி. சுந்தரம்பிள்ளை -

முகாமையாளர் கூறிய காரணம் இது. ஏனெனில் கீழே வைத்து நிறுக்கும் தராசு இருந்தது. அதில் நிறுக்கும்போது நிறை சரியா என்பதைக் கண்காணிப்பது சுலபம்.

ஆனால் இவைபற்றியெல்லாம் ஆராயும் நிலையில் நாம் இல்லை. எங்களுக்கு அவசரம்.

என்னுடைய முறை வந்தது. அவசரமாக வாங்கிக்கொண்டு வெளியேறினேன், வீட்டிலே கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு காலைச் சாப்பாட்டையும் தவிர்த்துக் கொண்டு வெளியேறிவிட்டேன்.

நண்பகலுக்குப் பின்புநான் வீடு திரும்பியபோது மனைவியிடமிருந்து பெரிய முறைப்பாடு காத்திருந்தது.

அரிசியில் எட்டு கிலோ வரையில் குறைகிறது என்றாள்.

எப்படித் தெரிந்தது என வினாவினேன். காலிக் கொத்து அளவுப் பேணியினால் அளந்து பார்த்திருக்கிறாள் என்பது தெரியவந்தது.

குத்தரிசி, பச்சை அரிசி என இருவகை அரிசிகள் இரண்டிலும் மொத்தமாக இவ்வளவு குறைவு.

தூக்குத்தராசு நிறை குறையக் காட்டியிருக்கிறது போலும் இரண்டு இன அரிசிகளையும் தனித்தனியே நிறுத்தபோது இவ்வளவு சோர்வு ஏற்பட்டுவிட்டது.

முகாமையாளர்தான் அரிசியை நிறுத்தார். அவர் ஏன் விற்பனையாளர் வேலையையும் செய்தார் என்பது இப்போதுதான் புரிந்தது.

இதுமட்டுமல்ல. முகாமையாளர் பிந்திவந்ததிலும் அர்த்தம் இருப்பதாகப் புலனாகியது. அவர் பிந்தி வரும்போது காத்திருக்கும் பாவனையாளர்கள் களைத்து விடுவார்கள். பின்பு நிறை பற்றிய அவதானங்களில் ஈடுபட மனம் இடம் கொடுக்காது. இந்த நிலைப்பாடு அவருக்குச் சாதகமாக அமையும்.

இதனை இப்படியே விட என்மனம் இடம் கொடுக்கவில்லை. அன்று மாலையே கிளைக்குழுவின் தலைவரைச் சந்தித்தேன். விவரமாகஎடுத்துக் கூறினேன்.

''சும்மா வாற சாமான் தானே உதையேன் தூக்கிப் பிடிக்கிறியள்?'' என்றார் பட்டென்று.

எனக்குதூக்கிவாரிப்போட்டது ஒருபுறம் ஆத்திரமாக இருந்தது.

''பின்பு நீங்கள் ஏன் தலைவர் எண்டு இருக்கிறியள்?'' கேட்டுவிட்டுப் பதிலுக்கும் காத்திராது திரும்பி விட்டேன்.

சில நாள்கள் கழிந்து சங்கக் கிளைக்குச் சில பொருள்கள் வாங்கச் சென்றிருந்தேன். அங்கே தலைவர் தமது நிவாரணப் பொருள்களை வாங்கிக்கொண்டிருந்தார்.

''இப்போதுதான் வாங்கிறீர்களா......?''

ஏதாவதுகதைக்கவேண்டும் என்பதற்காகக் கேட்டேன்.

''நான் எப்போதுமே இப்பிடித்தான். எல்லோரும் வாங்கி முடியத்தான் வாங்குவது வழக்கம். உத்தியோகத்தை துஷ்பிரயோகம் செய்து சலுகை பெறுவதாக மற்றவை சொல்லப்படாது பாருங்கோ......''

அமைதியாகப் பதில் அளித்தார். எனக்கும் அது நியாயமாகவே தோன்றியது.

தற்செயலாக அவதானித்தேன், அவருக்குக் குத்தரிசி மட்டுமே வழங்கப்பட்டது. பச்சைஅரிசி கொடுக்கப் படவில்லை. அதாவது பச்சை அரிசிக்குப்பதிலாக முழுவதும் குத்தரிசி.

அவர் சென்று விட்டார்.

''என்ன மனேச்சர் அவருக்குத் தனியக் குத்தரிசி......'' எனமெதுவாகக்கதைகொடுத்தேன்.

''ஓ......அதுவோ... பச்சை அரிசி சங்கத்திலை முடிஞ்சுதாம் தரேல்லை. அதுதான்...''

பிந்தி எடுப்பதிலும் லாபம் உண்டுதான். என்மனதிற்குள் நினைத்துக் கொண்டு திரும்பினேன்.


சில நாள்களின் பின்பு நான் கிளைக்குச் சென்ற போது அறிவித்தல் ஒன்று காணப் பட்டது.

''ஒருகிலோ பச்சை அரிசி வாங்குபவர்களுக்கு ஒரு கிலோ சீனி கட்டுப்பாட்டு

(x ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 56



சொற்சிலம்பம் இல. 56
சஞ்சீவி,
561, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 03 – 07 – 1998

**இடமிருந்து வலம்**

1. சாதகம் அல்ல. 4. ஊறி வரும் ஈரம் 6. மலையகத் தலைநகர். 7. உதாரம். 8. பிணக்கு. 11. புறக்கேறினால் வருவது 12. பாட்டி காகத்திடம் பறிகொடுத்தது. 13. பருப்பு வகை. 14. உயிர் வதை செய்தல். 15 அன்னை மாதா. 18 ஒரு நட்சத்திரம். 20. சோணுதல். 22. மூன்று நகரம். 23. ஒன்றுமில்லை என்பதைக் குறிப்பது.

**மேலிருந்து கீழ்**

1. நாலு முழம். 2. குளிர்மை 3. தபால். 4. கட்ட உதவுவது. 5. நுண்ணியது என்பதைக் குறிக்கும். 7. ஒரு மீன் வகை. 9 தாமரை. 10. சேனை. 11. உதவியாக அமைவது 12. மீன்பிடிக்க வீசுவது. 13. திருமணத்தால் பெண்ணின் பெயருக்குக் கிடைத்த அடைமொழி. 14. ஒருவரின் பொருளை அவர் பார்த்திருக்க பலவந்தமாக அள்ளிச் செல்வது 15. வாலி. 16. புண்ணியம் அல்ல. 17. தண்ணீரில் மலர்வது 19. யானை 21 பொருத்தமற்றதைக் குறிப்பது.

**சொற்சிலம்பம் 54 – விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. நீதிபதி. 4. மகுதி 7. சண்டை. 8 தரிசனை. 9. வீதம். 11. வரன். 12. பாம்பு. 14. கலன். 15. ராகு. 16 சாது. 18. பாரதி. 19. சடுகுடு. 21. புழுதி. 22. கலி.

**மேலிருந்து கீழ்**

1. நீசன். 2. திண். 3. படைவீரன். 4. மரி. 5. சூசகம். 6. திணை. 8. தம். 10. தன். 11. வலது. 12. பாகுபாடு. 13. புத்திசாலி. 14. கசாப்பு. 17. தடு. 19. சதி. 20. குறி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: ப. சாந்தி,
4 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

★ இரண்டாம் பரிசு: ஆ. சுப்பிரமணியதாஸ்,
123, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு: செல்வி பி. சாமினி,
மே/பா. ஆர். ரீ. பீடில்,
அந்தோனியார் கோயில் வீதி,
மானிப்பாய்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 55 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப் பூனை

கறுப்புப் பூனை வருகிறார்
கண்ணை உருட்டிப் பார்க்கிறார்
இருட்டு வேளைப் பூனையார்
எங்கே அங்கே போகிறார்?

பஞ்சு போன்ற கால்களால்
பதுங்கிப் பதுங்கிப் போகிறார்
அஞ்சிடாப் பூனையார்
அங்கே என்ன பார்க்கிறார்?

அடுப்பு மேலே ஏறியே
அமைதியாக நிற்கிறார்
இடுப்பை வளைத்து யாரையோ
எங்கே என்று தேடுகிறார்!

வளையில் வாலைப் பார்க்கிறார்
வழக்கம்போல மறைகிறார்
எலியார் தலையை நீட்டுகிறார்
எட்டி எலியைப் பிடிக்கிறார்.

கோ. துசியந்தன்
(ஆண்டு 8, பரியோவான் கல்லூரி)

# அழகான பூ

சின்னச் சின்னப் பூவாம்
சிவப்பு நிறப் பூவாம்
சிறந்த நல்ல பூவாம்
சிந்தை கவரும் பூவாம்!

வட்ட வட்டப் பூவாம்
வடிவான பூவாம்
வண்ண வண்ணப் பூவாம்
வரி வரிப் பூவாம்!

வகை வகையான பூவாம்
வருவோர் போவோரை
வருடிச் செல்லும் பூவாம்
வசந்த வாசப் பூவாம்!

நா. மகேந்திரலிங்கம்

# எங்கள் தாத்தா

எங்கள் தாத்தா பார்த்தியா?
எளிய தோற்றம் கண்டாயா?
பொங்கும் மகிழ்ச்சி பூக்கும்
பொக்கை வாயைக் கண்டாயா?

பொழுது போகக் கூறிடும்
பழைய கதைகள் கேட்டியா?
சூழும் சிறுவர் மகிழ்ந்திட
சொல்லும் புதிர்கள் கேட்டியா?

சரியாய் விடையைச் சொல்லுங்கள்,
சிரிக்க விட்டுக் கேட்கலாம்,
பரிவாய் நானும் அழைக்கின்றேன்,
பாலர் எல்லாம் வாருங்கள்!

ஸ்ரீராஜகுமார் சைமீ
(ஆண்டு 4, வண்ணை நாவலர் ம. வி.)

# ஆசை நாய்க்குட்டி

நல்ல நல்ல நாய்க்குட்டி
அழகான நாய்க்குட்டி

நான் வளர்க்கும் நாய்க்குட்டி
நன்றியுள்ள நாய்க்குட்டி

வாலை வாலை ஆட்டும்
வந்து என்னை நக்கும்

இரண்டு காலில் நடக்கும்
நான் வளர்க்கும் நாய்க்குட்டி

என்னைக் கண்டால் பாயும்
வெள்ள நிற நாய்க்குட்டி

புலியைப் போல பாய்ந்து
துள்ளி வரும் நாய்க்குட்டி

திருடன் வந்தால் குரைக்கும்
எலியைப் பிடிக்க ஓடும்

செல்லச் செல்ல நாய்க்குட்டி
வீரமான நாய்க்குட்டி

நன்றியுள்ள நாய்க்குட்டி
என் ஆசை நாய்க்குட்டி.

வி. விதுஷா
(யாழ். கன்னியர்மடம் ம. வி.)

# சாது விலங்கு நீர் யானை!

குட்டிபோட்டுப் பாலூட்டும் விலங்குகளில் யானைக்கு அடுத்து மிகப் பெரியது நீர் யானை. இப்பொழுது ஆபிரிக்காவில் மட்டுமே இது காணப் படுகிறது. இது பன்றியின் இனத்தைச் சேர்ந்தது என்று கூறலாம். ஆங்கிலத்தில் இதனை ஹிப்போபொட்டமஸ் (Hippopotamus) என்று அழைப்பர்.




நீர்யானை சுமார் நான்கு மீற்றர் நீளமும், ஒரு மீற்றர் உயரமும், நான்கு தொன் எடையும் உள்ளது. இதன் கால்கள் குட்டையானவை.

**பிராணிகள் உலகம்**

ஒவ்வொரு காலிலும் நான்கு விரல்கள் உண்டு. இதன் காதும், கண்ணும் மிகச்சிறியவை வாய் மிகப் பெரியது; திறந்தால் ஒரு குகை போலத் தோற்றம் அளிக்கும்.


நீர்யானை கரும்பழுப்பு அல்லது சாம்பல் நிறமுள்ளது இதன் தோல் மிகத் தடிப்பாக இருக்கும். உணர்ச்சிவசப்படும் போது நீர்யானையின் தோலில் சிவப்பான எண்ணெய் போன்ற பொருள் கசியும். இதை 'இரத்த வியர்வை' என்று சொல்வார்கள்.



நீர்யானை நீரில் நன்றாக நீந்தும். பகலில் இது தண்ணீரிலும் சேற்றிலும் புதைந்திருக்கும். அப்போது இதன் கண், காது, மூக்கு இவை மட்டும் தண்ணீருக்கு மேலே இருக்கும். இதன் தலை அத்தகைய அமைப்பைக் கொண்டது. இது ஒரு தாவரபோசணி. இரவில் வெளியே வந்து புல், கோரை முதலியவற்றை இது வேரோடு அகழ்ந்து எடுத்துத் தின்னும். வயல்களில் புகுந்து பயிர்களுக்குப் பெரும் சேதம் விளைவிக்கும்.

நீர்யானை சாதுவானது. ஆனால் தீங்கு நேரிடும்போது மிகக் கடுமையாகத் தாக்கும். தன் குட்டியைக் காப்பாற்ற இது தன் உயிரையும் பொருட்படுத்தாமல் சண்டையிடும்.

நீர்யானை ஒரு தடவையில் ஒரு குட்டிதான் போடும். இது சுமார் 50 ஆண்டுகள் வரை உயிர் வாழும். இதன் இறைச்சியையும் கொழுப்பையும் ஆப்பிரிக்க மக்கள் உண்கின்றனர்.




# மூளைக்கு வேலை!

பின்வரும் கேள்விகளுக்கு உங்களால் விடையளிக்க முடிகின்றதா பாருங்கள்!


1. ஒன்று தொடக்கம் இருபத்தியைந்துக்குள் எத்தனை முறை '2' இலக்கம் வரும்?

2. எந்த ஓர் எண்ணின் பாதி பூச்சியமாகும்?

3. ஒரு பெரிய மாமரம். நிருஷன் தனக்கு எட்டு வயதாக இருக்கும்போது அந்த மாமரத்தில் மூன்றடி உயரத்தில் ஓர் அடையாளம் இட்டான். இப்போது நிருஷனுக்கு வயது 14. அந்த அடையாளம் இப்போது என்ன உயரத்தில் இருக்கும்?

4. அண்ணன், தம்பி இரண்டு பேர் மூன்று மாம்பழங்களை வெட்டாமல் பகிர்வது எப்படி?

5.



மேலே படத்தில் காட்டப்பட்டுள்ள அறுகோணிக்குள்ளே எத்தனை சிறிய அறுகோணிகள் ஒளித்துக் கொண்டிருக்கின்றன என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

6. ஒரு கடிகாரத்தில் நண்பகல் 12 மணியிலிருந்து நள்ளிரவு 12 மணிக்குள் நிமிஷமுள், மணிகாட்டும் முள்ளை எத்தனை தடவைகள் கடந்து செல்லும்? சுச்சிதமாகக் கூறமுடியுமா?

(விடை XI ஆம் பக்கத்தில்)

# பொது அறிவு கேள்விகள்


1. இரண்டாம் உலகப்போர் தொடங்கிய வருடம் எது?
2. தங்கம் அதிகமாக கிடைக்கும் நாடு எது?
3. திரவ நிலையில் உள்ள உலோகம் எது?
4. பாலில் இருந்து தயாரிக்கின்ற கம்பளி எது?
5. மிதிவண்டியை கண்டு பிடித்தவர் யார்?
6. நியுசிலாந்தின் தலை நகரம் எது?
7. அமெரிக்காவைக் கண்டு பிடித்தவர் யார்?
8. உலகத்தின் புனித நாடு எனப்படுவது எது?
9. இந்துக்களின் புனித நூல் எது?
10. எழுதப்படாத பழைய மொழி எது?
11. பூட்டான் நாட்டின் தலை நகரம் எது?
12. இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற வருடம் எது?
13. முதலில் உலகைச் சுற்றி வந்த மாலுமி யார்?
14. பெரிய — ஆழமான — கடல் எது?
15. அணுவிலுள்ள இயங்கும் பகுதி எது?

## விடைகள்

1. 1939 ஆம் ஆண்டு
2. தென்னாபிரிக்கா.
3. இரசம்.
4. வானிட்டாஸ்.
5. மாக்மிலன்.
6. வெலிங்டன்.
7. கொலம்பஸ்.
8. ஜெருசலம்.
9. பகவத்கீதை
10. சுமேரிய மொழி
11. திம்பு
12. 1945 ஆம் ஆண்டு
13. மெகல்லன்
14. பசுபிக் கடல்
15. இலத்திரன்கள்

—அ. அன்ரனிக்குயின்—
(ஆண்டு 9, சென்ஜேம்ஸ் ம.வி)

# வார்த்தை விளையாட்டு




மேலேயுள்ள பலூன் மனிதன் வை... அள்ள பலூன்களில் சில எழுத்துக்கள் கு... பிடப்பட்டுள்ளன. அவற்றை வைத்... கொண்டு ஐம்பது சொற்களை உங்கள்... உருவாக்க முடிகின்றதா பாருங்கள்.

(விடை XI ஆம் பக்கத்தில்)


# யார் தெரிகின்றதா...

இந்தப் பக்கத்தில் உள்ள ஒருவர்தா... இங்கு ஒளிந்து கொண்டிருக்கின்றார். ... ரைக் கண்டு பிடிப்பதாயின் இங்கு ஒ... முதல் 35 வரையுள்ள இலக்கங்களுக்கு... புள்ளிகளை இணைத்துப் பாருங்கள்.



# மெல்ல நகருபவர்

மெல்ல நகருபவர் இங்கு ஒளித்... கொண்டிருக்கிறார். அவரைக் கண்டு பிடி... தாயின் ஒன்று தொடக்கம் 37 வரையு... இலக்கங்களுக்கான புள்ளிகளை இணைத்... பாருங்கள்.



# நட்பு

காசு பொருள் பாராதது நட்பு
உடலழகு பாராதது நட்பு
சொந்தத்தால் வராதது நட்பு
தெரிந்தவுடன் வராதது நட்பு
பெருமையால் வராதது நட்பு

பழகியதன் விளைவே நட்பு
மனத்தின் உணர்ச்சியே நட்பு
ஆத்மாவின் இசைவே நட்பு
அன்பினால் வருவதே நட்பு
மனத்தின் இலக்கணமும் நட்பே!

பா. சுபதீசன்
(ஆண்டு 9, நாவற்குழி ம. வி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சிந்தனையில்

# நவீனத்துவ உத்தி

# 'திறந்த கற்றல்' முறை!

- த. ஸ்ரீ முரளி -
(வவுனியா கல்விக் கல்லூரி)

''நவீனத்துவம்'' என்பது இன்று பல துறைகளிலும் பல்வேறுசந்தர்ப்பங்களிலும் அறிமுகப்படுத்தப்படுவதும், நடைமுறைக்கு உள்வாங்கப்படுவதும் பரந்தளவில் காணக்கூடிய தொன்றாகிவிட்டது. பல்வேறு தேவைகளை உள்ளடக்கும் சமூகத்தில் மருத்துவத்துறை, வர்த்தகத்துறை, கலைத்துறை போன்ற பல துறைகளிலும் நவீன எண்ணக் கருத்துக்களும் (Concepts) கோட்பாடுகளும் (Theories) முக்கியத்துவம் பெறும் போது, கல்விச் சிந்தனைகளிலும் அடிப்படைக் கோட்பாடுகளிலும் நவீனத்துவம் பெறும் புதிய கருத்துக்கள் நடைமுறைக்கு வருகின்றன.

கல்வித்துறையில் ஏற்படும் இப்படியான மாற்றங்களும், புதிய எண்ணக்கருத்துக்களும் பெற்றோர், ஆசிரியர், மாணவர் என்கின்ற முக்கூரப்பினருக்கும் அறிமுகப்படும் போதே கல்வியின் புதிய சிந்தனை வடிவங்கள் செயலுருப் பெறும். மேற்குலக நாடுகளில் ஏற்பட்ட கல்விக்கான புதிய அணுகுமுறைகளும், சிந்தனைகளும் எமது நாட்டில் அவ்வப்போது நடைமுறையில் காணப்பட்ட போதிலும் அதன் உண்மை விளக்கங்கள் சரியாக அறிந்தாராயப்படவில்லை. இதற்கு நாம் எம்மையே அடிமையாக்கிக் கொண்ட மரபுரீதியான கல்விஅமைப்பையே காரணம் காட்ட முடிகின்றது. இந்நிலையில் அண்மைக் காலங்களில் அறிமுகப் படுத்தப்பட்டு செயல்வடிவம் பெறுகின்றதும், 21 ஆம் நூற்றாண்டுக்கான கல்விச் சிந்தனைகளுள் முக்கியம் வாய்ந்ததாகவும் ''திறந்த கற்றல்'' என்னும் புதிய சிந்தனை பரிணமித்துள்ளது.

கல்வி பற்றியும் கற்றல் பற்றியும் பண்டைக் காலம் தொட்டு இன்றுவரை பல்வேறு கோட்பாடுகளும், கருத்துகளும் முன்வைக்கப் பட்டுள்ளன. தத்துவரீதியாக பிளேட்டோ, ரூஸோ, அரிஸ்டோட்டில் போன்ற கல்விச் சிந்தனையாளர்களில் தொடங்கி நவீன கருத்துக்களை முன்மொழிந்த ஜீன் பியாஜே, ஜோன்டூயி (John Duoe) போன்றோரின் கருத்துக்களும், கோட்பாடுகளும் இன்று கல்வி உலகால் கடைப்பிடிக்கப்படும் அம்சங்களாகும். இவர்களின் கோட்பாடுகள் ஆசிரியர் கல்விக்கான கலைத்திட்டத்தில் (Syllabus) இணைக்கப்படுவதால் அவை ஆசிரியர்களுக்கு பரிச்சயமுள்ளனவாக அமைந்தன.

அண்மைக்காலங்களில் அவசர அவசரமாக ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப் படுவதாலும் ஆசிரியர்கள் போதுமான தொழில் தகைமைகளைப் பெறமுடியாமல் போவதாலும் நவீன கல்விச் சிந்தனைகள் ஆசிரியர்கள் மூலம் சமூகத்திற்கு சென்றடைவதில்லை.

எனினும் ''மாறும் உலகோடு நவீன கற்பித்தல் அனுபவங்களைப் பெறுதல்'' என்கின்ற ரீதியில் நவீன கோட்பாடுகளுக்கமைய கற்றல்—கற்பித்தல் நடவடிக்கைகளை கட்டி எழுப்பும் போதும் அவற்றை நடைமுறைப்படுத்தும்போதும் பல்வேறு இடையூறுகளை ஆசிரியர்கள் எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றது.

## புதிய சிந்தனை வடிவம்

உலக நாடுகளில் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ள நவீன கல்விச் சிந்தனைகளில் ஒன்றான ''திறந்த கற்றல்'' ஆகும். Unesco இன் கல்விக்கான சாசன அறிக்கைப் படி தொலைக்கல்வி (Distant Education), முறைசாராக் கல்வி(Informal Education), வாழ்நாள் கல்வி (Long Life Education) போன்ற கல்வியின் அனைத்து நவீன ஒழுங்கமைப்புகளையும் உள்வாங்கியதன் வடிவமாக ''திறந்த கற்றல்'' முறை அமைகின்றது.

திறந்த கற்றல் பற்றி பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டபோதிலும் ''கல்வியை ஜனநாயகமாக்குவதற்குரிய செயல் வடிவமே திறந்த கற்றல்'' என்கின்றனர் நவீன கல்வியாளர்கள்.

அடிப்படையில் ''திறந்த'' என்கின்ற சொற் பிரயோகம் பல காரணங்களை சுட்டிநிற்கின்றது. அதாவது மரபுரீதியான கல்வியில் அல்லது நடைமுறையில் உள்ள கல்வியில் ஜனநாயகத்திற்குரிய சந்தர்ப்பங்கள் மூடப்பட்டுள்ளன. அவ்வாறு மூடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அவை கற்போருக்கு பல பாதகமான விளைவுகளையே தந்தன. அவ்வகைத் தடைகளை நீக்கி திறந்தகொள்கை ஒன்றைபின் பற்றும் நடைமுறையே ''திறந்த கற்றல்'' ஆகும்.

## திறந்த கல்விமுறை என்றால் என்ன?

நடைமுறை கல்வியில் உள்ளதும், காலத்திற்கு காலம் அதன் நடைமுறை மேல் எழுகின்ற குற்றச் சாட்டுகளும் பட்டியற்படுத்தப்படும் போது திறந்த கல்விக்கான முக்கியத்துவம் அவசியமாக்கப்படுகின்றது.

★ முறைசார் கல்வியில் குறித்த விடயத்தை குறித்த கால எல்லைக்குள் கற்று முடித்து விட வேண்டுமென்ற கால வரையறை காணப்படுதால், அக்கால வரையறையுள் கற்றுக் கொள்ள முடியாதோர் கற்பதை கைவிட நேர்கின்றது

★ அரசின் வெள்ளை அறிக்கையின் பிரகாரம் கல்வியைத் தொடங்குவதற்கும் முடிப்பதற்கும் வயதெல்லை வரையறுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக ஐந்து வயதில் பாடசாலையில் இணையத் தவறியவர் பின் எப்போதும் பாடசாலையில் சேர்த்து கொள்ள முடியாத நிலை இருக்கின்றது.

★ காலகாலமாக நடைபெறும் கற்பித்தல் முறைமையில் மாணவர் மைய கற்பித்தல் நடைபெறுவதில்லை. அதனால் கற்போர் சுதந்திரமான முறையில் கற்றலில் ஈடுபட முடிவதில்லை.

★ தரப்படுத்தல், பிரதேச நிபந்தனைகள் போன்ற விடயங்களால் கல்விச்சமத்துவம் பேணப்படுவதில்லை.

★ பொதுவாக பிரபல்மான பாடசாலைகளும், தொழிற் கல்வி நிறுவனங்களும் நகர்ப்புறங்களை அண்மித்து இருப்பதால் நகர்ப்புற மாணவர் பெறும் கற்றல் வாய்ப்புகள் கிராப்புறத்தவர்களுக்கு கிடைப்பதில்லை.

இவ்வாறான பல்வேறு தடைகளை நீக்கி கற்றலுக்கான வாய்ப்புக்கள் திறக்கப்பட்டுள்ள நிலைமையே ''திறந்த'' என்ற சொல் சுட்டி நிற்கின்றது. திறந்த கற்றல் என்பது ஒரு நுட்பம் அல்லது முறை என்பதைவிட ஒரு ''பிரவேசம்'' என்று கூறலாம். இதற்கு அடிப்படையானது கற்போரின் தேவைகளேயாகும். ஆசிரியரின் அல்லது சிறு நிறுவனத்தின் முயற்சியில் இது தங்கியிருப்பதில்லை இம்முறையில் கற்போர் தமது தேவைக்குரியதை தாமே தெரிவு செய்து கற்க முடியும். எது, எங்கு, எப்போது, எவ்வாறு கற்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு மாணவரிடமே ஒப்படைக்கப்படுவது திறந்த கற்றலின் சிறப்பம்சமாகும்.

## திறந்த கற்றல் எவ்வாறு நிகழ்த்தப்படும்

இம்முறையில் ஆசிரியர் அறிவூட்டுபவராக அன்றி கற்றலுக்கான வழிகாட்டியாகவும் (Guide), வசதிகளையும், வளங்களையும் வழங்குபவராகவும் திகழ்வார். திறந்த கற்றலில் தொலைக்கல்வி முறைமையும் (Distant Educaiton methods), கல்வித் தொழில் நுட்ப வசதிகளும் (Educational Technology) பயன்படுத்தப்படுகின்றன. தொலைக்கல்வி முறைமையுடன் கல்வித் தொழில் நுட்பத்திற்குரிய தொடர்பூடகங்களை பயன்படுத்துவதன் மூலம் திறந்த கற்றல் சிறப்பாக பல நாடுகளில் ஒழுங்கமைக்கப்பட்டு வருகின்றது. இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் வானொலி, தொலைக்காட்சி போன்ற தொடர்பூடகங்களாக பயன்படுத்தும் வளவாய்ப்பு குறைவு என்பதால் தொடர்பூடகங்களாக அச்சிடப்பட்ட சுயவாசிப்பு நூல்கள் (மொடியூல்கள்) பங்கேற்கின்றன.

## திறந்த கற்றலுக்கு இங்குள்ள ஏற்பாடுகள்

இலங்கையில் திறந்த கற்றலுக்குரிய ஏற்பாடுகள் மேற்குலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் சிறப்பாக வளமாக்கப்படவில்லை என்றாலும் நடைமுறையில் உள்ள ஆசிரியர் தொழிலுக்கான தொலைக்கல்வி சேவையை உதாரணமாக கொள்ளமுடியும். அத்துடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் இயங்கும் திறந்த பல்கலைக்கழகங்களும் அவற்றினூடாக நடத்தப்படும் பயிற்சி நெறிகளும் திறந்த கற்றலை பிரதிபலிக்கக் கூடியன.

குறிப்பாக திறந்த கற்றலின் மூலம் இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் கல்விச் செலவீனங்களையும், வீண் விரயமாதலையும் (Wastage of Education) தவிர்க்க முடிகின்றது.

''2000 ஆம் ஆண்டளவில் சகலருக்கும் கல்வி'' என்கின்ற நிலையில் பரந்துபட்ட கல்வித் தேவைகளையும், ஆர்வமுள்ள கற்றலை உருவாக்கும் சூழலையும் திறந்த கல்வி மூலம் நடைமுறைப்படுத்த முடியும். இதன் மூலம் பாரம்பரிய கல்வி முறையில் உள்ள குறைபாடுகளும், ''மூடிய'' தன்மையும் நீக்கப்படும். ★

# இளமையிலேயே சாதனை!

சாதனை படைப்பதற்கு வயது ஒரு முக்கிய விடயமல்ல. நாற்பது — ஐம்பது வயதைத் தாண்டி அனுபவம் பெற்றாக்தான் சாதனை படைக்கலாம் என்றில்லை. அதற்கு உதாரணமாக இளமையில் சாதனை படைத்தோரில் சிலரின் விவரம் இதோ:- (இப்பட்டியல் பின்னர் தொடரும்)

மாவீரன் அலெக்ஸாண்டர், மாஸிடோனிய நாட்டு அரியணையில் அமர்ந்தது இருபதாம் வயதில். பெர்ஷியா மீது படை எடுத்தது 22 — ஆவதுவயதில், மெஸப்பட்டோமியா, பாபிலோன், அலெக்ஸாண்டிரியா மற்றும் பல சாம்ராஜ்யங்களை வென்று இந்தியாவில் நுழையும் போது அவன் வயது 30. இறந்தது 33ஆம் வயதில்

ஆங்கில மொழியின் தலைசிறந்த கவிஞர்களின் வரிசையில் வரும் கீட்ஸ் வாழ்ந்தது 26 ஆண்டுகளே. ஷெல்லி வாழ்ந்தது 30 ஆண்டுகளே.

'டான் நதி அமைதியாகச் செல்கிறது' என்ற அற்புத படைப்புக்காக நோபல் பரிசு பெற்ற ருஷ்ய எழுத்தாளர் மிக்கேல் ஷோலோகோவ் அந்த நாவலை எழுதத் தொடங்கும் போது அவரது வயது 20. முடிக்கும் போது வயது 32.

தமிழ் இலக்கியத்தில் இருபதாம் நூற்றாண்டின் ஒப்பற்ற கவிஞர் பாரதி வாழ்ந்தது 39 ஆண்டுகளே. அவருடைய அரிய படைப்புகள் பல அவரது 30 ஆவது வயதிற்கு முன்பே வெளியாகின.

தத்துவத் துறையை எடுத்துக் கொண்டால் முதலில் நினைவுக்கு வருபவர் ஆதி சங்கரர். இவர் வாழ்ந்து 32 ஆண்டுகளே. கிட்டத்தட்ட 1400 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியவர். (இந்தக் காலக் கணக்கீட்டில் மாறுபட்ட கருத்து உண்டு.) கேரளத்தின் காலடியில் தோன்றிய சங்கரர் காஷ்மீரில் ஸ்ரீநகரிலும், காசியிலும், பூரியிலும் மடங்களை மட்டும் நிறுவவில்லை. அவருடைய யாத்திரையின் நோக்கமே ஹிந்து மதத்தை நிலைநாட்டுவது தான். அப்போது நாட்டில் பரவலாக இருந்த புத்த ஜைன மதங்களின் ஆதிக்கம் சங்கராலேயே குறைந்தது. அவரது அத்வைத சித்தாந்தம் இன்றளவும் மாற்றம் இறின். பேணப்பட்டு வருகிறது.

19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இந்து மதம் மட்டும் இன்றி இந்தியாவின் காலாசாரத்தைப் பற்றி உலகம் அனைத்தும் உணரும் படி செய்த விவேகானந்தர் 40 ஆவது வயதை எட்டுமுன் மறைந்து விட்டார். அவரது சம காலத்தில் அவரைப் போல் அறிவும் துணிவும் மிக்க மனிதர் யாரும் இந்தியாவில் வாழவில்லை.

19 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த தத்துவ மேதை கார்ல் மார்க்ஸ். உலகத்தின் சரித்திரமே மார்க்ஸுக்கு முன், மார்க்ஸுக்குப் பின் என்று சொல்லும் அளவுக்கு சோஷலிஸ—கம்யூனிஸக் கொள்கைகளும் தொழிலாளர்கள் உரிமைகளும்நலன்களும் முன்னேறி மாறிவிட்டன. அவரது கம்யூனிஸ அறிக்கை (மெனிஃபெஸ்ட்டோ) வெளியானது 1848 இல். அப்போது மார்க்ஸின் வயது 30. இதைஅவர் தமது 28 ஆவது வயதிலே எழுதிவிட்டார். அந்த அறிக்கையின் சிறப்பு என்னவென்றால் 1848 வரை மனித சமுதாயத்தின் சரித்திரம்-பொருளாதாரம்—அரசியல்— இலக்கியம்—நாகரிகம்—கலாசாரம் இப்படி அனைத்துத் துறைகளிலும் நாம் எப்படி எந்த அளவில் முன்னேறிஎங்கு நிற்கிறோம் — மனிதசமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏன் ஏற்பட்டுள்ளன அவற்றை எப்படி மாற்றவேண்டும்—இவ்வளவு விஷயங்களையும் 30—40 பக்கங்களுக்குள் தன்னுள் அடக்கி இருப்பது. அவ்வளவு அற்புதமான ஒரு நூல்அதற்கு முன்பும் பின்பும் வெளியானதில்லை. அவரது கொள்கை அறிக்கையில் உள்ள சில கருத்துக்களை இன்றைக்கும் கம்யூனிஸ்ட் கட்சியினர் வேதவாக்காகவும், கம்யூனிஸ்ட் அல்லாதவர்கள் அபத்தமானவையாகவும் கருதுவது உண்மைதான். அந்தக் கருத்து வேறுபாட்டில் [illegible] மார்க்ஸின் மேதாவிலாசத்தை மட்டும் கருத்தில் கொண்டு நாம் கொள்கை அறிக்கையை ஒரு சிறந்த ஆவணம் என்று பாராட்டலாம்.

மார்க்ஸீய சித்தாந்தவாதிகளுக்கு ஹியூம்(டேவிட்) என்றாலே அலர்ஜி ஏனெனில் அவரது ஸ்கெப்டிஸிஸம், மேட்டர் (Matter) அதாவது கல் மண் போன்ற திடப் பொருள்கள் கூட, திடப்பொருள்கள்தாமா என்பதையே சந்தேகிக்க வைக்கிறது. எந்தப் பொருளையுமே அணுக்கூறாக்கிப் பிளந்தால் — 'மேட்டர்' — எங்கேயோ போய்த்தானே விடுகிறது. ஆனால் மார்க்ஸீயத்தின் அடிப்படையே 'மேட்டர்' அடிப்படையிலான மெட்டீரியலிஸம்தான். அதனால் தான் அவர்கள் ஹியூமை எதிர்க்கிறார்கள். ஹியூம் தோன்றியது 1711இல். அவரது தத்துவத்தைக் கொண்ட புத்தகம் வெளிவந்தது. 1739 இல். அப்போது அவரது வயது28. பெர்ட்ராண்ட் ரஸ்ஸல், தத்துவ ஞானத்தைப் பொறுத்தவரை ஹியூமின் சீடர் என்பது குறிப்பிடத்தக்கது.

நெப்போலியன் போர்களில் பெரும் சாதனைகள் படைத்தது 30 வயதிற்கு முன். அதனாலேயே 30 ஆம் வயதில் பிரான்சு நாட்டின் தலைமைப் பதவி அவனுக்குக் கிடைத்தது. நெப்போலியன் போர் வீரன் மட்டும் அல்ல. ஐரோப்பிய சரித்திரத்திலேயே முதல் முறையாக உருப்படியான சட்டங்கள் (Civil Codes) மக்களுக்காக — மக்களின் அதிகாரங்களைப் பற்றியவை— கொண்டு வந்தது நெப்போலியனே.

நெப்போலியனின் தலைமையில் பிரான்ஸின் ஆதிக்கம் ஐரோப்பா முழுதும் பரந்து மொஸ்கோவை நெருங்கிய போதும் பிரிட்டன் பிரான்ஸின் பிடியில் அகப்படாமல் தனித்து நின்றது. அப்போது பிரிட்டனின் பிரதம மந்திரியாக இருந்த 'பிட்', 24ஆம் வயதில் பதவிக்கு வந்தவர். சரித்திரம் படைத்தவர்.

மார்க்கோனி கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்த போது அவரது வயது 21.

கண்தெரியாதவர்கள் படிப்பதற்காக உபயோகத்தில் உள்ள பிரெயில் முறை 'பிரெயில்' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. அதைகண்டுபிடித்தபோது அவரது வயது 20.

தொலைபேசியை பெல் கண்டுபிடித்தது தமது 29 ஆவது வயதில்.

பெட்ரோல் மூலம்இயங்கும் 'இன்டெர்னல்கொம்பரஷன்' என்ஜினைக் கண்டுபிடித்தவர் டாலிமர். அப்போது அவரது வயது 28. இன்று கார்—பஸ் ஆரம்பகால ஆகாய விமானம் எல்லாவற்றிற்கும் இந்த என்ஜின்தான் அடிப்படை.

மின்துறையில் எடிஸனின் கண்டுபிடிப்புக்கள் அவரது 21 ஆவது வயதிலேயே தொடங்கிவிட்டன. 1879ஆம் ஆண்டு தமது 32ஆம் வயதில் மின் விளக்கை அவர் பொது மக்களுக்கு எரியவைத்துக் காட்டினார். ஃபிளஷ் கழிப்பறை 1584 இல் கண்டுபிடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரக்காளி

பகுதி 7

அது ஒரு பாதாள அறை. அவர்கள் திரண்டிருந்தார்கள். அவர்கள் — பகலில் தூங்கி இரவில விழித்திருக்கும் பாதாள உலக ராஜாக்கள். வரவேற்புக் கூடத்தின் மையத்தில் பெரியதொரு அலங்கார வேலைப்பாடு மிக்க சிம்மாசனம்: அதில்... எவருமே இல்லை. பிரகாசமான ஒளி அந்த ஆசனத்திற்குக் குவியப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னால்... ஒரு திரையில் சூலத்தின் குறியீடு இருந்தது. ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தியின் ஆட்சிக்கு உட்பட்டது போல அனைவரும் நின்றிருந்தார்கள்

திரையில் சூலத்தின் நிறம் சிவப்பிலிருந்து பச்சைக்கு மாறிற்று. அது பின்னர் பச்சையிலிருந்து நீலத்திற்கு மாறிற்று. அறை முழுவதும் இளநீல வர்ணம் பரவிற்று. தானியங்கி இயந்திரங்கள் போல பலவித ஒலிகள் எழுந்தன. அந்த நீலஒளி மயக்கத்தை ஏற்படுத்துவதாகவும் சுய சிந்தனையைத் தடை செய்வதாகவும் இருந்தது. நீல வர்ணச் சூலத்தின் மீதே அனைவரது பார்வைகளும் படிந்து இருந்தன.


''எனது கட்டுப்பாட்டுக்குட்பட்டவர்களே வணக்கம்'' திரையில் ஒரு பெண் குரல் எழுந்தது. அனைவரும் தலைவணங்கினார்கள்.

''உங்கள் சத்தியப் பிரமாணத்தை எடுத்துக் கொள்ளலாம்'' அமானுஷ்யக் குரலுக்கு யாவரும் அடிபணிந்தார்கள். அவர்களது கரங்கள் நீல வர்ண சூலத்தை நோக்கி நீண்டன. ''காளித்தாயின் பாதங்கள் மீது ஆணை. தங்கள் அனைத்துக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவோம் உயிர், உடல், உடைமை அனைத்தையும் தங்கள் பாதங்களில் அர்ப்பணிப்போம்''

தொடர்ந்து வினாக்களும் விடைகளும் பரிமாறப் பட்டன.

''கொல்லிமலைக் காட்டு சந்தனக் கடத்தல் சுமுகமாக இருக்கிறதா?'' ''ஆம்'' பதில் வந்தது.

''அங்கே விளைவிக்கப்படும் கஞ்சா, அபின் போன்ற செடிகளால் லாபம் மிக உண்டா?'' ஆமோதித்தார்கள். ''சரி தொடரட்டும்'' தொடர்ந்து தனித்தனிக் கடமைப் பட்டியல் வழங்கப்பட்டது. இறுதியில்... சுணீரென அக்குரலின் கட்டளை பிறந்தது.



''மைக்கேல் முன்னால் அழைக்கப்படுகிறான்'' மைக்கேல் எனப்படும் வீரன் கைகட்டிப் பணிவோடு, பயந்தபடி முன்னே வந்தான்.

''உனக்கான கடமையிலிருந்து நீ தவறி இருக்கிறாய் உணர்கிறாயா?'' ''ஆம்''

''எங்கள் சபையில் தவறுகளின் தீர்வு மரணம் என்பதை நீ அறிவாய் அல்லவா?''

''ஆம் தாயே ஆனால்...'' தொடர விடப் படவில்லை அவன்.

''எமது சக்திகள், பணியாளர்களின் துணையோடு அசோகனின் வரிசுகனைக் கிராமத்தை விட்டு விரட்டியடிக்கச் சொன்னேன். தவறிவிட்டாய்'' குற்றம் விளக்கப்பட்டது. ''சிறுவர்கள்

# சிறுவர்களுக்கான மர்மத் தொடர்கதை

தானே என நினைத்தேன். அதனால் முயற்சிகளைக் கடுமையாக எடுக்கவில்லை...''

''ஓஹோ!'' குரலில் ஏளனம் தெறித்தது. ''அவர்கள் வந்த இரவிலே நடுநிசியில் நாய் போல ஊளையிட்டேன். எங்கள் 'மோகினி'யின் மாய வேலைகள், மல்லிகைப் பூ வாசனை எதற்கும் அவன் — ஆதித்தன் — மசியவில்லை. அசோகன் போலவே...''

**ஆதித்தனும் நிலாவும் துப்பறிகிறார்கள்**

''உஷ்! இடப்படும் கடமைகள் நிறைவேற்றப்படாதது...'' முடிக்கப்படாத வசனத்தை மைக்கேல் முடித்தான். ''தங்களுக்குப் பிடிக்காது என்று தெரியும் தாயே...''

அவனது முகத்தில் மரணக்களை படரத் தொடங்கியது. ''மைக்கேல் விக்கிரமனுக்கு விருந்தாக்கப்படுவான்.'' தேவியின் குரலுடன் ஒரு பட்டனைத் தட்டும் ஒலி கேட்டது. கூரை பிளந்து ஒரு

## ச. சாரங்கா

புலிக் கூண்டு கீழிறங்கியது. உள்ளே விக்கிரமன் எனப்பட்ட புலி கொடும் பசியுடன் உறுமிற்று. அடுத்த நிமிடத்தில் மைக்கேலின் பரிதாபமான அலறலும் விக்கிரமனின் உறுமலும் அப் பிரதேசத்தை கிடுகிடுக்க வைத்தன. ''எமது கட்டளைகளை மீறும் எவருக்கும் இது நியதி'' குரல் ஒலித்தது

(தொடரும்)

---

| | | | |
|---|---|---|---|
| வி சனி | | செ வெ | சூ புத |
| கே | இராசிச் சக்கரம் | | சந் |
| | | | ரா |
| | | | |

# இந்த வார இராசி பலன்

## [27 - 06 - 1998 முதல் 03 - 07 - 1998 வரை]

மாற்றம்:

பூசநட்ஷத்திரம் — கடக இராசியில் சந்திரன் இருக்கும்.

27-6-1998 இல் மிதுன இராசியில் செவ்வாய் மாறும்.

ஸ்ரீலங்காவில் விமானத் துறை, ரயில்வே, ரெலி போன் பகுதிகளில் தீவிர மாற்றங்கள் ஏற்படும். உலகநாடுகளின் கரிசனை இலங்கையின் மீது இருக்கும். யுத்த மேகம் மாறி மாறி பல வடிவெடுக்கும். அழிவுகள் மறைக்கப்பட்டாலும் — மக்கள் அறியவேண்டி வரும். தொழிலாளர்கள், மாணவர்கள் அபிப்பிராயப் பேதப்படுவர். இந்தியாவின் ஆளுமை அதிகரிக்கும். புதிய திட்டங்கள் கருவாகி உருவாகும். கிழக்குநாடுகள் மீதுகூடிய சிந்தனை மேற்கு நாடுகளுக்கு ஏற்படும். ஐ. நாவின் புதிய திட்டங்கள் உலகிற்கு நன்மை தரும். அமெரிக்கா தனது முனைய பொருளாதார, அரசியல் அணுகு முறைத் திட்டங்களை மாற்றி அமைக்கும் பலன்கள் கிரக நிலைகளில் காணப்படுகின்றன.

மேடம்: அவசர அவசரமாக எங்கே போகின்றீர்கள்? வேலை, வேலை என்று ஓடியாடித்திரிந்தால் வீட்டை யார் கவனிப்பது? நீங்கள் தனி ஆளா? உலகம் எப்பொழுதும பலதும் பத்துமாகத்தான் பேசியபடி இருக்கும் அதை எல்லாம் பெரிதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. தொழில் ஸ்தானத்தில் ஓடியாடித் திரிவதனால் இலாபம் வரத்தான் செய்யும். புதிய திட்டங்களால் நற்பலன்கள் அதிகரித்தபடி இருக்கும். பக்கத்து வீட்டிலும் சரி, வேலைத்தலத்திலும் சரி கொஞ்சம் புகைச்சல் வரத்தான் செய்யும். கவனமாகச் செயற்படவும். பிழைகள் நடக்கும்; திருத்திச் செயற்படுத்தவும். எதிர்ப்பாலாருடன் வாக்குவாதப்படாமல் அவதானமாக இருக்கவும். வயிற்றில் நோ, சரும நோய்கள், மூட்டுவலிகள், வாட்டி எடுக்கும். உஷ்ணபீடைகள் ஏற்படலாம். தகுந்த வைத்தியம் ஆறுதல் தரும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

இடபம்: சட்டென்று வந்து சிட்டாகப் பறந்து போகும் கோபத்தால் எத்தனை வேதனை? எதிர்ப்பாலாருடன் அன்பாக இருங்கள். கலைத்தொடர்பானவர்களிடமும், கடவுளின் ஸ்தலங்களுக்கும் அடிக்கடி போய் வாருங்கள். மனதில் சாந்தி ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் வாக்குச் சாதுரியத்தாலும் — அதிகாரிகளின் உதவிகளாலும் பல காரியங்கள்

### மகாதேவா ஜோதிடம்

நடந்தபடி இருக்கும். ரீ. வி, சினிமா என ஓடி ஓடித்திரியாமல் உங்கள் காரியங்களின் அனுகூலங்களில் கவனமாக இருந்து செயற்படுங்கள். களைப்பு, சலிப்பு, இரத்த அழுத்தம், சலவருத்தம், நரம்புச் சோர்வு வரலாம். ஓய்வு மிக முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

மிதுனம்: உங்களைக் கண்டு பிடிக்கமுடியாதே! எத்தனை தரம் உங்களைத் தேடித் தேடி வருவது? எங்கே போகிறீர்கள்? — என்று நண்பர்கள் அடிக்கடி கேட்பார்கள். ஒளிவு மறைவில்லாமல் பேசுவீர்கள். இதனால் எதிர்ப்பாலாரிடம் ஏச்சும் பேச்சும் வாங்குவீர்கள். தொழில் ஸ்தானத்தில் உங்களுக்கு எல்லோரும் உதவுவார்கள். உங்கள் மீது பொறாமைப்பட்டபடி இருப்பார்கள். கொஞ்சம் உலகை அனுசரித்து நடவுங்கள். உலகம வாழ்ந்தாலும் பேசும்; தாழ்ந்தாலும் தூற்றும் என்பதை மறந்துவிடாதீர்கள். இக்காலத்தில் பலவித உணர்வுகளுக்கு ஆளாக நேரிடும். நீங்கள் அரசியலில் அவதானமாகப் பேசவும். சந்தர்ப்பவாதிகள் உங்களை வைத்து இலாபம் தேட முற்படலாம். தலைவலி, வாதநோய், உஷ்ண பீடைகள், வாய்வுத்தொல்லைகள், கைகால் தாக்கங்கள் சிலருக்கு ஏற்படலாம். கவனமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன்.

கடகம்: வாழ்க்கையில் எதிர்ப்பு இன்றி வாழமுடியாது என்பதை அறியாதவரா நீங்கள்? பிறருக்குப் பல

### சோதிட சஞ்சிகை

உதவிகளைச் செய்தபடி இருப்பீர்கள். வாக்குக்கலகம் ஏற்படும். இரவு, பகல் சர்வ சாதாரணமாகும். தொழில் ஸ்தானத்தில் பொருள் சிக்கலால் கொஞ்சம் பிரச்சினைகள் ஏற்படச் செய்யும். கைகால் நோ, வயிற்று நோ, சலவருத்தம், நெஞ்சுவலி, களைப்பு என்பனவற்றால் வருந்த இடம் உண்டு. உங்களை எவரும் இலகுவில் அறிந்துவிட முடியாதபடி நீங்கள் நடந்து கொள்ளுவீர்கள். தனிமையில் இனிமை, ஆறுதலை அடைய இக்காலத்தில் இடம் உண்டு.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், சனி.

சிங்கம்: எதையும்எதிர்கொள்ளுங்கள். வாழ்க்கை என்பது போராட்டம் நிறைந்தது. சரி, பிழை சர்வசாதாரணம். உங்கள் உறுதியில் அசையாமல் நின்று வெற்றி அடைவீர்கள் தொழில் ஸ்தானத்தில் எதிர்நீச்சல் அடிப்பீர்கள். மேலதிகாரிகளின் உதவியும், உபத்திரவமும் மாறி மாறி ஏற்படும். உங்களை எதிர்ப்பவர்கள் இடம் மாறுவார்கள் என்பதை உறுதியாக நம்புங்கள். நெஞ்சுநோ, களைப்பு, காய்ச்சல், உடம்பில் வலிகள், உஷ்ண பீடைகளால் இக்காலத்தில் வருந்துவீர்கள். இக்காலத்தில் உங்களுக்கு கௌரவப் பிரச்சினை ஒன்று தோன்றி உங்களைப் பிரபல்யப்படுத்தியபடி இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்; புதன், சனி.

கன்னி: உங்களை இக்காலத்தில் எவரும் புரியமாட்டார்கள். எல்லா விஷயத்திலும் சட்டதிட்டங்களின் படி நடக்க முடியுமா? எதிர்ப்பாலாருடன் கௌரவமாக நடந்து பெயர் எடுங்கள். தொழில்ஸ்தானத்தில் புதிய திட்டங்கள், மாற்றங்கள் ஏற்படச் செய்யும். உங்களை எவரும் ஆசை காட்டி — மோசம் செய்து ஏமாற்றிவிட முடியாது. எதையும் பல சோதனைக்கு மத்தியில் தேர்ந்து எடுப்பீர்கள். தோல்விதான் வெற்றியின்முதல்படி என்பது உங்களுக்குத் தெரியாத மந்திரமா? இருமல். கைகால்பிடிப்பு, முதுகுவலி என்பன அடிக்கடி வருத்தும். வைத்தியம் செய்யுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

துலாம்: எதிர்ப்பாலாருடன் காரசாசமான வாக்குவாதங்கள் ஏற்படலாம். தொழில் ஸ்தானத்தில் சிலர் உங்களுக்கு மறைமுகமானபல தொல்லைகள் கொடுப்பார்கள். பொருள்இழப்புக்கள், வாகன இழப்பு அல்லது செலவுகள் சிலருக்கு ஏற்படலாம். தாழ்ந்த நிலையிலுள்ள சிலர் தொல்லை கொடுக்கலாம். வீண்பழிகேட்டல், அடிக்கடி அலைச்சலால் மனச்சலிப்பு ஏற்படலாம். எதையும் துணிவுடன் எதிர்கொண்டு சமாளியுங்கள். வயிற்றுக் குழப்பம், சலவருத்தம், தேக எரிவு, உஷ்ணபீடைகள் என்பன வருத்தலாம். வைத்தியர் ஒருவரின் உதவியை நாடிச் சுகம் அடையுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, புதன்.

(X ஆம் பக்கம் பார்க்க)

---

# குறள் வெள்ளம்

கண்ணம்மாவைக் குழந்தையாக வர்ணிக்கும் பாரதி கேட்டான் — 'இன்பக் கதைகளெல்லாம் உன்னைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ?' என்றுதான்.

குழந்தையை அடுத்த வீட்டில் கொடுத்துவிட்டுக் கச்சேரி பார்க்கக் கோயிலுக்குப் போகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். குழந்தையின் மனநிலை அறியாதோர் அவர்கள்.

கோயிலிலே மடியில் படுத்திருக்கும் குழந்தையை அழவிடாமல் அதட்டி விட்டு மேளத்துக்கும் தாளத்துக்கும் தலையாட்டும் பொம்மைகளாய் பல ரசிகர்கள்.

குழலும் யாழும் இனிதென்று கச்சேரி தேடி அலையும் மனிதர்களே — படம் என்றால் வேலியைப் பிரித்துக்கொண்டும் அடுத்த வீட்டுக்குள் புகும் மாந்தர்களே — உங்கள் குழந்தையை அடுத்த வீட்டில் விட்டு அப்படிச் செய்யாதீர்கள்.

வீட்டிலே மழலை கொஞ்சும் மதலை இருந்தால் அதன் திருப்தியே உங்கள் திருப்தியாகட்டும். அது மனம் மகிழ உங்களை வட்ட மடிக்கும் போது பிறக்கும் மழலைச் சொற்சுவை இருக்கிறதே அதை ரசித்தால் தெரியும் சுவை.

ஆரோக்கியமான சூழலில் மன மகிழ்வுடன் வளரும் பிள்ளையே நாளை உருப்படியாகி உலகத்துக்கு உதவும்.

அடுத்தவர் கட்டாயப் படுத்திக் கேட்கும் போது பிறப்பதல்ல மழலை. அது திடீரென குழந்தை நாவில் புரண்டு விளையாடிப் பெற்றோரையும உற்றாரையும் இன்பத்தில் ஆழ்த்தும்.

நாளொரு விதம் — நேரம் ஒரு பாணி — உச்சரிப்பில் நாவின் பிறழல் — இவ்வாறு கேட்கக் கேட்க சலிக்காத மழலை கானம் — இதைக் கேளாதவரே — ரசியாதவரே — குழலும் யாழும் இனிது எனப் பிதற்றுவர்; கச்சேரி தேடி அலைவர்.

குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச் சொல் கேளா தவர்.

— 0066

— அம்பிகைபாகன் —

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நெஞ்சில் முளைத்த கொம்பு!

விலங்குகளில் சிலவற்றிற்கு தலையில் கொம்புகள்முளைக்கின்றன. அரிதாக சில மனிதர்களின் தலைகளிலும் இவ்வாறான கொம்புகள் முளைப்பதுண்டு. ஆனால் அதிசயிக்கத்தக்க விதமாக—ஒரு விவசாயியின் மார்பில் கொம்பு முளைத்துள்ளது.

தமிழ்நாடு ஈரோடு மாவட்டத்தில் காஞ்சிகோவிலைச் சேர்ந்த மாதன் (வயது 40) என்ற விவசாயியின் மார்பிலேயே இவ்வாறு ஒரு கொம்பு முளைத்தது.

இந்த விவசாயியின்மார்பில் சிறிதாக ஒரு கட்டி முன்னர் தோன்றியது சில நாள்களில் அக்கட்டி உடைபட அதிலிருந்து கொம்பு ஒன்று வளர ஆரம்பித்தது. வளர ஆரம்பித்த கொம்பு சில நாள்களிலேயே விலங்குகளின் கொம்பைப் போன்ற உறுதியாக—இருபது சென்ரிமீற்றர் நீளத்துக்கு—வளர்ந்து விட்டது.

கொம்பு வளர ஆரம்பித்த போது அதனை மறைப்பதற்கு மாதன் பல்வேறு முயற்சிகளை எடுத்துவந்தார். ஆனால் கொம்பு பெரிதாகப் பெரிதாக அவரது மறைப்பு நாடகங்கள் தோல்வியைத் தழுவ ஆரம்பித்தன. இதனால் உறவினர்கள் கண்ணில் மாதனின் கொம்பு தட்டுப்பட ஆரம்பித்தது. அதே சமயம் கொம்பு முளைத்த பகுதியில் மாதனுக்குசிறிதாக வலி எடுக்கவும் ஆரம்பித்தது.



விவசாயி மாதனின் மார்பில் முளைத்த கொம்பு

இதனால் ஈரோடு மருத்துவ மனையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியர்கள்ஆரம்பத்தில் மார்பில் முளைத்த கொம்பைக் கண்டு அதிர்ச்சியடைந்தாலும் பின்னர் தமது ஆய்வுகளை ஆரம்பித்தார்கள். அதன்படி இந்தக் கொம்பினால் மார்புக்கு எந்தப் பாதிப்பும் இல்லை எனக் கண்டு கொண்டனர்.

மனிதனின் தோலில் உள்ள செபேசியஸ் என்ற சுரப்பியில் ஏற்படுகின்ற கோளாறே இத்தகைய கொம்புகள் வளரக் காரணம் எனவும்—

இவ்வாறு கொம்பு முளைக்கும் நோய்க்கு செபேசியஸ் ஹார்ன் (Sefaceous Horn) என்று விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளார்கள் எனவும்—

மாதனுக்கு வைத்தியம் செய்த மருத்துவக் குழுவின் தலைவர் டாக்டர் அபுல் ஹாசன் தெரிவித்தார்


இதனையடுத்து நல்ல ஒரு நாளில் நல்ல நேரத்தில் மாதனின் மார்பில் இருந்த கொம்பு வைத்தியர்களால் சத்திரசிகிச்சை மூலம்வெட்டி எடுக்கப்பட்டது

கொம்போடு சேர்த்து சுரப்பியும் வெட்டி எடுக்கப் பட்டதால் இது போன்ற கொம்பு இனி முளைக்காது என உறுதி கூறி மாதனை அனுப்பி வைத்துள்ளனர் வைத்தியர்கள். ★

# கோர உருவத்துக்கு பதிலாக புதியமுகம்!

கை அல்லது கால் துண்டிக்கப்பட்டால் அதற்கு மாற்றாக செயற்கை உறுப்பு பொருத்திக் கொள்ளலாம். ஆனால் தீ மற்றும் பிறஇரசாயன விபத்தில் சிக்கி முகத்தோற்றத்தை இழப்பவர்கள் பெரும்பாலும் தங்களது கோர உருவத்தை எண்ணி புழுங்கிக் கொண்டுள்ளனர். மற்றவர்களுடன் சகஜமாகப் பழக இவர்களது கோர உருவம் தடையாக இருக்கிறது. இத்தகைய உணர்வே நாளடைவில் இவர்களுக்கு மனநோயாக மாறிவிடுகிறது.

விபத்துகளினால் கோர உருவத்துக்கு ஆளானவர்கள் இனி கவலைப்படத் தேவையில்லை. பழைய முகத்தைத் திரும்பப் பெறுவதை சாத்தியமாக்கியுள்ளார் லண்டன் மருத்துவர்.



லண்டனிலுள்ள குயின் மேரிஸ் பல்கலைக்கழக மருத்துவர் ரே விண்டர். 60 வகையான இரசாயனப் பொருள்களால் உருவாக்கப்பட்ட சிலிக்கான் பசை முகக் கவசங்கள் மூலம், பாதிக்கப்பட்ட முகத்தை மீண்டும் புதிய பொலிவு பெறச்செய்ய முடியும் என்று நிரூபித்துள்ளார். இவரது முயற்சிக்கு அடிப்படையாய் அமைந்தவை எகிப்து பிரமிடுகளில் புதைக்கப்பட்டுள்ள சடலங்கள்தான் (மம்மிகள்).

பிரமிடுகளில் உள்ள சடலங்கள் நன்கு பதப்படுத்தப் பட்டிருந்தாலும் அவற்றின் முகங்கள் தங்கம், வெள்ளியிலான முகக் கவசங்களால் மூடப்பட்டிருந்ததே இவரது ஆராய்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. விபத்தில் சிக்கி கோர உருவத்தைப் பெற்றவர்கள் இனி மூலையில் முடங்கிப் போக வேண்டியதில்லை. மற்றவர்களுடன் சகஜமாகப் பழகலாம். புதிய முகத்துடன் தாம் உருவாக்கிய பசைமுக கவசத்தின் ஒரு பகுதியுடன் படத்தில் காணப்படுகின்றார் டாக்டர் ரே விண்டர். ★

# மயங்கிய நிலையில் 25 ஆண்டுகள் ஆஸ்பத்திரியில் வாடும் அருணா!

ஜூன் — 1. 1998 அருணாவுக்கு வயது 50. ஆனால் அவரது பிறந்தநாளன்று வாழ்த்துச் சொல்லக் கூட ஆளில்லை. மும்பையிலுள்ள கே.ஈ.எம். மருத்துவ மனையில் ஓர் அறையில் சென்ற 25 ஆண்டுகளாகக் கேட்கநாதியற்று சலனமேதுமின்றி நினைவு நீச்சின்றி படுத்த படுக்கையில் கிடக்கிறார். அவரது உடல் மெலிந்து வெளிறிப் போயிருக்கிறது. அவளது முடியும் நரைத்து விட்டது.

யார் இந்த அருணா...? கர்நாடக மாநிலத்திலுள்ள ஷிமோகாவைச் சேர்ந்தவர்; வேலை தேடி மும்பைக்கு தனது 18 ஆம் வயதில் மும்பைக்கு வந்தார். கே.ஈ.எம். மருத்துவ மனையில் சில மாதங்கள் பயிற்சிக்குப் பின்னர் தாதியாகப் பொறுப் பேற்றார். இளம் வயது; கொள்ளை அழகு; பணியில் மிகுந்த கண்டிப்பு; துடுக்குப் பேச்சு — இவையெல்லாம் அவரை அந்த மருத்துவ மனையில் பிரபலமாக்கின.

நோயாளிகளுக்குத் தர வேண்டிய ரொட்டியைத் திருடுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்த கடைநிலை ஊழியன் சோஹன்லால் ஒரு நாள் அருணாவிடம் வசமாகச் சிக்கிக் கொண்டான். அவனைத் திட்டித் தீர்த்து விட்டாள் அருணா.

"நேற்று வந்த இவளா நம்மைத் திட்டுவது?"— கோபம் தாங்க முடியவில்லை சோஹன்லாலுக்கு.

1973 ஆம் ஆண்டு... நவம்பர் மாதம் 27 ஆம் தேதி... அந்த மருத்துவ மனையின் கீழ்த்தளத்திற்கு வந்தாள் அருணா. சோஹன்லால் தன்னிடம் தயாராக வைத்திருந்த நாய்ச் சங்கிலியால் அவள் தலையில் ஒரே அடி... அப்படியே சுருண்டு கீழே சாய்ந்தாள். பின்னர் அவளைக் கற்பழித்து விட்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டான். இந்தச் சம்பவம் நடந்த பதினைந்தரை மணி நேரத்திற்குப் பிறகுதான் அவள் கண்டு பிடிக்கப்பட்டாள். மயங்கிய நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்த அவள் அந்த மருத்துவ மனையிலேயே சேர்க்கப்பட்டாள். அவள் மூளை முழுவதுமாகச் செயலிழந்து போயிருந்தது. திடீரென்று கலகலவென்று சிரித்தாள். சில நேரங்களில் பெருங்கூச்சலிட்டாள். அழுதாள்! ஆனால் சுற்றுப் புறத்தில் என்ன நடக்கிறது என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் கோமாவில் ஆழ்ந்து விட்டாள்.

அவளைக் காதலித்து திருமணம் செய்து கொள்வதாக இருந்த டாக்டர், அவளைத் தினமும் வந்து பார்த்து விட்டுப் போனார். அவளுக்காக ஓராண்டுக்கு மேல் காத்திருந்தார். ஆனால் அருணாவின் நிலையில் எந்தவித மாற்றமும் தெரியவில்லை. வெறும் சதைப் பிண்டமாகக் கிடந்தாள். 1974 ஆம் ஆண்டு அந்த டாக்டர் வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். பின்னர் அவர் அருணாவைக் காண வரவேயில்லை.

அருணாவிற்காக நீண்டகாலமாகப் போராடி வருகிறார். அருணாவின் வழக்கைப் பற்றிய முழு விவரங்களையும் சேகரித்து வந்தார். இம்மாதம் முதல் தேதியன்று (அருணாவின் பிறந்த நாள்) Aruna's Story என்ற பெயரில் புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அருணாவை இந்தக் கதிக்கு ஆளாக்கிய சோஹன்லால், 7 ஆண்டு காலச் சிறைவாசத்திற்குப் பின் டில்லியிலுள்ள ஒரு மருத்துவ மனையில் பணியாற்றி வருகிறான். அவன் மீது திருட்டு, கொலை செய்யச் சதி என்று இரண்டு வழக்குகள் மட்டுமே போடப் பட்டன. கற்பழிப்புக் குற்றத்திலிருந்து சோஹன்லால் தப்பிவிட்டான் என்கிறார் பத்திரிகையாளர் பிங்கி.

## பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

சென்ற 25 ஆண்டுகளாக அந்த மருத்துவ மனையைச் சேர்ந்த தாதியர்கள்தான் அருணாவுக்கு உற்ற துணையாக இருந்து அவளுக்கு உதவி வருகிறார்கள். என்ன செய்து என்ன பயன்? அருணா இன்னமும் நினைவின்றித்தான் கிடக்கிறாள்.

மும்பையைச் சேர்ந்த பத்திரிகையாளர் பிங்கி இரானி

மும்பையில் வாழும் அருணாவின் தங்கையும், அண்ணனும் அவரைப் பார்க்க வருவதே இல்லை, அருணா ஒரு வேளை இறந்து விட்டால் அந்திமச் சடங்குகளைச் செய்ய வருவதாகப் பத்திரிகையாளர் பிங்கியிடம் உறுதியளித்திருக்கிறாராம் அருணாவின் அண்ணன். ★

# நெட்டையர் சங்கம்!

பிரிட்டனில் அதிக உயரமுள்ளவர்களுக்காக லண்டனில் அண்மையில் ஒரு மகாநாடு நடைபெற்றது இதில், பங்கு பற்றியோர் உயரமானவர்களுக்கென்று பிரத்தியேகமான படுக்கைகள், கார்களைத் தயாரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். 7 ஆண்டுகளுக்குமுன் தொடக்கப்பட்ட இந்த நெட்டையர் சங்கத்தில் 1700 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் சேருவதற்கு குறைந்தபட்சம் 6 அடி, 6 அங்குல உயரமாக இருக்கவேண்டும் என்கிறார் இதன் தலைவர் மத்யூ பார்மர். இவர் சமீபத்தில் ஜப்பான் கார் ஒன்றை வாங்கியிருக்கிறார். பிரிட்டனில் செய்யப்படும் கார் உயரமானவர்களுக்கு ஏற்றதல்ல. இவற்றில் உட்கார்ந்தால் தலையை இடிக்கிறது. காரிலுள்ள டாஷ்போர்டில் கால் இடிபடுகிறது என்கிறார் பார்மர்.



'நீ எட்டடியிருந்தா காரா ஓட்டமுடியும்? பேசாமல் நல்ல ... குட்டையர்கள் முணுமுணுப்பது காதில் விழுகிறது. ★

# சீனாவில் சூடாக பிண 'பிஸ்னஸ்'!

சீனாவில் சில பகுதிகளில் புது மாதிரி வியாபாரம் நடக்கிறது. வியாபாரச் சரக்கு என்ன தெரியுமா? பிணங்கள்.

ஆம். மருத்துவமனைகளிலிருந்து பிணங்களைத் திருடி விற்பது இங்கு நல்ல வியாபாரமாகி விட்டது.

சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் மிகுந்த நம்பிக்கை உள்ளவர்கள் சீன மக்கள். இறந்தவர்களைப் பல்வேறு மதச் சடங்குகளுக்குப் பின் புதைப்பதுதான் சீனாவின் பல பகுதிகளில் நீண்ட கால வழக்கம். ஆனால் சமீப



காலமாக, அந்த நாட்டின் சில பகுதிகளில் இந்த வழக்கத்திற்குத் தடைவிதிக்கப் பட்டுள்ளது. இங்கெல்லாம் பிணங்கள் எரிக்கப்பட்டு வருகின்றன.

காலம் காலமாக கடைப் பிடிக்கப்பட்டு வரும் பழக்க வழக்கங்களைத் திடீரென விட்டுவிடுவதை அந்த மக்கள் விரும்பவில்லை.

பிணங்கள் திருடப்படுவதற்கு இதுதான் காரணம்.

மருத்துவமனை ஊழியர்களைக் 'கவனித்து' விட்டு பிணங்களை நன்றாக பொதி செய்து ஏதோ 'லக்கேஜைப்' போல வெளியே எடுத்து வந்து விடுகிறார்கள். பிண வறைகளுக்கு அனுப்பப்படும் பிணங்களும் இதே முறையில் களவாடப்படுகின்றன.

இவ்வாறு திருடப்படும் பிணங்கள் மீண்டும் அவற்றின் குடும்பத்தினரிடமே நல்ல விலைக்கு விற்கப்படுகின்றன. யாருக்கும் தெரியாமல் காதும் காதும் வைத்தாற் போல் மதச் சடங்குகள் செய்யப்பட்டபின் அவை புதைக்கப்படுகின்றனவாம். ★

# மனிதாபிமான திலகம்!

இடம்:- கென்யா.

காது வலியால் அவதிப் பட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் காதில் இருந்த ஒரு சிறிய விதையை ஒரு மருத்துவர் வெளியே எடுத்தார். அந்தப் பெண்ணின் பெற்றோரால், மருத்துவருக்குக் கொடுக்க வேண்டிய கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை. மருத்துவருக்குத் தாங்க முடியாத கோபம்



அந்தப் பெண்ணை வலுக் கட்டாயமாக இழுத்து வந்து அவள் காதிலிருந்து எடுத்த விதையை மீண்டும் அதே காதில் போட்டார் அந்த மனிதாபிமானத் திலகம். அதோடு நிற்கவில்லை. அந்தப் பெண்ணையும் அவள் பெற்றோரையும் தன் அறையிலிருந்து வெளியே நெட்டித் தள்ளி விட்டாராம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானியரிடையே உதைபந்து மோகம்

முதல் முறையாக உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தில் அடியெடுத்து வைத்துள்ள ஜப்பானிய வீரர்களின் ஆட்டத்தை தலைநகர் ரோககியோ மற்றும் அதை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மூன்றில் இரண்டு பங்கு மக்கள் தொலைக் காட்சியில் கண்டு களித்துள்ளனர்.

நிறுவனம் ஒன்று நடத்திய கணக்கெடுப்பில் இது தெரிய வந்துள்ளது.

கணக்கெடுப்பு நடத்தப்பட்ட பிரதேசத்தின் மொத்த சனத்தொகை ஒரு கோடி 50 லட்சம் ஆகும்.

1964 இல் ரோக்கியோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் பெண்கள் கரபந்தாட்ட விளையாட்டை மிக அதிகமானோர் தொலைக் காட்சியில் கண்டுகளித்தனர். அதற்கு அடுத்த படியாக இம்முறை உலக உதைபந்தாட்டம் ரசிகர்களைக் கவர்ந்துள்ளது

2 ஆயிரத்து 2 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அடுத்த உலகக் கிண்ணப் போட்டியை ஜப்பானும், தென்கொரியாவும் கூட்டாக நடத்தவுள்ளன.

# கூட்டுறவு....

(Vஆம் பக்கத் தொடர்)

விலைக்கு வழங்கப்படும்''

சீனிக்குத் தட்டுப்பாடு நிலவிய நேரம் அது. பச்சையரிசியை விற்பனை செய்ய இச் சந்தர்ப்பம் பயன்படுத்தப்பட்டது.

நிவாரணப்பொருள்களைப் பாவனையாளர்களுக்கு விநியோகம் செய்யும் கூட்டுறவுச் சங்கத்திற்கு அப்பொருள்களின் ஒரு பகுதிதான் அச்சேவைக்குரிய ஊதியமாகக் கிடைக்கும். அப்பொருள்களை விற்பனை செய்து பணத்தைப் பெறவேண்டும். அந்த வகையில் பச்சையரிசியையும் விற்பனை செய்ய வேண்டியது அவசியம். பாவனையாளர்கள் அதனை விரும்பி வாங்குவதில்லை. அத்துடன் நிவாரண விநியோகத்தில் பெற்ற பச்சையரிசியும் அவர்களிடம் இருப்பில் இருக்கும்.

ஆகவே தமது பச்சையரிசியை விற்க, சீனிக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டைப்பயன்படுத்தியது நியாயம்தான்.

ஆனால் என்னுள் எழுந்த ஒரு கேள்விக்கு என்னால் விடைகாண முடியவில்லை.

தலைவருக்குக் குத்தரிசி மட்டும் நிவாரணமாக வழங்கியபோது முகாமையாளர் சங்கத்தில் பச்சையரிசி முடிந்துவிட்டது என்று கூறினார்.

அதன் உள்ளந்தரங்கம் என்ன?

இதுதான் கூட்டுறவா? இதில்தான் கூட்டுறவா?

எனக்குப் புரியவில்லை. உங்களுக்குப் புரிகிறதா? ★

(யாவும் கற்பனை)

# இந்தவார இராசி...

(VIII ஆம் பக்கத்தொடர்)

விருச்சிகம்; கலகம் பிறந்தால்தானே நியாயம் பிறக்கும். ஆயினும் எதையும் நிதானமாகச் செயற்படுத்தும் திறமை உங்களிடம் உண்டு. இரகசியமாக செயற்பட்டுப் பாருங்கள். எல்லாக் காரியங்களிலும் வெற்றி அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் உறுதியுடன் செயற்பட்டு பல இலபங்களை அடைவீர்கள். தெய்வீகத் தன்மை உங்களை ஊடுருவியபடி இருக்கும் காலமாகும். களைப்பு, வயிற்று நோ, நெஞ்சுநோ, உஷ்ண பீடைகள், சளி என்பன கொடுத்தபடி இருக்கும். தகுந்த வைத்தியம் சிறப்புத் தரும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, ஞாயிறு.

தனுசு; உள்ளதைச் சொலி நன்மையைப் பெறப் பார்க்கிறீர்கள் நல்லதுதான். ஆனால் எல்லா விடயங்களையும் அப்படிச்செய்ய முடியுமா? உங்களிடம் கேட்டுவிட்டு தாங்கள் காரியங்களை இரகசியமாகப் பலர் சாதித்து விடுவார்களே. தொழில் ஸ்தானத்தில் நல்லது கெட்டது கலந்து நடக்கும். உதவி செய்வதாக—ஒருவர் நடித்து உள்ளதெல்லாம் தனதாக்குவார். மறைமுகச் சத்துருக்களால் வேதனை கொடுக்கும். எந்த விஷயத்தையும் துணிந்து செய்வதனால் பல நன்மைகள் அடைவார்கள். இந்த உலகத்தின் வெளிப்பகட்டு உங்களை ஒன்றும் செய்துவிடமுடியாது. உஷ்ணபீடைகள், களைப்பு, நெஞ்சுநோ, கைகால் பிடிப்பு என்பன வருத்தலாம். வைத்தியம் செய்யவும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள்.

மகரம்: என்ன அமைதியாக இருந்து கூர்ந்து கவனிக்கிறீர்கள்? உங்களுக்கு இக்காலத்தில் சகடயோகம்தான். எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைத்தபடி இருக்கும். தொழில்ஸ்தானத்தில் நன்மைகளும், மேலதிகாரிகளின் ஆதரவுகளும் இருக்கும். நாலுபேர் உங்களைப்பற்றிக் கதைப்பார்கள். வயிற்று நோ, நரம்புத்தளர்ச்சி, கைகால் உளைவு அல்லது அடிபடல், சலவருத்தம் என்பன கொடுக்கும். என்னதான் நடந்தாலும் கொஞ்சம் பொறுமையாகச் செயற்படுத்திப்பாருங்கள். எல்லாம் நல்லபடி நடக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

கும்பம்: தேவையற்ற சந்தேகங்களைத் தவிர்த்து நடவுங்கள். எதையும் ஆழ்ந்து அனுபவிக்கத் துடிக்கும் நீங்கள் பொறுமையைக் கடைப்பிடித்து நடக்கவும். ஆவேசப்பட்டு எதையாவது செய்துவிட்டுக் கலங்கியபடி இருப்பீர்கள். பிறருக்கு பல உதவிகளைச் செய்துவிட்டு குறை கேட்பீர்கள். வெளிப்படையாக உங்கள் கருத்துக்களைச் சொல்லிவிட்டுக் கலங்குவீர்கள். உஷ்ணபீடைகள், கைகால்வலி, இருதய நோ, மூச்சு முட்டு, தலைச்சுற்று என்பன கொடுக்கலாம். வைத்திய உதவிகள் ஆறுதல் தரலாம்.

★ அதிர்ஷ் நாள்: சனி, திங்கள்.

மீனம்: 'காகம் இருக்கப் பனம்பழம் விழுந்த கதை' மாதிரி சில விஷயங்கள் நன்மை, தீமையாக நடக்கும். விதி தன்பக்கம் இழுத்தபடி இருக்கும். வேகத்தை நிதானப்படுத்துங்கள். அல்லது கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டபடி இருக்கும். நீங்கள் செய்வதெல்லாம் கெட்டித்தனம் என எண்ணிச் செயற்படவேண்டாம். உங்களைப் பார்த்தபடி பலர் இருக்கிறார்கள் என்பதனை மறவாதீர்கள். கலைத்தொடர்பு, ஆலயதரிசனங்களால் ஓரளவு ஆறுதலும், நன்மைகளும் அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் வரவு, செலவு, நன்மை தீமை சர்வசாதாரணமாகும். எதிர்நீச்சலடித்தபடி இக்காலத்தில் வாழ்ந்து வருவீர்கள். ஏழரைச் சனியின் தாக்கம் மாறி மாறி நடக்கும். சளி, உஷ்ண பீடைகள், உணர்ச்சிவசப்படுதல், இடுப்பு—கைகால் வலி என்பன இருக்கும். தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், சனி.

# தேசிய இலக்கியத்தை வளர்த்து புது வழிகாட்டிய அரியரத்தினம்

கன்னித் தமிழைக் கண்ணின் மணிபோற்
கருதி வளர்த்துத் தந்த பிரான்
மன்னு மிமய மீழம் வரையு
மக்கள் மதிக்க வாழ்ந்த மகான்
முன்னைப் பொருட்கு முதற் பொருளாம்
மூவா இளமைத் தமிழணங்கைக்
கன்னற் பாகாய்க் கலைவிருந்தாய்க்
கல்கி தந்தான் கவினுறவே.

—என வேறு எவருக்குமே கொடுக்காத மதிப்பையும் கௌரவத்தையும் ஒரு தமிழ் எழுத்தாளனான ''கல்கி'' கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குக் கொடுத்த அமரர் இராஜ அரியரத்தினம், சிறந்த ஒரு சிறுகதை எழுத்தாளர்; தரமான மொழிபெயர்ப்பாளர்; இனிய கவிஞர்; நடுநிலை விமர்சகர்; பன்முகப்பட்ட ஆற்றல் வாய்ந்த பத்திரிகை ஆசிரியர்; சாதி, சமய, அரசியல் வேறுபாடுகளைக் கருதாமல், எழுத்தாளர் அனைவரையும் ஒரே குடும்பமாகக் கருதி நேசித்த உயர்ந்த பண்பாளர்.

முறையே ஈழகேசரி, ஈழநாடு, சிந்தாமணி ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்து ஈழத் தமிழ் இலக்கியத்தின்எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் இதயபூர்வமாகத் தொண்டாற்றியவர் இராஜ. அரியரத்தினம். எனினும் ''ஈழகேசரி'' யின் ஆசிரியராகவே பலரின் நினைவுகளில் அவர் நிலைத்து நிற்கின்றார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் நிகழும் அரசியல், சமுதாய மாற்றங்கள், ஏதோ ஓர் அளவில் இலங்கையையும் பாதிப்பதைப் பலர் அறிவர். இந்திய அரசியல் அரங்கிலே தேசபிதா மஹாத்மா காந்தியடிகளின் பிரவேசம், புதிய வலுவையும் வேகத்தையும்ஏற்படுத்தியது: சமுதாயத்திலே விழிப்புணர்ச்சியையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கியது; கலை, இலக்கியத் துறைகளிற் புத்துயிர்ப்பை ஏற்படுத்திப் புதிய பார்வையை உருவாக்கியது. இந்திய மக்கள் பலருக்குக் காந்தியம் என்பது வாழ்க்கைத் தத்துவமாக ஆகிவிட்டது. காந்தியத்தை வளர்க்கவும் வளப்படுத்தவும் அதன் மகத்துவத்தை மக்களுக்கு நன்கு விளக்கவும் பல்வேறு மொழிகளிலும் பத்திரிகைகள் தோன்றின; ஏற்கனவே நடைபெற்று வந்த பத்திரிகைளும் காந்தியக் கண்ணோட்டத்திலேயே சகல பிரச்சினைகளையும் நோக்கத் தொடங்கின.

இந்தமாற்றங்கள் இலங்கையரின்-முக்கியமாக இலங்கைத் தமிழ் இளைஞர்களின்—கவனத்தை ஈர்த்த வேளையிலே, மஹாத்மா காந்தியடிகள், நேருஜி, கமலாதேவி சட்டோபாதியாய, திரு வி. க. போன்றோரின் இலங்கை விஜயமும் அவர்கள் இங்கு ஆற்றிய சொற்பொழிவுகளும் இந்த இளைஞர்களுக்குப் புத்தூக்கத்தையும் புதிய நோக்கத்தையும் ஏற்படுத்தின. இவற்றின் விளைவாகவே 1930 ஆம் ஆண்டில் திரு. நா. பொன்னையா ''ஈழகேசரி'' வார இதழை வெளியிடத் தொடங்கினார்.

காந்தியத் தத்துவத்தின் பல்வேறு அம்சங்களை நன்கு தெரிந்திருந்தவரும் காந்தியடிகளின் இலங்கை வருகைக்குக் காலாயிருந்தவருமான திரு. ஹண்டி பேரின்பநாயகம் அவர்களுடன் நெருங்கிய நட்புப் பூண்டிருந்த திரு. நா. பொன்னையா, ''ஈழகேசரி'' மூலம்காந்தியத் தத்துவத்துக்கு 'இலங்கை தேசியவடிவம், கொடுக்க முனைந்தார். இலங்கையின் பூரண சுதந்திரம், இன, சமய ஐக்கியம், ... தேசிய ஒருமைப்பாடு, தீண்டாமை ஒழிப்பு, தாய்மொழிக் கல்வி, சுதேசிய பொருளாதார முன்னேற்றம் போன்றவை அந்தத் தேசிய வடிவத்தின் முக்கிய அம்சங்களாயின. ஆரம்பத்தில் திரு. பொன்னையா அவர்களின் இம் முயற்சிக்கு ஈழத்தின் முன்னோடி எழுத்தாளரும் கலாவிமர்சகரும் பின்னாளிலே புகழ்பூத்த ஒலிபரப்பாளருமாகப் பரிணமித்தவருமான திரு. சோ. சிவபாதசுந்தரம் உறுதுணையாக இருந்தார். அவருக்குபின்னர் 1942 ஆம் ஆண்டு தொடக்கம் 1958 ஆம்ஆண்டில் ''ஈழகேசரி'' நிறுத்தப்படும்வரை இப்பணியைத் தொடர்ந்தவர் திரு. இராஜ. அரியரத்தினம் அவர்களே.



உழைப்பதற்காக என்றில்லாமல், ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை வளர்ப்பதற்காக என்றே பத்திரிகை துறைக்கு வந்தவர் திரு. இராஜ. அரியரத்தினம்.

எமது இலக்கியம் எமது நாட்டு மக்களின் வாழ்க்கையை ஒட்டியதாக இருக்க வேண்டும். இந்த மக்களின் எண்ணங்களை, ஏக்கங்களை, நோக்கங்களை அது பிரதிபலிக்க வேண்டும். மக்களின் பிரச்சினைகளை அந்த மக்களின் மொழியிலேகூறி அவற்றிற்கான தீர்வைக் காட்ட வேண்டும். வாழைப்பழத்திலே ஊசியை ஏற்றுவதைப் போல் நல்ல பண்புகளை நயமாகச் சொல்ல வேண்டும்; இலக்கியம் மனித வாழ்க்கையை மேம்படச் செய்தல் வேண்டும்; மனிதனை இழிந்த நிலைக்கு இட்டுச் செல்பவை இலக்கியங்களே அல்ல—என்ற உறுதியான கொள்கையுடையவர் அவர்.

''ஈழகேசரியின்'' ஆசிரியப் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தபோது அதன் அரசியற் கொள்கைகள், இலக்கிய நோக்கங்கள் முதலானவற்றை விளக்கிக் கூறிவிட்டு, எவ்வித குறுக்கீடுமின்றி ஒதுங்கிக்கொண்டார் திரு. நா. பொன்னையா. தன்னுடைய கொள்கைகளும் 'ஈழகேசரி'' யின் கொள்கைகளும் ஒன்றாக இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியும் திருப்தியுமடைந்த திரு. இராஜ. அரியரத்தினம் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் பூரண சுதந்திரத்துடனும் ஓர் எழுத்தாளர் பத்திரிகையாகவே அதை வெளியிட்டார்.

ஏற்கனவே வெவ்வேறு எழுத்தாளர்களின் உள்ளங்களில் அரும்பி, ''ஈழகேசரி'' யிலே துளிர்விட்ட இலங்கைத் தேசிய இலக்கியத்தைச் செழுமையாக வளர்த்தெடுப்பதில் இ. அ.கண்ணும்கருத்துமாக இருந்தார். எழுத்தாளர்களை நேரிற் சந்தித்தும், கடிதம் மூலம் தொடர்பு கொண்டும் அவர்களின்சிறந்த ஆக்கங்களைப் பெற்று ''ஈழகேசரியில்'' வெளியிட்டார்.

**- சிற்பி -**

பாசம்(சம்பந்தன்), மலர்ப்பலி (சொக்கன்), அன்னபூரணி (சச்சிதானந்தன்), இதய ஊற்று (அசின்), விதியின் கை (கனக செந்திநாதன்), கொழுகொம்பு (வ. அ. இராசரத்தினம்), கேட்டதும்நடந்ததும்(தேவன் — யாழ்ப்பாணம்), ஏமாற்றம் (புதுமை லோலன்) ஆகிய ஈழத்து நாவல்களை ''ஈழகேசரி'' யிலே தொடர்கதைகளாக வெளியிட்டார் இ.அ. ஈழத்தின் தனித் தன்மையைக் காட்டும் ஆக்க இலக்கியங்களையே ''ஈழநாடு'', ''சிந்தாமணி'' ஆகிய இதழ்களிலும் வெளியிட்டார்.

இவர் எழுதிய 'வெள்ளம்' என்ற முதற் கதையே இவருடைய மிகச் சிறந்த கதையாகவும் அமைந்து விட்டது. மாரி காலங்களில் இடைக்கிடை ஏற்படும் வெள்ளம் யாழ்ப்பாணத்துக் கமக்காரர்களுக்கு ஏற்படுத்தும் அவலங்களையும் அழிவுகளையும் சுவாபூர்வமாக இக்கதையில் வெளிக்கொணர்ந்திருக்கின்றார். இக்கட்டுரையாசிரியர் தொகுத்த 'ஈழத்துச் சிறுகதைகள்' என்ற தொகுதியில் இடம்பெற்ற இந்தச் சிறுகதை ரஷ்ய மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டமை குறிக்கத்தக்கது.

இவர் எழுதிய ஒரே ஒரு நூல் 'கல்கி பிறந்தார்' என்பது ''இந்நூலைக் கையிலெடுத்து வாசிப்பவர்கள் கல்கியின் எழுத்துக்களை எவ்வளவு சாமர்த்தியமாகக் களவாண்டிருக்கிறேன் என்பதை நொடிப் பொழுதில் உணர்ந்து கொள்வார்கள். அப்படி அவர்கள் உணராத விடத்து எனது முயற்சி படு தோல்வியாகும்.'' எனக் 'கல்கித் தமிழிற்'' குறிப்பிடும் இவர், ''தமிழ் மக்களின் ஆரா அன்புக்கும் மதிப்புக்குமுரிய எனது நண்பரும் செந்தமிழ்ச் செல்வருமான கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், தமிழ் அன்னையை அரியாசன மேற்றி வைத்த பேராசிரியர்களுள் ஒருவர். கதை வளமும் கலை வளமும் நிறைந்த அரிய தமிழ் நூல்களை அவர் எங்களுக்குத் தந்துள்ளார். இந்நூல்களுக்கு எல்லாம் ஒரு வழிகாட்டியாக ஓர் ஆற்றுப்படையாக இச்சிறு நூல் அமைந்திருக்கின்றதென்பது என் தாழ்மையான கருத்து'' எனவும் மிக அடக்கத்துடன் தெரிவித்துள்ளார்.

ஆனால், கல்கியின் நூல்களுக்கு ஆற்றுப் படையாக இருப்பதுடன் அமையாமல், இராஜ அரியரத்தினம் அவரின் எழுத்துக்களைத் தேடிப் படிப்பதற்குத்தூண்டுகோலாகவும் இந்நூல் அமைந்திருக்கின்றது என்பது என்

(XI ஆம் பக்கம் பார்க்க

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளரும், பத்திரிகையாளருமான அமரர் இராஜ. அரியரத்தினம் தாம் பணியாற்றிய மூன்று பத்திரிகைகள் மூலம் எண்ணிறைந்த எழுத்தாளர்களை உருவாக்கினார்.

அவரது 'ஈழகேசரி'க் காலத்தில் எழுத்தாளராகிய மிகப் பலரில் ஒருவரான 'சிற்பி' (சி. சிவசரவணபவன்) 'கலைச்செல்வி' என்றதரமான சஞ்சிகை மூலம்இன்னொரு சந்ததி எழுத்தாளர்களை உருவாக்கியவர். இங்கே இராஜ அரியத்தினம் அவர்களின் பணியை புதிய கோணத்தில் பார்க்கிறார் 'சிற்பி'. (ஆ—ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிக்குப் பெயர்ச்சி...

(1 ஆம் பக்கத் தொடர்)
மேகங்களில் புதைந்துக்கிடக்கும் நீர் மேகங்களை அடையாளம் காட்டி விடும்... கோள்களில் நீர் மற்றும் ஒட்சிசன் (பிராணவாயு) தேடுவதுதானே எப்போதும் பிரதானம்?

சூரியனிடமிருந்து தான் பெறும் வெப்பத்தைப் போல 80 சதத்துக்கும் மேற்பட்ட வெப்பத்தைச் சனிக் கிரகம் அண்ட சராசரத்துக்குள் உமிழ்ந்து கொண்டேயிருக்கிறது. வாயுக் கோளான சனி, பெரும்பாலும் ஐதரசன் மற்றும் ஹீலியம் வாயுவாலேயே ஆக்கப்பட்டுள்ளது. சனி, நாலரை பில்லியன் வருடங்களுக்கு முன்பு, அதன் பிறந்தநாள் முதல், அதன் மையம் நோக்கி இறங்கிக் கொண்டிருக்கும் கனமான ஹீலியன் அணுக்களே இவ்வெப்ப எதிரொலிப்புக்குக் காரணம் என நம்பப்பட்டாலும் இந்நிகழ்வு இன்னும் ருசுப்படுத்தப் படாமலேயே உள்ளது. ஆயினும் காசினி இது சம்பந்தமான ஸ்திரமான முடிவுகளுக்கு வழிகோலும். அது மட்டுமல்ல... காசினி தரவுள்ள இவ்வெப்ப உமிழ்தல் பற்றிய ஆய்வறிக்கைகள், சனி போன்ற முழு வாயுக் கோள்களான நெப்டியூன், புளூட்டோ ஆகியவற்றின் பிறப்பு இரகசியங்களையும் வெட்ட வெளிச்சமாகும் சாத்தியங்கள் அநேகம்.

சனியைச் சுற்றிலுமுள்ள வளையங்கள் பச்சோந்தி போலத் தன் அமைப்பை மாற்றிக் கொண்டேயிருக்கின்றன. இவை சாமானியனுக்கு ஆச்சரியக் காட்சியாகவும் விண்ணியலாருக்குப் புதிராகவும் விளங்குகின்றன. மேடுகள், பள்ளங்கள், தூசுக் கூட்டங்கள் என்ற இவ்வளையக் கலவையின் 90 சதம் இன்னும் புரிந்துகொள்ளஇயலாமலேயே இருக்கின்றன. காசினியில் இணைக்கப் பட்டுள்ள தொலை உணர்வுக் கருவிகள் (Sensors) இவ்வளையங்களை மட்டுமல்ல...வளையங்களுக்கும் அடியில் புதைந்து கிடக்கும் மாபெரும் ஐஸ் பகுதிகளில் மலைகளோ பாறைகளோ பதுங்கிக் கிடக்கின்றனவா என்பதுவரை உணர்ந்து தெரிவிக்கக்கூடும். இதனால் கணிசமான சனிவளைய ரகசியங்கள் வெளிச்சத்துக்கு வரும்.

சனியில் காசினி மேற்கொள்ளவிருக்கும் தனது நான்கு வருட 'சுற்றுலாவில்' வளையங்கள் எத்தனைமுறை தங்களை மாற்றிக்கொள்கின்றன என்பதைத் தொடர்ந்து பதிவு செய்யவுள்ளது. இப்பதிவுகளின் மீதான மனிதனின் ஆய்வு, பின்னர் ஒரு நாள், அதிசயிக்கத்தக்க முடிவுகளைத் தரத்தான் போகிறது!

எனினும் இவ்வளைய ஆராய்ச்சிகளிலேயே முக்கியமானது வளையங்கள் எங்கிருந்து வந்தன என்பதே. சனி வளையங்கள் சனியுடனேயே தோன்றவில்லை. சனியின் வயது 4500 மில்லியன் ஆண்டுகள். வளையங்களோ 200 மில்லியன் வயதுடையவை.

ஆக, ஏதோ ஒருகோளோ அல்லது விண்கல்லோ சனியை நெருங்கியபோது சனியின் கற்பனைக் கெட்டாத காற்றுச் சூழல் அதனைத் தவிடு பொடியாக்க, உடைந்த அதன் பாகங்கள் சனியனைச் சுற்றிச் சுழலத் தொடங்கி வளையங்களாயின. ஆனால் அவ்வாறு உடைந்தது சனி கிரகத்தின் ஆரம்பக் கால நிலவா? அல்லது சூரியக் குடும்பத்தின் வேறேதேனும் ஒன்றா?

இதற்கான விடையைக் காசினி தரவுள்ள சனி வளையம் பற்றிய தகவல்கள், சனி நிலவுகள் பற்றி மற்றும் நமக்குத் தெரிந்த சூரிய குடும்பத்தின் பிற அங்கங்கள் பற்றிய தகவல்கள்—இவ்விரண்டின் ஒப்பீடுகள், பிட்டு பிட்டு வைக்கும். மேலும், பிற ராட்சதக் கோள்களானவியாழன், நெப்டியூன் மற்றும் யுரேனஸ் ஆகிய கோள்களின் வளைய இரகசியத் திரைகளும் இவ்வாராய்ச்சிகளால் நிச்சயம் விலக்கப்பட்டு விடும்.

இது மட்டுமா......? சனியின் பாதுகாப்பு வளையங்களுக்குள்ளே இன்னும் ஏதேனும் நிலவுகள் ஒளிந்து கிடக்கின்றனவா எனும் நுசிகர ஆய்வும் காசினிக்கு விதிக்கப்பட்டுள்ள முக்கியமான கட்டளையாகும். அனைத்துக் கிரகங்களும் காந்த சக்தியின் ஆட்சிமையால் மட்டுமே வாழ்ந்து வருகின்றன. உதாரணமாக, சுழலும் பூமியில் மலைகளும் சமுத்திரங்களும் அப்படியப்படியே நிலைத்திருக்கக் காரணம், பூமியின் காந்த சக்தி ஈர்ப்பு (மற்றும் விலக்கும்) குணங்களே. இது போல அண்ட சராசரத்தில் கோள்களும் நிலைத்திருக்கின்றன. இவ்வழியில் சனிக் கிரகத்தின் காந்த சக்தி பூமியுடையதைப் போல 540 மடங்கு அதிகமாகும்! சனிக் கிரகத்தின் அபரிதமான இக்காந்த சக்தி அதன் நிலவுகளோடும், வளையங்களோடும், மேலும் சூரியனிடமிருந்து ஓயாது வெளியாகிக்கொண்டேயிருக்கும் சூரிய காந்த அலைகளோடும் நிகழ்த்தும் சாகசங்களைக் கண்காணித்து அறிக்கைகள் அனுப்புவதற்கென்றே, சக்தி வாய்ந்த ஒரு காந்தமானி மற்றும் ஸ்பெக்ட்ரோ மீட்டர் காசினியில் பொருத்தப்பட்டுள்ளது.

சனியின் ஏகமாய் விரவியுள்ள மின்னூட்டம் பெற்ற துகள்களோடு காந்த சக்தி புரிந்து கொண்டிருக்கும் இரசாயன மாற்றங்களை நுணுக்கமாகவும் நுட்பமாகவும் விளக்கிக் கூற மற்றும் படம் பிடிக்கத் தேவையான ஆறுக்கும் மேற்பட்ட புகைப் படக்கருவிகளோடு வேற்றுக் கிரகத்துக்குச் சென்றுள்ள ஒரே கலம் எனும் பெருமையும் காசினிக்கு உண்டு.

சனியின் வளையங்கள் மற்றும் நிலவுகளில் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் நீர் எரிமலைகளின் நிகழ்வு சனியின் ஒப்புயர்வற்ற காந்த பலத்தால்தான் என்பது கொள்கையளவில் எழுதப்பட்டுள்ள முடிவுகள். இதோ... இக்கொள்கை, காசினியால் இன்னும் சில வருடங்களில் மெய்ப்பிக்க அல்லது பொய்ப்பிக்கப்பட்டு விடும்.

சனிக் கிரகத்தின் 18 நிலவுகள் பற்றி காசினி நடத்தும் ஆய்வில் கதாநாயக அந்தஸ்து பெறப் போவது 'டைட்டான்'.

டைட்டானின் நிலவை ஆராயவென்றே தன்னோடு தனியாக ஹைகன்ஸ் எனும் குறு விண்கலனைக் காசினி சுமந்து சென்றுள்ளதென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

கிரக நிலவுகளிலேயே நல்ல தடிமனான மேக வெளியைக் கொண்டிருக்கும் ஒரே நிலவு டைட்டான்தான். உயிரின் வாழ்க்கை என்பது தடித்த மேக மண்டலம் இருந்தால் மட்டுமே சாத்தியமாகின்றது. தடித்த மேக மண்டலமே மழை தரும்; சூரியக் கதிர்களின் கொடிய பகுதிகளை வடிகட்டும்; மின்னூட்டம் பெற்ற காந்த சக்தியைத் தான் சார்ந்த கிரகத்துக்கு நிரந்தரமாக்கும். இவையெல்லாம் சாத்தியமாகும் பட்சத்தில், இப்போர்வைக்குக் கீழ உயிரினங்கள் உருவாகி நிலைக்கும். இக்குணங்களோடு டைட்டான் இருப்பதாலேயே விண்ணியலாளரின் கனிந்த பார்வை எப்போதும் இதன் மேலே விழுந்து கொண்டேயிருக்கின்றது.

பூமியிலிருந்து டைட்டான் மீது நிகழும் ஆய்வுகள், இத்தடிமனான மேக வெளி முழுக்க முழுக்க நைதரசனாலேயே ஆக்கப்பட்டுள்ளது என்கின்றன. இது போல வேறேதும் கிரகம் ஏற்கெனவே வாழ்ந்திருக்கின்றதா என்று கடந்த காலத்தில் தேடும் போது, சிறந்த உதாரணமாய் முன் நிற்கின்றது — நம் பூமி...! ஆம் நேயர்களே... இதே கலவையோடும் தடிமனோடும் ஆரம்பக்கால பூமியிலிருந்த மேக மண்டலம்தான், இங்கு உயிர் வாழ்விற்குத் தொடக்கமாய்த் திகழ்ந்தன என்பது ஸ்திரமான இரசாயனவியல் தீர்ப்பு. எனவே, ஹைகன்ஸ், சனிக்கு அனுப்பப்பட்டுள்ள குறு விண்கலன் என்பதைவிட, ஆரம்பக் கால பூமிக்கு எய்யப்பட்டுள்ள கலம் என்பதே மெத்தப் பொருந்தும்.

காசினி தன் ஏழு வருடப் பயண முடிவில், 2004 இல் டைட்டானைக் கடக்கும் போது அதன் மேக வெளிக்குள் ஹைகன்ஸைப் ''போட்டு விட்டு'' சனி நோக்கிப் பறந்துவிடும். நொடிக்கு 300 மைல்கள் எனும் அசுர வேகத்தில் டைட்டானுக்குள் நுழைந்து, தன் முழு வேகம் குறைந்து தவமடைய, ஹைகன்ஸுக்கு மூன்று மணி நேரம் வரை ஆகும். இக்குறுகிய காலகட்டமே அதன் ஆயுசு. பிறகு அது செயலிழந்துவிடும். டைட்டானுள் நுழையும் இந்த மூன்று மணி நேரத்துக்குள் — அதன் மேக வெளியின் வேதியியல் ஆக்கம், குணம் போன்ற அனைத்தையும் ஆராய்ந்து கணக்கிட்டு, சுடச்சுட பூமிக்கு அனுப்பிவிடும்.

காற்றுச் சேகரிப்புக் குடுவை மற்றும் மின் அடுப்பு —இவ்விரண்டும் ஹைகன்ஸின் முக்கிய அங்கங்கள். காற்று வெளிக்குள் இறங்கும் போதே, குடுவையின் உறிஞ்சும் குணம், டைட்டானின் மேக வெளிக் காற்றை உறிஞ்சி மின் அடுப்புக்கு அனுப்பும், அடுப்பு, சேர்ந்த வாயுவைச் சூடேற்றும்; வெளியேறும் ஆவி இறுதி ஆய்வில் ஈடுபடுத்தப்பட்டு அதில் என்னென்ன வேதிப் பொருள்கள் உள்ளன எனும் சேதி காசினிக்கு அனுப்பப்படும். காசினி உடனடியாக அத்தகவலைப் பூமிக்குத் தரும்.

டைட்டான் ஆரம்ப பூமியை ஒத்த அச்சாக விளங்குவதால், அதன் மீதான ஆய்வு, டைட்டானில் உயிர் வாழ்க்கை எப்போது தொடங்கும் எனும் சிதம்பர ரகசியத்தைக்கூட பிட்டு வைக்கலாம். இருந்தாலும் ஆரம்பக் காலப் பூமியின் இரசாயனவியல், நிகழ்கால பூமியின் உயிரியலாக மாறியதெப்படி என்று புலப்படவுள்ள தித்திப்புச் சேதிக்கு, அது இணையாகுமா...?

விளக்க முடியாத அதிசயம் என்னவென்றால், ஆரம்ப பூமியில் காபன் கட்டமைப்பு ஏற்பட்டு உயிர்வாழ்வு சாத்தியமான கரிம இரசாயன மாற்றம்தான் இப்போது விமரிசையாக டைட்டானில் நடந்து வருகிறது. எனினும் இரசாயன மாற்றம் மட்டுமே தொடர்கிறது. உயிர்கள் தோன்றாமல், வெடித்தெழும் எரிமலைகளும் காபனை அள்ளித் தந்து காபன் கட்டமைப்பைத் துரிதமாக்கிக் கொண்டுதானிருக்கின்றன. ஆனால் இப்படிப்பட்ட தருணத்தில் பூமி அனுபவித்த உயிரின் தோற்றம், ஏன் அங்கு மட்டும் சாத்தியமாகவில்லை...? ஈஸ்வரா! உனக்கே வெளிச்சம்!

ஓர் இலக்கு குறிப்பது, அதை அடைவதற்காக மட்டும் அல்ல; ஒன்று பற்றி ஒரு கோணத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு, மறுகோணத்தில் உயிர்ப்புத் தரவே!! நிச்சயம் டைட்டானின்—அதாவது ஆரம்பபூமியின்—மீதான ஆய்வுகள் பூமியில் உயிர்கள் [illegible] அர்த்தங்களைக் கற்பிக்கத்தான் போகின்றன!

★

நன்றி!- தினமணிக்கதிர்

# விடைகள்

VI ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருவாறு:-

## மூளைக்கு வேலை

(1) ஒன்பது.

(2) எட்டு.

(3) மூன்று அடியிலேயே.

(4) அண்ணன் ஒருவர், தம்பிமார் இருவர். ஆக மொத்தம் மூன்று பேர். ஆகவே மூன்று மாம்பழங்களை வெட்டாமல் பகிரலாம் தானே.

(5) இருபத்தியேழு.

(6) பத்துத் தடவைகள். நண்பகல் 12 மணிக்கும் நள்ளிரவு 12 மணிக்கும் இடையில் கணக்கெடுக்கும்போது அவ்விருவேளையிலும் இரு முள்ளுகளும் இணையுமே தவிர, கடக்கமாட்டா.

## வார்த்தை விளையாட்டு

இப்புதிர் தொடர்பாக சில நூறு பிரதிகளில் 'டை' என்ற எழுத்து இரு தடவைகள் பிரசுரமாகி விட்டது. அவற்றில் ஒரு எழுத்தை 'ப' என திருத்தி புதிரைச் செய்யவும். விடைகள்:-

அதி, அவதி, அசதி, அட்டி, அடி, அளி, அடை, அட்டை, அதை, அழகு, அது, அசட்டை, வதி, வசதி, வட்டி, வடி, வளி, தடை, வதை, வகு, வகுதி, வலது, சதி, சட்டி, சளி, சட்டை, சடை, சதை, திட்டி, பதி, பட்டி, படை, படி, பதை, பழம், பகு, பகுதி, பல, பலது, பட்டை, பசளி, குதி, குடி, குட்டி, குட்டை, குளி, துதி, துடை, துடி. துளி.

# தேசிய இலக்கிய..

(X ஆம் பக்கத் தொடர்)
கருத்து.

ஈழகேசரிப் பொன்னையா கண்டெடுத்த கலைப்புத்திரனும், இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே கலையாலும் இலக்கியத்தாலும் கட்டியெழுப்பப்பட்ட உறவுப் பாலத்திற் பயனுள்ள பயணங்களை மேற்கொண்ட இலக்கியத் தூதுவனுமாகிய இராஜ. அரியரத்தினம் தன் ஆணித்தரமான கருத்துக்களைப் பல்வேறு கட்டுரைகளில் வெளியிட்டுள்ளார்; புதுமைப் பித்தனைப் போல் நையாண்டியாகப் பல விஷயங்களைக் கூறியுள்ளார்; கிண்டலும் நகைச்சுவையும் கலந்த கவிதைகளை ஆக்கியுள்ளார். இவற்றைத் தொகுத்து நூலாக்குவது இவர் வளர்த்தெடுத்த எண்ணற்ற எழுத்தாளர்களின் கடமை.

★

# சமாதானம் வருமுன்...

(11ஆம் பக்கத் தொடர்)
குடாநாட்டில் அரசியல் நடவடிக்கைகள் ஒரு பக்கம் ஆரம்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கையில், அரசியல்கொலைகளும் தொடருமாயின் எங்கே கொண்டுபோய் விடுமென்ற கேள்வி மக்களிடம் எழுந்து நிற்கிறது.

★ ★ ★

எதிர்பார்க்கப்பட்டது போல தென்னிலங்கை மாகாண சபைகளின் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் உத்தியோக ரீதியாக அறிவித்து விட்டார்.

தெற்கில் தேர்தல் நடத்துவதானால், தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஆளணி இல்லை என்ற காரணத்தை முன்வைத்து அரசாங்கம் தேர்தலை ஒத்திவைத்துள்ளது.

தேர்தலை ஒத்திவைக்கும் விவகாரம் கடந்த இரு வாரங்களாக தெற்கில் பரபரப்பாக பேசப்பட்ட ஒன்றாகும். இது சம்மந்தமாக உள்நாட்டு அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்காவும், அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி இருந்தனர். எனினும் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலை ஒத்திப் போடுவதற்கு முதலில் வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவித்தது; பின்னர் சில நிபந்தனைகளுடன் தேர்தலை ஒத்திவைக்கலாம் என்ற கருத்து அக்கட்சி வட்டாரங்களில் நிலவியது. அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்க முடிவு செய்திருக்கிறது.

மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைப்பதானால் ஜனாதிபதித் தேர்தலை இந்த வருட இறுதியில் நடத்த வேண்டும் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு நிபந்தனையாகும்.

இந்த நிபந்தனையை தாம் ஏற்றுக் கொள்வதாகவும், ஜனாதிபதித் தேர்தலுக்கு தாம் தயார் எனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்திருந்தார். இது விடயத்தில் மாகாண சபைத் தேர்தலைஒத்தி வைக்க ஐக்கிய தேசியக்கட்சி விட்டுக்கொடுக்க, ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு தயார் என்று ஆளும் கட்சி விட்டுக் கொடுத்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலை தேர்தல் சட்டப்படி ஒத்திவைக்க முடியாது. அதற்கென அரசமைப்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் திருத்தத்தை நிறைவேற்ற வேண்டும். அதே போன்று ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்துக்கு முன்னர் நடத்துவதற்கும் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். அரசமைப்புச் சட்டத்தை மாற்றிய பின்னர் ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு சட்டவாக்க தகுதி கொண்ட அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட அறிவித்தல் எதிர்வரும் நவம்பர் 11 ஆம் திகதிக்கு முன்னர் விடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் நடத்துவது சம்மந்தமாக ஆராய்வதற்காக விசேட அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமாலை நடைபெற இருக்கிறது.

தெற்கின் இந்த அரசியல் நடவடிக்கைகள் யாவும் இனப் பிரச்சினைக்கு இந்த அரசாங்கம்— சந்திரிகா தலைமையிலான அரசாங்கம்—தீர்வு ஒன்றைக் காணுமென்ற நம்பிக்கையை முற்றாக இல்லாமல் செய்துவிட்டன.

எனினும் தேர்தல்களில் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்கும் அவர்களின் பிரதிநிதிகளின் ஆதரவுகளைப் பெறுவதற்கும் தெற்கின் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் தமிழர் சார்புத் திட்டங்களையும் வாக்குறுதி சனையும் தயாரிக்கத் தொடங்கிவிடும்.

தமிழர் பிரச்சினைக்குத்தீர்வும், சமாதானமும், அமைதியும் மீண்டும் சுற்றிக் கொண்டு வந்து—வட்டம் போட்டுக் கொண்டு வந்து— பழைய பூஜ்ஜியத்திலேயே புகுந்து கொள்ளும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தடுத்து பல கோரிக்கைகளை விட்டு

# பி. ஜே. பி. அரசைக் குழப்பும் ஜெயலலிதா!

## அணுவெடிப்புச் சாதனைகளைக்கூட மறக்கும் அளவுக்கு நெருக்கடிகள்

இந்தியாவில் பாரதீய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு பதவிக்கு வந்து மூன்று மாதங்களே பூர்த்தி ஆகி உள்ளன.

ஆனால் இந்த குறுகிய காலத்துக்குள் கூட்டணிக்குள் ஏற்பட்ட நெருக்கடிகள் தீர்ந்தபாடில்லை.

இந்தியா அணுவெடிப்புப் பரிசோதனைகளை நடத்திய போது இந்த நெருக்கடிகள் அந்த ஆரவாரத்தில் ஓரளவு அடிபட்டுப் போய் இருந்தன.

ஆனால் தற்பொழுது அணுவெடிப்புச் சாதனையைக் கூட மறந்துவிடும் அளவுக்கு பிரச்சினைகள் பூதாரகாரமாக உருவெடுத்து வருவதாகத் தெரிகிறது.

### முன்னணியில் ஜெயலலிதா

பாரதீய ஜனதா அரசைப் பொறுத்தவரை பிரச்சினை கொடுப்பதில் முன்னணியில் நிற்பவர் ஜெயலலிதாதான்.

தனது அரசியல் பலத்தை கருவியாகப் பயன்படுத்துகிறார் ஜெயலலிதா.

அரசை ஆட்டிப் படைக்க அவர் முயல்கிறார்.

தி.மு.க. அரசு கலைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் தற்பொழுது இலங்கைத் தமிழர் பிரச்சினையையும் அவர் சேர்த்துக் கொண்டுள்ளார்.

இதன் மூலம் தனது அணியை அவர் பலப்படுத்த முயற்சிப்பதாகத் தெரிகிறது.

அயோத்திப் பிரச்சினையிலும் மத்திய அரசுடன் முரண்பாடான கொள்கையையே ஜெயலலிதா கடைப்பிடிக்கிறார்.

ஜெயலலிதாவின் வரிசையில் மேற்கு வங்காளத்தில் திருணமூல் காங்கிரஸ் தலைவர் மமதா பனர்ஜி, பீஹாரில் சமதாக் கட்சித் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பாரதீய ஜனதா அரசின் தேசியக் கொள்கைத் திட்டத்தையே மாற்றும் விதத்தில் நடந்து கொள்வதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

கருத்து முரண்பாடு ஏற்படலாம் என்று எதிர்பார்த்தே பாரதீய ஜனதா கட்சி தனது தேசிய கொள்கைத் திட்டத்தில் அயோத்திப் பிரச்சினை குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்று கூறப்படுகிறது.

எனினும் அயோத்திப் பிரச்சினையில் ஜெயலலிதா, ஜோர்ஜ் பெர்னாண்டஸ், மமதா பனர்ஜி ஆகியோர் கொண்டுள்ள நிலைப்பாடு அரசை வீழ்த்தத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சியினருக்கு உற்சாகத்தை அளித்து வருகிறது.

பாரதீய ஜனதா அரசு தற்பொழுது எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் இரண்டுதான்.

ஒன்று ஜெயலலிதாவின் தி.மு.க.மாநில அரசு கலைப்புக் கோரிக்கை.

மற்றது அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டும் வேலைகள் ஆரம்பித்திருப்பதாக வெளியான செய்திகளை வைத்து எதிர்க்கட்சிகள் ஆரம்பித்துள்ள எதிர்ப்பு இயக்கம்.

### மமதா பனர்ஜி

மேற்கு வங்காளத்தைப் பொறுத்தவரை மமதா பனர்ஜி தமது கோரிக்கைகளை சிறிது விட்டுக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

மேற்கு வங்காளத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விட்டன என்றும் மேற்கு வங்காள அரசு கலைக்கப்பட வேண்டும் என்றும் மமதா பனர்ஜி கோரிக்கை விடுத்து வந்தார்.

இதனை மத்திய அரசு அலட்சியம் செய்த போது அரசுக்கு அளித்து வரும் ஆதரவை தாம் விலக்கிக் கொள்வதாக அவர் அறிவித்தார்.


ஆனால் மேற்கு வங்காள நிலைமையை நேரில் கண்டறிவதற்காக அரச மட்டத்தில் மூவர் அடங்கிய குழு ஒன்றை அனுப்புவதற்கு பிரதமர் வாஜ்பாய் இணங்கியதை அடுத்து தனது எதிர்ப்பைக் கைவிட்டார் மமதா பனர்ஜி.

மத்திய அரசுக்கு அவர் மீண்டும் ஆதரவு தெரிவித்துள்ளார்.

அவரின் நடவடிக்கை திருணமூல் காங்கிரஸுக்குள் நெருக்கடியை உருவாக்கி வருகிறது.

அதே சமயம் மமதா பனர்ஜியின் நிர்ப்பந்தம் காரணமாக மேற்கு வங்காளத்துக்கு அனுப்பப்பட்ட மத்திய அரசின் மூவர் அடங்கிய குழுவுடன் மேற்கு வங்காள அரசு ஒத்துழைக்க மறுத்து விட்டது.

மத்திய அரசுக்கு தேவை இல்லாத பிரச்சினை ஒன்றை இது உருவாக்கி விட்டிருக்கிறது.




### விரிசல் அடையும் அ.தி.மு.க — பி.ஜே.பி உறவு

தமிழ் நாட்டில் தி.மு.க. அரசு கலைக்கப்பட வேண்டும் என்று ஜெயலலிதா மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார்.

ஒரு தீராத பிரச்சினையாக இது இருந்து வருகிறது.

இந்தப் பிரச்சினையை முன் வைத்து அ.தி.மு.க உறுப்பினர்கள் மக்கள் அவையிலும் மாநிலங்கள் அவையிலும் கடந்த வாரம் தினமும் வெளிநடப்புச் செய்து வந்தனர். இந்தப் பிரச்சினையில் அ.தி.மு.க. விட்டுக் கொடுக்கத் தயார் இல்லை என்பதை இதன் மூலம் அவர்கள் வெளிக்காட்டினர்.

ஜெயலலிதா ஒரு படி மேலே சென்று பாரதீய ஜனதா கட்சித் தலைவர்களுக்கும் தி.மு.க தலைவர் கருணாநிதிக்கும் இடையில் ரகசிய உடன்பாடு இருப்பதாக குற்றஞ் சாட்டினார்.

அரசமைப்பின் 356 ஆவது பிரிவைப் பயன்படுத்தி மாநில அரசைக் கலைக்கப் போவதில்லை என்று இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி திரும்பத் திரும்பச் சொல்லி வருவது ஜெயலலிதாவுக்கு சினத்தை அளித்து வருகிறது.

அது மட்டும் அல்ல ஜெயலலிதாவினதும் அவரது தோழி சசிகலாவினதும் மற்றும் உறவினர்களினதும் பதினொரு கோடி ரூபா (இந்திய ரூபா) அசையும் சொத்துக்களை முடக்கி வைக்குமாறு சமீபத்தில் தனி நீதிமன்றம் அளித்த தீர்ப்பு அ.தி.மு.க— பாரதீய ஜனதா உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தி வருகிறது.

### அ.தி.மு க வுக்குள் பிளவு

அ.தி.மு க வுக்குள் பிளவை ஏற்படுத்த முயற்சிகள் நடப்பதாகவும் ஜெயலலிதா குற்றஞ் சாட்டி வருகிறார்.

ஏற்கனவே தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிக்க அ.தி.மு.க கூட்டணியைச் சேர்ந்த கோபாலசாமி தலைமையிலான மறுமலர்ச்சி தி.மு,க.வும், டாக்டர் ராமதாஸ் தலைமையிலான பாட்டாளி மக்கள் கட்சியும் மறுப்புத் தெரிவித்து வருகின்றன.

தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட வேண்டும் என்பதில் கோபாலசாமியும், ராமதாஸும் ஜெயலலிதாவுடன் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளனர். ஆனால் அதற்காக அரசமைப்பின் 356 ஆவது பிரிவை பயன்படுத்துவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஜெயலலிதா கொடுக்கும் நெருக்கடி காரணமாக பாரதீய ஜனதா அரசு வீழ்ந்து விடுவதை கோபாலசாமியும் டாக்டர் ராமதாஸும், அ.தி.மு.க. எம்பிக்களில் பலரும் விரும்பவில்லை என்று நம்பப்படுகிறது

பாரதீய ஜனதா அரசில் இருந்தவாறு தமது கட்சியைப் பலப்படுத்துவதிலேயே கோபாலசாமியும், ராமதாஸும் கவனம் செலுத்தி வருகின்றனர்.

கடந்த வருடம் திருநாவுக்கரசு தலைமையில் அ.தி.மு.க.வில் பிளவு ஏற்பட்ட போது மாநிலங்கள் அவையைச் சேர்ந்த ஏழு அ.தி.மு.க. உறுப்பினர்கள் திருநாவுக்கரசு பக்கம் சேர்ந்தனர்.

இத்தகைய நெருக்கடி மீண்டும் ஏற்படலாம் என்று எதிர்பார்த்தே தமது எம்.பிக்களிடமிருந்து ஜெயலலிதா ஏற்கனவே இராஜினாமாக் கடிதங்களை வாங்கி வைத்துக் கொண்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

### ஜெயலலிதா அவசரம் காட்டுவது ஏன்?

தமிழ் நாட்டில் தி.மு.க. அரசு கலைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையில் ஜெயலலிதா அவசரம் காட்டுவதற்கு முக்கிய காரணம் ஒன்று இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெயலலிதா மீதான வழக்குகள் பல நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகின்றன.

## உலக உலா

என்.பி.சீலன்

இதில் ஒரு வழக்கிலாவது எதிராக தீர்ப்பு வழங்கப்பட்டால் அடுத்த தேர்தலில் ஜெயலலிதா போட்டியிட முடியாத நிலைமை ஏற்பட்டு விடும்.

அப்படியான ஒருநிலைமை உருவானால் கட்சிக்குள் தனது அதிகார மையத்தைக் கட்டி எழுப்ப முடியாத நிலைமை உருவாகும்.

பாரதீய ஜனதா அரசில் அ.தி.மு.க. நேரடியாக பங்குபற்ற ஜெயலலிதா ஆரம்பத்தில் பின்நின்றதுக்கும் இதுவே காரணம்.

தமது கட்சி உறுப்பினர்களின் நெருங்குதல் காரணமாகவே பாரதீய ஜனதா அரசில் நான்கு அமைச்சர்கள் பதவிகளை ஏற்க அவர் இணங்கினார்.

கட்சி உறுப்பினர்கள் அமைச்சர் பதவியைப் பயன்படுத்தி தம்மைப் பலப்படுத்திக்கொண்டு விடுவார்கள் என்ற அச்சம் ஜெயலலிதாவுக்கு இருந்து வருகிறது.

அ.தி.மு.க. வின் நான்கு அமைச்சர்களில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் காரணமாக சேடப்பட்டி முத்தையா விலகிவிட்டார். சுகவீனம் காரணமாக ஆர். கே. குமாரும் விலகிவிட்டார், இவர்களது இடத்துக்கு அ.தி.மு கவினர் எவரும் இன்னும் நியமிக்கப்படவில்லை.

இந்த நியமனங்கள் பின் தள்ளிப்போவதற்கு பாரதீய ஜனதா—அ.தி.மு.க. உறவில் ஏற்பட்ட விரிசலும் ஒரு காரணம் என்று நம்பப்படுகிறது.

### கருணாநிதியின் அவதானமான போக்கு

கருணாநிதியைப் பொறுத்தவரை மத்திய அரசு சம்பந்தமாக மிக அவதானமான கொள்கையையே கடைப்பிடித்து வருகிறார்.

உள்துறை அமைச்சர் அத்வானியின் உறுதிமொழியில் கருணாநிதிக்கு பெரிதாக நம்பிக்கை இல்லை.

தி.மு.க. ஆட்சி கலைக்கப்படமாட்டாது என்ற உறுதிமொழியை பிரதமர் வாஜ்பாயிடம் இருந்து பெறுவதிலேயே கருணாநிதி அக்கறை காட்டி வருகிறார்.

சமீபத்தில் தமிழ்நாடுசட்டசபையில் கருணாநிதி பேசுகையில் மத்தியில் வாஜ்பாயின் ஆட்சி நீடிக்க தமது ஆட்சியை தியாகம் செய்யவும் தயார் என்று கூறி இருந்தார்.

எனினும் வாஜ்பாய் கருத்து எதுவும் தெரிவியாது தொடர்ந்து நழுவல் கொள்கையை கடைப்பிடித்து வருகிறார்.

### அயோத்தி பிரச்சினை

1992 அயோத்திப் பிரச்சினையில் அத்வானி நடந்து கொண்ட விதமே அவர் மீதான நம்பிக்கையைஇழக்க வைத்திருப்பதாக கூறப்படுகிறது.

பாபர் மசூதி இடிக்கப்பட மாட்டாது என்று அத்வானி தெரிவித்திருந்தார்.

அப்பொழுது உத்தரபிரதேசத்தில் பாரதீய ஜனதாவின் முதலமைச்சராக இருந்த கல்யாணசிங், மசூதியை உடைக்கமாட்டோம் என்ற பிரமாணப்பத்திரத்தை உச்ச நீதிமன்றத்தில் அளித்திருந்தார்.

எனினும் அத்வானி ரத பவனியில் அயோத்தி வந்த போது மசூதி உடைக்கப்பட்டது.

அயோத்தியில் பாபர் மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயிலைக் கட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வெளிவர முன் நடவடிக்கை எடுக்கப்படுவதாக காங்கிரஸ் தலைமையில் எதிர்க்கட்சிகள் தற்பொழுது எதிர்ப்புக் குரல் எழுப்பி வருகின்றன.

அயோத்திப் பிரச்சினை தொடர்பான உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வெளிவர முன்னர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படக் கூடாது என்ற கோரிக்கை வலுப் பெற்று வருகிறது.

அயோத்தியில் இராமர் கோயில் கட்டப்படுவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது என்று ஆர் எஸ். எஸ். தலைவர் ராஜேந்திர சிங்கும், விஸ்வஹிந்து பரிஷத் தலைவர் அசோக்சிங்கும் அறிக்கை விடுத்திருப்பது பாரதீய ஜனதா அரசுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்த இருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்கவே தாம் இந்த விடயத்தில் நடந்து கொள்ளப் போவதாக பிரதமர் வாஜ்பாய் தெரிவித்துள்ள போதிலும், அயோத்திக்கு அருகேயும் ராஜஸ்தான் மாநிலத்திலும் ராமர் கோயிலுக்கான தூண்கள், சுவர்கள் மற்றும் விதானங்கள் தயாரிக்கும் வேலைகள் இரவிரவாக நடைபெறுவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

இவற்றை அயோத்திக்கு கொண்டு சென்று பிரமாண்டமான இராமர் கோயிலைக் கட்டிவிட முடிவாகி இருப்பதாகக் கூறப்படுகிறது.

குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த காலத்திலும் இதே விதமான குற்றச் சாட்டுக்கள் எழுந்தன.

அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்த இந்திரஜித் குப்தா தயாரிப்பு வேலை எதிலும் தலையிட முடியாது என்று தெரிவித்திருந்தார்.

தற்பொழுது நடப்பதும் தயாரிப்பு வேலைகள்தான் என்கிறார் உள்துறை அமைச்சர் அத்வானி.

ஆனால் ஆர்.எஸ்.எஸ். அமைப்புடனும் விஸ்வஹிந்து பரிஷத்துடனும் பாரதீய ஜனதாக் கட்சிக்கு நெருங்கிய தொடர்புகள் இருப்பதாலும் —

மத்தியில் பாரதீய ஜனதா ஆட்சி நடைபெறுவதாலும்— எதிர்க்கட்சிகள் இந்த விவகாரத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன.

தொடர்ந்து வரும் நெருக்கடிகளை எதிர் கொள்வதிலேயே பாரதீய ஜனதா அரசின் எதிர்காலம் தங்கி இருக்கிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org